கல்கியின்

# பொன்னியின் செல்வன்

காமிக்ஸ்



4

கல்கியின்

# பொன்னியின் செல்வன்

காமிக்ஸ்

நிலா காமிக்ஸ்

www.nilacomics.com


வணக்கம்!
இளைய பிராட்டி குந்தவையிடம் சுந்தர சோழ சக்கரவர்த்தி கூறியதை கேட்டீர்கள் அல்லவா! இதிலிருந்து நாம் புரிந்து கொண்டது என்ன? அரசனாக இருந்தாலும், ஆண்டியாக இருந்தாலும் தாங்கள் எண்ணியபடியே அனைத்தும் நடந்துவிடாது என்பதுதான். மேலும் நமக்கு ஒரு விஷயம் தெளிவாக புரிகிறது. சக்கரவர்த்தியின் உடல் நலிவுக்கு, அவரது உடல் காரணம் அல்ல. மனம்தான் காரணம். அதனால்தான் "மனமது செம்மையானால் மந்திரம் செபிக்க வேண்டாம்" என்று அகத்தியர் கூறுகிறார். அகத்தியர் கூறும் இந்த வாக்கியத்தை மட்டும் சரியாக நாம் புரிந்து கொண்டோம் என்றால் நம் வாழ்நாள் முழுவதும் நாம் நோய் நொடி இன்றி வாழலாம்.
சரி வாருங்கள், சுந்தர சோழரின் வாய் மொழியாலேயே அவரின் வரலாற்றை கேட்போம்.


அப்போது ஒரு பெண் அருள்மொழியை காப்பாற்றி நம்மிடம் கொடுத்துவிட்டு மறைந்துவிட்டாள்.
அருள்மொழியை தூக்கியபடி படகின் அருகில் வந்தாள்.
அப்போது அவளை கண்டதும் மூர்ச்சையானேன். குழந்தை கிடைத்த மகிழ்ச்சியில் நீங்கள் அனைவரும் இருந்தீர்கள்.
நீங்கள் அனைவரும் குழந்தையை காப்பாற்றி கொடுத்தது பொன்னித்தாய் என்று எண்ணி அவளுக்கு சிலையெழுப்பியும், அருள்மொழியை பொன்னியின் செல்வன் என்றும் அழைத்து வருகிறீர்கள்.


இலங்கையில் என்னுடன் இருந்த அதே பெண்தான் அருள்மொழியை காப்பாற்றியவள். அவள்தான் என்னை இரண்டு மூன்று வருடகாலமாக இரவில் வந்து பயமுறுத்துகிறாள்.
அவள் பெண்ணல்ல, பேய்! என்னையும், அருள்மொழியையும் கொல்ல வந்தவள். அவள் என்னை இருபத்திநான்கு ஆண்டுகளாய் என்னை பாடாய் படுத்துகிறாள்.
ஆ..... இன்னும் முக்கியமானதை நான் சொல்லவில்லை. அதையும் சொன்னால்தான் என் மனம் ஆறுதல் அடையும். இலங்கையிலிருந்து அழைத்து வர செய்த என் பாட்டன் பராந்தக சோழன்தான், என் இந்த நிலைக்கு காரணம்.


என் பெரியப்பாவின் மனசுக்கு ஈரேழு உலகத்தையும் பரிசாக தரலாம் அல்லவா? அப்படியிருக்கையில் அவரின் புதல்வன் மதுராந்தகன்தானே அடுத்து பட்டத்துக்கு வர வேண்டும். அதுதானே தர்மம்!


என்ன நண்பா? அதுதானே தர்மம்! எனக்காக நீ எவ்வளவு செய்திருக்கிறீர், எனக்காக இதையும் செய்யும். என் பெரிய அன்னையை நான் தஞ்சைக்கு அழைத்ததாக அழைக்க வேண்டும்.


அதுபோல் மதுராந்தகன்தான் அடுத்து பட்டத்துக்கு வர வேண்டும் என்பதை கூறி, நீர்தான் அவரை அதற்கு சம்மதிக்கும்படி செய்ய வேண்டும். சோழ நாட்டு மந்திரி மனது வைத்தால் முடியாதது கூட உண்டா?


எனது பெரியப்பாவின் மகன் மதுராந்தக தேவனுக்கு, அங்குலம் குறையாமல் இந்த ராஜ்யத்தை அவனுக்கு அளிப்பேன். புரிகிறதா..?


சக்கரவர்த்தி! தங்கள் கருத்துக்கு மாறாக தங்கள் புதல்வர்கள் நடக்க மாட்டார்கள்.
வானமாதேவி, மகாராணி.
நீர் உடனே புறப்படும். என் பெரிய அன்னையை எப்படியாவது மதுராந்தகனுக்கு பட்டம் கட்ட சம்மதிக்க செய்யும்.
இல்லையென்றால், என்னால் வர முடியாததை நினைத்து வருந்தியதையும் கூறி, அதனால் அவர் தங்களை தஞ்சைக்கு வரும்படி கேட்டுக் கொண்டார் என்று கூறும்.


அடுத்த நாள் காலை
கருடாழ்வார் மண்டபம்
சுந்தர சோழர் ஆதுரசாலை அடிக்கல் நாட்டு விழா!
குந்தவை பிராட்டி பழையாறையில் பராந்தக சக்கரவர்த்தியின் பெயரில் ஒரு வைத்தியசாலை நிறுவியது போல், தஞ்சையில் தந்தை சுந்தர சோழரின் பேரில் வைத்தியசாலை திறக்க அடிக்கல் நாட்டி, அதற்கான சாஸனம் எழுதி பொதுமக்கள் முன்னிலையில் வாசிக்கப்படுகிறது. அங்கு பொதுமக்கள், கிராமத்தலைவர்கள், ராஜகுலத்தினர், குந்தவை, நந்தினி, பெரிய பழுவேட்டரையர், சின்ன பழுவேட்டரையர் இன்னும் பல முக்கியஸ்தர்களும் கூடியிருந்தார்கள்.
துடும்... துடும்...
துடும்... துடும்...
துடும்... துடும்...


இதனால் சகலமானவர்களுக்கும் தெரிவிப்பது என்னவென்றால்....
இளவரசி இளைய பிராட்டி குந்தவை மக்கள் நலனை கருத்தில் கொண்டு ஆங்காங்கே ஆதுரசாலை அமைத்து வருவது போல், நமது தஞ்சையில் தனது தந்தை சுந்தர சோழ சக்கரவர்த்தியின் பேரில் ஆதுரசாலை அமைக்க, தனது சொத்துக்களை வழங்கி அதற்கான சாஸனம் எழுதியுள்ளார்.
டுடும்... டுடும்...



சாஸனம் படிக்கும் வைபவம் சற்று நேரத்தில் தொடங்க உள்ளது.
இளைய பிராட்டி குந்தவை தலைநகருக்கு வந்துட்டாங்கயில்ல, இனி நமக்கெல்லாம் ஒரே கொண்டாட்டம்தான்.
அனைவரையும் அமைதி காக்கும் படி கேட்டுக் கொள்கிறோம்.
இப்போது ஓதுவார்கள் தேவாரப் பாடல் பாடுவார்கள்.
நான்கைந்து ஓதுவார்கள் தேவாரப் பாடல் பாடுகிறார்கள்.
மந்திர மாவது நீறு
வானவர் மேலது நீறு
சுந்தர மாவது நீறு
துதிக்கப் படுவது நீறு
தந்திர மாவது நீறு
சமயத்தி லுள்ளது நீறு
செந்துவர் வாயுமை பங்கன்
திருஆல வாயான் திருநீறே.


வைபவம் ஒரு பக்கம் நடந்து கொண்டிருக்க, பழுவூர் இளையராணியும், இளைய பிராட்டி குந்தவையும் தங்களுக்குள் இருக்கும் பகைமையை தீர்த்துக் கொள்ள, துவங்கிவிட்டார்கள்.
தேவி! முன்னொரு காலத்தில் சம்ழந்த பெருமாள் இந்த பாடலை பாடித் திருநீறு இட்டுப் பாண்டிய மன்னரின் நோயை தீர்த்தாரல்லவா? இப்போது ஏன் அந்த பாடலுக்கு அந்த சக்தி இல்லை? பாடலுக்கு சக்தியில்லாவிட்டாலும் திருநீற்றுக்கு சக்தி இல்லாமற் போய்விட்டதா?


ஆம் ராணி! அந்த நாளில் தர்மம் மேலோங்கி இருந்தது. அதனால் ழந்திர திருநீற்றுக்கு அவ்வளவு சக்தி இருந்தது. இப்போது பாவம் மலிந்துவிட்டது. அரசருக்கு விரோதமாக சதி செய்யவும் துரோகிகள் நாட்டில் ஏற்பட்டிருக்கிறார்கள். ஆகையால்தான் ழந்திரத்தின் சக்தி குறைந்து மருந்து தேவையாகிவிட்டது!


அப்படியா! அரசருக்கு விரோதமாக சதி செய்கிறார்களா என்ன? அவர்கள் யார்? (ஒன்றும் தெரியாதவள் போல் கேட்டாள்.)
அதுதான் எனக்கும் தெரியவில்லை? யார் என்று கண்டுபிடிப்பதற்கு சில காலம் இங்கேயே இருக்கலாமென்று பார்க்கிறேன்.
நல்ல தீர்மானம் செய்தீர்கள். தேவி! தங்களிடம் ஒன்று கேட்க வேண்டும். இராஜ துரோகத்தை காட்டிலும், பெரிய துரோகம் இன்னதென்று தங்களால் சொல்ல முடியுமா? (வந்தியத்தேவனை மனதில் நினைத்து)


நன்றாக சொல்ல முடியும். கை பிடித்த கணவனுக்கு பெண்ணாய் பிறந்த ஒருத்தி துரோகம் செய்தால் அதுதான் இராஜ துரோகத்தை காட்டிலும் கொடியது. (இப்படி சொல்லிவிட்டு குந்தவை நந்தினியின் முகத்தை உற்று பார்க்கிறாள்.)


தாங்கள் சொல்வது சரிதான்! ஆனால், சம்புவராயர் மகன் கந்தமாறன் இதை ஒப்புக்கொள்ள மாட்டான். எல்லாவற்றிலும் கொடிய துரோகம் சிநேகித துரோகம் என்று சொல்வான்.
ஓஹோ, அப்படி வரியா! இப்போ என் ஆட்டத்தை பார்!
சோழநாட்டு வீரர்கள் ஈழத்தில் நடத்தும் யுத்தத்தை விட, பயங்கரமாக இருக்கிறது இவர்களின் மறைமுக யுத்தம்.


குந்தவையின் முகம் வாடுவதைக் கண்ட நந்தினி மேலும்,
அவனுடைய அருமை நண்பன் ஒற்றனாக மாறிப் போனதும் அல்லாமல், இவனுடைய முதுகில் குத்திவிட்டு ஓடிவிட்டானாம். அவனை பிடித்து வர என் மைத்துனர் ஆட்கள் அனுப்பியிருப்பதாக கேள்வி.
தமிழ் குலத்தில் பிறந்த பெண்கள், தான் கைபிடிக்க போகும் ஆடவனை அவ்வளவு எளிதில் விட்டு கொடுத்துவிட மாட்டார்கள்.
நிச்சயமாக அவன் ஒற்றன்தான் என்பது தங்களுக்கு எப்படி தெரியும்?
அவன் ஒற்றனோ, இல்லையோ? எனக்கு என்ன தெரியும்? சம்புவரையர் மகன் சொல்வதைத்தான் சொல்கிறேன்.
தாங்கள் வேண்டுமானால் நேரில் வந்து, அவனிடமே எல்லா விவரமும் கேட்டு தெரிந்து கொள்ளலாம். அவன் என் அரண்மனையில்தான் சிகிச்சை பெற்று வருகிறான்.
இவள் கூறுவது போலவே, இவள் அரண்மனைக்குச் சென்று சம்புவராயர் மகன் கந்தமாறனை சந்தித்தால் என்ன...?
தடும்... தடும்...


டும்... டும்...
திருமந்திர ஓலை நாயகர், ஓலை வாசிக்கிறார்.
மேலும், எனது தந்தை எனக்கு அளித்த நல்லூர் மங்கலம் கிராமத்தை, இன்றைய நாளிலிருந்து இறையிலிக் கிராமமாக அறிவித்துள்ளேன். நிலங்களை இந்த ஊர் விவசாயிகளே சகல உரிமையுடன் அனுபவித்துக் கொண்டு, தஞ்சாவூர் சுந்தர சோழ ஆதுரசாலை வைத்தியருக்கு,
ஆண்டு ஒன்றுக்கு இருநூறு கலம் நெல்லும், ஆதுரசாலையில் சிகிச்சை பெறும் நோயாளிகளுக்காக தினந்தோறும் ஐம்பது படி பசும் பாலும், ஐந்து படி ஆட்டு பாலும், நூறு இளநீரும் அனுப்ப வேண்டும், என்று கேட்டுக் கொள்ளப்படுகிறது. (இப்படிக்கு சோழநாட்டு இளவரசி குந்தவை பிராட்டி)
டும்... டும்...
டும்... டும்...


இளைய பிராட்டி குந்தவை வாழ்க!
சுந்தர சோழர் வாழ்க!
ஈழங்கொண்ட இளவரசர் அருள்மொழி வாழ்க!
சிவஞான கண்டராதித்தரின் தவப் புதல்வர் மதுராந்தகர் தேவர் வாழ்க!
தஞ்சாவூர் கோட்டை தளபதி காலாந்தக கண்டர் வாழ்க!
வீரபாண்டியன் தலை கொண்ட வீராதி வீரர் ஆதித்த கரிகாலர் வாழ்க!
இதை கேட்டு நந்தினியின் முகம் கருமையாக மாறுகிறது.
தலையை வெட்ட அப்படி என்ன வீரம் வேண்டி இருக்கும்?
சின்ன பழுவேட்டரையர் தனது அண்ணன் பெரிய பழுவேட்டரையரை பார்க்கிறார். பெரிய பழுவேட்டரையர் கடுகடு என்று முகத்தை வைத்துக் கொள்கிறார்.
தனாதிகாரி பெரிய பழுவேட்டரையர் வாழ்க!
ஆதுரசாலை அடிக்கல் நாட்டு விழா இத்துடன் முடிவடைகிறது.


கருடாழ்வார் மண்டபத்திலிருந்து தன் அரண்மனைக்கு வந்து...
ஜனங்களாம், ஜனங்கள்! அறிவற்ற ஆடு மாடுகள்! நாலு பேர் எந்த வழி போகிறார்களோ, அதே வழியில் நாலாயிரம் பேரும் போகும் மூடர்கள்...!
இந்த ஊருக்கு வரியை தள்ளிவிடு, இந்த கிராமத்தை இறையிலி கிராமமாக அறிவித்துவிடு என்று கட்டளையிட்டுக் கொண்டே செல்கிறார்...
சக்கரவர்த்தி சொர்க்கத்துக்கு போவதற்கு முன் சாம்ராஜ்யத்தை பாழாக்கி விட்டுத்தான் போவார் போலிருக்கிறது...!
பழுவேட்டரையரின் கோபக்குரல் கேட்டு கீழிருந்து காவலர்கள் மேலே பார்க்கிறார்கள்.


அண்ணா! இப்படியெல்லாம் சத்தம் போடுவதில் என்ன பயன்? காலம் வரும் வரையில் காத்திருந்து காரியத்தில் காட்ட வேண்டும்.
பழுவேட்டரையரின் கோபக்குரல் கேட்டு நந்தினி அங்கு வருகிறாள்...
நாதா! என்ன நடந்துவிட்டது, ஏன் இந்த கோபம்?
நந்தினியை பார்த்து....
இது என்ன! நான் கேள்விப்படுவது? அந்த அரக்கி இங்கு எதற்காக வர வேண்டும்? அவள் உன்னை அவமானம் படுத்தியதையெல்லாம் மறந்துவிட்டாயா?


இதற்குத்தானா இவ்வளவு கோவம்!.... ஒருவர் எனக்கு செய்த நன்மையையும், நான் மறக்க மாட்டேன். இன்னொருவர் எனக்கு செய்த தீமையையும் மறக்க மாட்டேன்.
அப்படியென்றால் அவள் இங்கு எதற்காக வருகிறாள்?
அவள் இஷ்டம், வருகிறாள்! சக்ரவர்த்தியின் குமாரி என்ற இறுமாப்பில் வருகிறாள்!
என்னால் அவளை பொறுத்துக் கொள்ள முடியாது. அவள் வரும் சமயம் நான் இந்த அரண்மனையில் இருக்க விரும்பவில்லை. எனக்கு மழபாடியில் கொஞ்சம் அலுவல் இருக்கிறது, நான் போய் வருகிறேன்.


நாதா! நானே சொல்லலாம் என்று இருந்தேன். அந்த விஷ பாம்பை என்னிடமே விட்டுவிடுங்கள். அவளுடைய விஷத்தை இறக்குவது எப்படி என்று எனக்கு தெரியும்! நான் பார்த்துக் கொள்கிறேன்...
இனியும் நாம் இங்கிருந்தால் ஏதாவது விபரீதம் ஏற்படும்!
தாங்கள் வரும் போது ஏதேனும் சில அதிசயமான செய்திகளை கேள்விப்பட்டால், அதற்காக தாங்கள் வியப்படைய வேண்டாம்!
சின்ன பழுவேட்டரையர் சட்டென்று...
அண்ணா! எனக்கு கொஞ்சம் வேலையிருக்கிறது, நான் வருகிறேன்.


நந்தினியின் கொஞ்சல் பேச்சை சகிக்க முடியாமல் அங்கிருந்து சென்றுவிடுகிறார் சின்ன பழுவேட்டரையர்.
நந்தினியின் கொஞ்சல் பேச்சை சகிக்க நம்மால் முடியவில்லை. பெரியவருக்கு அவளின் பாசாங்கு தனத்தை எப்படி சொல்லி புரிய வைப்பது என்றே எனக்கு தெரியவில்லை.
இளையவரை கையாள்வது கொஞ்சம் கடினம்தான்! இவரிடம் நாம் கவனமாகத்தான் இருக்க வேண்டும்.
சின்ன பழுவேட்டரையர் இடையில் அங்கிருந்து சென்றதை பொருட்படுத்தாமல்...
அவன் போகட்டும், நீ சொல் என் கண்ணே! என்ன மாதிரி அதிசயமான செய்திகள்?!


குந்தவை பிராட்டி கந்தமாறனை திருமணம் செய்து கொள்ள போவதாகவோ, அல்லது ஆதித்த கரிகாலன் கந்தமாறனுடைய தங்கையை மணக்க போவதாகவோ கேள்விப்படலாம்.
ஐயையோ! என்ன சொல்கிறாய்? அப்படியென்றால் மதுராந்தகனுக்கு பட்டம் கட்டும் நம் யோசனை?
பேச்சு நடந்தால், காரியமே நடந்துவிடுமா என்ன? அப்படியே இருந்தாலும் பெண்ணைப்போல் நாணிக்கோணி நடக்கும் மதுராந்தகனுக்கு பட்டம் கட்டுவதற்காகவா... நாம் இவ்வளவு பாடுபடுகிறோம்?
என்று கூறி தன் கரிய கண்ணினால் பழுவேட்டரையரை பார்க்கிறாள்.


ஒரு நாட்டின் சக்கரவர்த்தினியாக இருக்க அனைத்து தகுதியும் உன்னிடம் இருக்கிறது.
சுந்தர சோழ சக்கரவர்த்தியின் செல்வ புதல்வி, இளைய பிராட்டி குந்தவை தேவி, பெரிய பழுவேட்டரையர் அரண்மனைக்கு வருகிறார். பராக்! பராக்!!
அந்த ராட்சஸி வருவதற்குள், நான் இங்கிருந்து புறப்படுகிறேன்.
அந்த விஷப் பாம்பை நான் பார்த்துக் கொள்கிறேன். நீங்கள் சென்று வாருங்கள்.....


பழுவேட்டரையர் கோபமாக மழபாடிக்கு செல்ல, கடம்பூர் இளவரசர் கந்தமாறனை பார்க்க இளைய பிராட்டி குந்தவை பழுவூர் அரண்மனைக்கு வருகிறாள்.
குந்தவை வரும் நேரத்தில், தான் அங்கு இருக்க வேண்டும் என்பதற்காக கந்தமாறன் இருக்கும் அறைக்கு வந்து காத்திருக்கிறாள் நந்தினி.


கந்தமாறரே, தங்களைக் காண இளவரசி வரப்போகிறார்!


யாரு! இளைய பிராட்டி குந்தவையா? என்னை பார்க்க வருகிறாரா?
!
அதில் என்ன சந்தேகம்? ஒரு ராஜகுமாரனை பார்க்க, ஒரு ராஜகுமாரிதான் வருவாள்.
என்று பொடி வைத்து கூறினாள்.
அவர் ஏன் என்னை பார்க்க வர வேண்டும்? அவரை நான் சந்திப்பதாக இல்லை.


சுந்தர சோழ சக்கரவர்த்தியின் செல்வ புதல்வி, சோழ நாட்டின் தவ புதல்வி, இளைய பிராட்டி குந்தவை பராக்...! பராக்...!
ஐயா! நான் சென்று இந்த ராஜகுமாரன் சார்பாக அந்த ராஜகுமாரிக்கு வரவேற்பு உபசாரங்கள் செய்து அழைத்து வருகிறேன்.
தாங்கள் சற்று நேரம் அமைதி காத்தருளுங்கள். (என்று மீண்டும் கந்தமாறனை சீண்டிவிட்டு செல்கிறாள்.)
இளைய பிராட்டி வரப்போகிறாரா? என்ன என் பாக்கியம்!


அப்போது கந்தமாறன் வாசனை திரவியங்களை (ஜவ்வாது) எடுத்து தனது அங்கங்களில் தடவிக் கொள்கிறான்.
ஆகா! என்ன மணம்...!
என்ன மணம்...!


அவர்கள் வரும் காலடிச் சத்தம் கேட்டு...
ஜல்... ஜல்...
மீண்டும் பழையபடி படுத்துக் கொள்கிறான்.
ஆஹா! இளைய பிராட்டி தம்மை பார்க்க வருவார் என்று தெரிந்திருந்தால் இன்னும் பல இடங்களில் குத்துகள் வாங்கியிருக்கலாமே!!
குத்தியவன் யாராயிருந்தாலும் மார்பிலே குத்தியிருக்கக் கூடாதா? இப்படி முதுகிலே குத்திவிட்டானே! இந்த நேரத்திலா இளைய பிராட்டி நம்மை வந்து பார்க்க வேண்டும்.
வீரர்கள், அக்காலத்தில் மார்பில் காயப்படுவதை பெருமையாகவும், முதுகில் காயப்படுவதை அவமானமாகவும் கருதினார்கள்.


இளைய பிராட்டி குந்தவையை, கந்தமாறனின் அறைக்கு இளையராணி நந்தினி அழைத்து வருகிறாள்.
தனாதிகாரியை எங்கே காணோம்?
அவருக்குத்தான் ஓய்வு ஏது? அவர் நாடு நாடாக சென்று வரி வசூலித்தால்தானே, நாமெல்லாம் நம் இஷ்டப்படி செலவழிக்க முடியும். (என்று குத்தி காட்டினாள்.)
சக்கரவர்த்தியின் தவப் புதல்வியே வர வேண்டும்! வர வேண்டும்!
தாங்கள் எழுந்திருக்க வேண்டாம். அப்படியே ஓய்வு எடுத்தபடியே இருக்கலாம். இளைய பிராட்டி தவறாக எடுத்துக் கொள்ளமாட்டார்.


கந்தமாறரே! தாங்கள் எப்படி இருக்கிறீர்கள்? தாங்களின் காயம் எப்படி இருக்கிறது?
அதெல்லாம் ஒன்றும் இல்லை. பழுவூர் ராணியின் வற்புறுத்தலினாலே இங்கு ஓய்வு எடுத்து வருகிறேன்.
இளவரசி! சம்புவராயரின் குலத்துக்கு இதெல்லாம் ஒரு காயமா? போர்க்களத்தில் இதைவிட பெரிய காயங்களை அடைந்திருக்கிறேன்.
இதோ பாருங்கள்!
இதோ பாருங்கள்!
என்று பல இடங்களில், தான் பட்ட காயத்தை காண்பிக்கிறான்.


இதோ பாருங்கள்!


இதோ பாருங்கள்!


ஆமாம்! இந்த காயம் தங்களுக்கு எப்படி ஏற்பட்டது?
அதை ஏன் கேட்கிறீர்கள்? சிநேகிதன் என்று நம்பி ஒருவனை வீட்டுக்கு அழைத்தேனே, அதன் பாவம்!


அந்த சிநேகித துரோகி என்னை மார்பிலே குத்தி கொன்றிருந்தால் கூட கவலையில்லை, மறைந்திருந்து முதுகிலே குத்திவிட்டு போய்விட்டானே!
குந்தவை பதில் ஏதும் கூறாமல் யோசித்தபடி இருக்கிறாள்.
இவர் கூறுவதை பார்த்தால் அவரிடம் நாம் ஏமாந்துவிட்டோமா? இவ்வளவு நீசத்தனமான செயலை செய்யக்கூடியவரா அவர்? இல்லை, இல்லை, அவர் ஒருபோதும் இவ்வாறு செய்யக் கூடியவர் அல்ல!
இவரின் கதை எவ்வளவு தூரம் செல்கிறது என்று பார்ப்போம்!
தோளிலோ, மார்பிலோ குத்திக் காயப்படுத்தி இருந்தாலும், அவனை மன்னித்து விட்டிருப்பேன்.


இவன் விடும் கதையைக் கேட்டு, நந்தினி வேண்டுமென்றே கந்தமாறனின் முதுகில் மருந்தை தடவுகிறாள்.
ஸ்,ஸ்,ஸ்
ஆ! ஆ...... ஆங்!
பாருங்கள் தேவி! கடம்பூரில் தங்கிய அன்றே அவன் என்னை ஏமாற்றிவிட்டான். இங்கு வந்து ஏதோ பொய் அடையாளத்தை காட்டி உள்ளே நுழைந்திருக்கிறான்.


முத்திரை மோதிரத்தை கொடுத்தவளே இவள்தான்! ஆனால் ஒன்றுமே தெரியாதவள் போல் முகத்தை வைத்துக் கொள்வதை பார்!
நந்தினி ஒன்றும் தெரியாதவள் போல் இருக்கிறாள்.
ஆதித்த கரிகாலரிடமிருந்து ஓலை கொண்டு வந்ததாக புளுகியிருக்கிறான். அத்துடன் விட்டானா! தங்களுக்கும் ஓலை கொண்டு வந்திருப்பதாக சொல்லவே கோட்டை தலைவருக்கு சந்தேகம் வந்துவிட்டது.
அவன் ஒற்றனாயிருக்கலாம் என்று எண்ணி, அவனை காவலில் வைக்கச் சொல்லியிருக்கிறார்.
மாட்டிக் கொண்டானா அவன்?


எங்கே.... அவன் தான், தப்பி விட்டானே!
காலாந்தகரின் காவலில் இருந்து தப்ப முடியுமா! என்ன?
எப்படியோ தப்பித்துவிட்டானே! அது விஷயத்தில் அவனுடைய சாமர்த்தியத்தை மெச்சத்தான் வேண்டும்.
தாதிப் பெண் ஓடி வந்து மூச்சிரைக்க...
ராணி ஒற்றன் அகப்பட்டுக் கொண்டானாம்! நம் வீரர்கள் ஒற்றனை கட்டி இழுத்து வருகிறார்கள்.



தஞ்சையின் வீதியில் ஒருவனின் கைகளைக் கட்டி, அவனை வீதி வழியாக இழுத்து வருகிறார்கள்.
கடவுளே! இன்று எனக்கு ஏன் இவ்வளவு சோதனை?
அது சற்று தொலைவாக இருப்பதால் வருவது இன்னார் என்பது தெளிவாக தெரியவில்லை. அப்போது கந்தமாறன் மட்டும் கூர்ந்து கவனித்துவிட்டு,
அதானே பார்த்தேன்! வந்தியத்தேவனாவது இவர்களிடம் அகப்பட்டுக்கொள்வதாவது. என் சிநேகிதன் இந்திரஜித்தனாயிற்றே! என்னையே ஏமாற்றியவன் இந்த ஆட்களிடமா சிக்கிக் கொள்வான்.
அது நாம் அனுப்பிய வைத்தியர் மகனாயிற்றே!
பழுவேட்டரையரின் அரண்மனைக்கு அருகில் வந்ததும் குந்தவையை பார்த்து பினகாபாணி, ஏதோ கூற வாயெடுக்கிறான். அதற்குள் காவலர்கள் அவனை இழுத்துச் செல்கிறார்கள்.


பினாகபாணியை பார்த்த குந்தவை கோபத்துடன்..
இந்தக் கிழவர்களுக்கு அறிவு மழுங்கிப் போய்விட்டது. யாரை கண்டாலும் சந்தேகம்! இந்த வைத்தியரின் மகனை நான் அல்லவா கோடிக்கரைக்கு மூலிகை கொண்டு வர அனுப்பினேன். இவனை எதற்காக பிடித்து வந்திருக்கிறார்கள். இப்போதே போய் உங்கள் மைத்துனரை கேட்க போகிறேன்.
ஒஹோ! தாங்கள் அனுப்பிய ஆளா இவன்? ஆமாம், மூலிகை கொண்டு வர இவனை மட்டும் அனுப்பினீர்களா? இல்லை இன்னொரு ஆளையும் அனுப்பினீர்களா? (நந்தினி)
இன்னொரு ஆளையும்தான் இவனுடன் அனுப்பினேன்.
ஆஹா! இப்போது எனக்கு எல்லாம் புரிந்துவிட்டது.
என்ன புரிந்துவிட்டது?
அவன்தான் ஒற்றன். சக்கரவர்த்திக்கு ஓலை கொண்டு வந்திருப்பதாகத்தான் இங்கேயும் சொன்னானாம்.


ஒற்றனாவது கிற்றனாவது, அவன் தமையனிடமிருந்து ஓலை கொண்டு வந்தவன்.
எனக்கென்ன தெரியும்? அவனும் சந்தேகப்படும்படியாகத்தான் நடந்திருக்கிறான். இல்லாவிடில் இந்த கோட்டையை விட்டு இரவுக்கிரவே இரகசியமாக ஏன் தப்பி ஓட வேண்டும்?
இந்த சாது மனிதருடைய முதுகில் எதற்காக குத்திவிட்டு போக வேண்டும்?
இவருடைய முதுகில் அவன்தான் குத்தினான் என்பதை நான் நம்பவில்லை.
அப்படி அவன் குத்தியிருந்தால், இவரை மறுபடி தூக்கிக் கொண்டு போய் அந்த ஊமையின் வீட்டில் ஏன் சேர்த்து விட்டு போக வேண்டும்?
தாங்கள் கூட இருந்து பார்த்தது போல் சொல்கிறீர்களே? என்னமோ அந்த ஒற்றன் பேரில் தாங்களுக்கு அவ்வளவு பரிவு! அவனிடம் ஏதோ மாய சக்தி இருக்க வேண்டும்.
ம்... இவள் அல்லவா பழுவேட்டரையரையும், மற்றவரையும் மோகன சக்தியில் மயக்கி வைத்திருக்கிறாள்!
என்று கூறியவுடன் குந்தவை சின்னதாக கோபத்துடன் பார்க்கிறாள்.


அவனை இவர் இன்னும், தன் சிநேகிதன் என்றல்லவா சொல்கிறார்!
எப்படியிருந்தால் என்ன? போன உயிர் திரும்பி வரவா போகிறது. பாவம்...!
நந்தினி அப்படி கூறியதும், இளைய பிராட்டிக்கு கோபம் வருகிறது. ஆனால், அதை வெளிக்காட்டிக் கொள்ளாமல்....
அப்படி ஒரு நாளும் நடக்காது! ஒரு நாளும் நடந்திராது..!
குந்தவை பதட்டத்துடன் இருப்பதை பார்த்த கந்தமாறன்.
கந்தமாறனை, நந்தினியின் மோகன சௌந்தர்யம் போதைக்குள்ளாக்கிய போதிலும், அவள் இன்னொருவரின் மனைவி என்பதனால் தன் மனதுக்கு அரண் போட்டுக் கொண்டான். ஆனால் இளைய பிராட்டி குந்தவை அப்படியில்லை. திருமணம் ஆகாதவள். இந்த சூழ்நிலையில் அவன் என்ன செய்ய முடியும்? குந்தவைக்கு ஆதரவாக பேசினாலாவது ஒரு வேளை குந்தவையின் மனதில் இடம் கிடைத்தாலும் கிடைக்கும்.


இளவரசி! இந்த ஆட்களிடமெல்லாம் அவன் ஒருநாளும் அகப்பட்டிருக்க மாட்டான்.
இப்போது அகப்பட்டிரா விட்டால் என்ன? இன்னொரு நாள் அகப்படப் போகிறான்.
என்று கூறி குந்தவையின் மனதை புண்படுத்தினாள் நந்தினி.
நாளை நடக்கப்போவது யாருக்கு தெரியும்? சக்கரவர்த்தி நோயால் படுத்தாலும் படுத்தார், ராஜ்யமே தலை கீழாய் போய்விட்டது. மூலிகை கொண்டு வருவதற்கென்று நான் அனுப்பிய ஆட்களை பிடிப்பதற்கு இவர்களுக்கு என்ன அதிகாரம்? இதோ என் தந்தையிடமே போய் கேட்டு விடுகிறேன்.
இளவரசி! நோயினால் மெலிந்திருக்கும் சக்கரவர்த்தியை இது விஷயமாக ஏன் தொந்தரவு செய்ய வேண்டும். நேராக தாங்கள் என் மைத்துனரையே கேட்டுவிடலாமே!


இந்த சோழ சாம்ராஜ்யத்தில் இளைய பிராட்டியின் விருப்பத்துக்கு மாறாக நடக்க யார் துணிவார்கள்? (நந்தினி)
இவளிடம் பேசி வெற்றி பெற முடியாது. நாம் காரியத்தில் காட்ட வேண்டும் இவளிடம்.


பாவம் கந்தமாறன்! இடையில் வந்து மாட்டிக் கொண்டான். இந்த இரண்டு பெண் புலிகளுக்கும் இன்று நடந்த போராட்டத்தில் நந்தினியே வெற்றி பெற்றாள். குந்தவையின் நெஞ்சில் பல காயங்கள் ஏற்பட்டன. அதை வெளிக்காட்டாமல் இருக்க குந்தவை பல முயற்சிகள் செய்ய வேண்டியிருந்தது.


காயம் பட்ட பெண் புலியின் சீற்றத்தை கேட்க வேண்டுமா என்ன? சின்ன பழுவேட்டரையரை சந்திக்க வருகிறார் இளைய பிராட்டி குந்தவை.
சோழ நாட்டின் திருமகளே! வருக! வருக!
கோட்டை தளபதிக்கு என் வணக்கம்!
சின்ன பழுவேட்டரையர் இளைய பிராட்டியை வரவேற்று தங்களது சித்திர மண்டபத்திற்கு அழைத்து வருகிறார்.
இந்த சித்திர மண்டபத்துக்கு இணையான சித்திரம், சோழ தேசத்தில் வேறொன்றும் இல்லை!
என்னை போன்றவர்களுக்கு என்ன தெரியும்? சித்திரங்களின் அற்புதங்கள் தங்களுக்கு அல்லவா தெரியும்!
சின்ன பழுவேட்டரையர் அங்குள்ள சித்திரங்களில் வரைந்துள்ள நிகழ்வுகளையும், ஒவியத்தில் உள்ளவர்களின் கீர்த்தியையும் ஒவ்வொன்றாக விளக்கத் தொடங்குகிறார்.


இந்த ஓவியம் எனது பூட்டன், முதலாம் ஆதித்தனுக்கு மணிமகுடத்தை சூட்டுவதை எடுத்து காட்டுகிறது.


இதோ போர்க் கோலம் பூண்டு வரிசையின் முன்னால் இருப்பவர் என் பாட்டன்.


தக்கோலம் போரில் இராஜாதித்தர் யானை மேல் துஞ்சிய காட்சி.
ஐயா! பழுவேட்டரையர்கள் பரம்பரை பரம்பரையாக, சோழ குலத்துக்கு ஒப்பற்ற சேவை புரிந்திருக்கிறார்கள் என்பதை நன்றாக இந்த சித்திரங்கள் கூறுகின்றன.
அம்மையே! அது எங்கள் பாக்கியம்.


அந்த சேவைக்கெல்லாம் ஈடாகக் கூடியது இந்த சோழ சாம்ராஜ்யம்தான் என்பதில் சந்தேகமில்லை...
தாயே! இது என்ன வார்த்தை?


இருந்தபோதிலும் சக்கரவர்த்தியின் ஆயுட்காலம் முடியும் வரை தாங்கள் காத்திருக்கலாம் அல்லவா?
அம்மையே! இது என்ன?
சாம்ராஜ்ய அதிகாரங்களை கைப்பற்றுவதற்கு இவ்வளவு அவசரப்பட வேண்டுமா?
தாயே! தங்களின் சொல்லம்பினாலேயே என்னை எமலோகத்துக்கு அனுப்பிவிடுவதென்று உத்தேசமா?
அய்யா! காலாந்தகரிடம் அணுக எமனே பயப்படுவானே! என் போன்ற பேதை பெண்ணால் தங்களை என்ன செய்து விட முடியும்?
அம்மணி! நான் என்ன தவறு செய்தேன்? ஏன் இவ்வளவு உக்கிரம்?
தங்கள் தவறை பற்றி சொல்ல நான் யார்? என்னுடைய தவறு இன்னது என்பதைத்தான் தாங்கள் சொல்ல வேண்டும்.


தாங்கள் ஏந்த தவறும் செய்ததாக நான் குற்றம் சுமத்தவில்லையே!
என் தந்தையின் நோயை தீர்ப்பதற்கு, மூலிகை கொண்டு வருவதற்காக, நான் ஆள் அனுப்பியது ஒரு குற்றமா?
இல்லை அம்மணி! அது ஒரு நாளும் தவறாகாது.
இன்று வைத்தியர் மகனை கயிற்றினால் கட்டி, வீதியில் தாங்கள் ஆட்கள் இழுத்துக் கொண்டு வந்தார்களே! அதற்கு கட்டளை இட்டது தாங்கள்தானே?
ஆம் தாயே! ஆனால், அவன் ஒற்றன் என்பது தங்களுக்கு தெரியுமா?
பழையாறை வைத்தியர் மகனாவது, ஒற்றனாவது? அந்தக் கதையை என்னை நம்ப சொல்கிறீரா?


தாயே! அவனே ஒப்புக் கொண்டிருந்தால் நம்ப வேண்டியதுதானே?
அவனே ஒப்புக்கொண்டானா? அவன் பெரிய மூடன். ஏதாவது உளறியிருப்பான். அவனுடன் இன்னொரு ஆளையும் அனுப்பினேன். அது உங்களுக்கு தெரியும் அல்லவா?
தெரியும் தாயே! தெரியும். வந்தியத்தேவன் என்னும் பெயருடைய வாலிபன். அவன் தாங்களை சரியாக ஏமாற்றியிருக்கிறான்.
அவன் என் தமையனிடமிருந்து ஓலை கொண்டு வந்தவன்.
அவன் ஒற்றன் இல்லாவிட்டால், குடந்தை சோதிடரிடம் போய் சக்கரவர்த்தியின் ஜாதகப் பலனை பற்றி ஏன் கேட்க வேண்டும்?
ஐயா! ....
எல்லாம் தெரியும் தாயே! தாங்கள் கூட குடந்தை சோதிடரைப் பார்த்து வந்தீர்கள். அது வேறு விஷயம். ஒரு வேளை அவன் பகையரசனின் ஒற்றனாயிருக்கலாம்.
ஐயா! இது தாங்கள் ஊகம்தானே?


தாங்கள் சொல்வது போலவே வைத்து கொள்ளலாம். சரி! அப்படியென்றால் அவன் சம்புவரையரின் மகனின் முதுகில் ஏன் குத்திவிட்டு தப்பி ஓட வேண்டும்?
தாங்கள் கூறுவதை நான் ஒப்புக் கொள்கிறேன். ஒன்று அவன் தஞ்சை கோட்டைக்குள் தாங்கள் அனுமதியில்லாமல் உள்ளே எப்படி வந்தான்?
இரண்டு சம்புவராயரின் மகனுக்கு அந்த நேரத்தில் அங்கு என்ன வேலை?
யோசிக்கிறார்.
அவன் பெரியவர் கொடுத்தார் என்று, முத்திரை மோதிரத்தை காண்பித்து, ஏமாற்றி உள்ளே நுழைந்துவிட்டான்.
மூன்று அப்படியென்றால் அவனுக்கு பழுவூர் முத்திரை மோதிரத்தை அளித்தவர் யார்?
அதுதான் எனக்கும் புரியவில்லை!
என்று முழிக்கிறார் தலை குனிந்தபடி...
முதலில் அதை கண்டுபிடிக்காமல் உங்கள் ஆட்கள் என்ன செய்கிறார்கள்?
ஒற்றனாம் ஒற்றன்! நல்லவன் யாரு, கெட்டவன் யாரு தெரியாத இந்த கிழவர்களுக்கு....
அந்த முத்திரை மோதிரம் அவனுக்கு யார் கொடுத்திருப்பார்கள்?
ம்.... வேறு யாராக இருக்கும், எல்லாம் அவள்தான்!


ஐயா! ஒற்றன் எப்படியாவது போகட்டும். வைத்தியர் மகன் குற்றமற்றவன் என்பது நிச்சயம். அவனை உடனே விடுவித்தாக வேண்டும்.
அம்மணி! அவன் ஒற்றன் இல்லாவிட்டாலும், ஒற்றனுக்கு துணை புரிந்திருக்கிறான். ஆகையால் அவனை விடுதலை செய்ய இயலாது.
அவனை நான்தான் மூலிகை கொண்டு வர அனுப்பினேன். ஆகையால் அவனை விடுதலை செய்தேயாக வேண்டும்.
அந்தப் பொறுப்பை நான் ஏற்றுக் கொள்ள சித்தமாயில்லை. அதுவும் நாலா புறமும் அபாயமும், சூழ்ச்சியும் சூழ்ந்திருக்கும் இந்த நிலையில்.
என்று கை விரித்துவிட்டார் சின்ன பழுவேட்டரையர்.
இப்போது நாம் என்ன செய்வது? சரி! கடைசி ஆயுதத்தை பயன்படுத்த வேண்டியதுதான்.
ஐயா! சக்கரவர்த்தியின் கட்டளை வந்தால், வைத்தியர் மகனை விடுதலை செய்வீரா?


அம்மணி! இதற்கு சக்கரவர்த்தியின்
கட்டளை தேவையில்லை. இளைய
பிராட்டியின் விருப்பம் என்னவோ
அதுவே சக்கரவர்த்தியின் வேத
கட்டளை என்பது உலகமறிந்தது.
இவ்வாறு கூறிக்கொண்டே சின்ன பழுவேட்டரையர் சிறைச்சாலை
சாவியை எடுத்து குந்தவையிடம் கொடுக்கிறார்.
தாங்களே சென்று கதவை
திறந்து விடுதலை
செய்யுங்கள். இன்னும்
யாரை வேணுமோ
அவர்களையும் தாராளமாய்
விடுதலை செய்யுங்கள்.
அதனால் வரும் லாப
நஷ்டத்திற்கு நான்
பொறுப்பல்ல.
சாவியை பெற்றுக் கொண்டு.....
ஆகட்டும் ஐயா! வரும்
லாப நஷ்டங்களுக்கு
நானே பொறுப்பேற்றுக்
கொள்கிறேன்.


என்று கோபித்துவிட்டு அங்கிருந்து செல்ல, சின்ன பழுவேட்டரையர்....
அம்மணி!
இந்த சோழ சாம்ராஜ்யத்துக்கு ஏதாவது பெருந்தீங்கு நேர்ந்தால், அது இரண்டு பெண்களினால்தான்.
சற்று கோபமாக யார் என்பது போல் பார்க்கிறார்.
ஒன்று சுந்தர சோழரின் செல்வ புதல்வி, மற்றொன்று பழுவூர் இளையராணி நந்தினி.
ஒரு புன்னகை புரிந்து
அவளோடு என்னை ஒப்பிடுகிறீர்கள்! சோழ சாம்-ராஜ்யத்தின் சர்வாதிகாரி எங்கே? நான் எங்கே?
நல்ல வேளை, பெரிய பழுவேட்டரையர் இங்கில்லை. இங்கிருந்திருந்தால், தாங்கள் இப்படி சொன்னதுக்கு தேசப் பிரஷ்டம் செய்துவிடுவார்!
ரொம்ப நல்லதாய் போயிற்று! அதற்காக நான் காத்திருக்கிறேன்.
சிறைச்சாலையின் சாவியை பெற்றுக் கொண்டு அங்கிருந்து செல்கிறாள் இளைய பிராட்டி குந்தவை.


குந்தவை வைத்தியர் மகன் பினகாபாணியை விடுவிப்பதற்காக வானதியையும் உடன் அழைத்துக் கொண்டு சிறைச்சாலைக்கு வருகிறார். ஆனால், இவர்களுக்கு முன்னதாகவே பழுவூர் இளையராணியின் ஆட்கள் பினகாபாணியை விடுவித்துச் சென்று விடுகின்றனர்.
சிறைச்சாலைக்குள் தங்க நாணயங்கள், அறைகளில் குவியல்களாக காணப்படுகிறது. சிறைச்சாலைக்குள் தங்கத்தை உருக்கி நாணயமாக செய்யும் தொழிற்சாலையும் அதனுள் அடங்கி இருக்கிறது.


பணி முடிந்து தொழிலாளர்கள் வீட்டுக்குச் சென்றுவிட்டார்கள்.


அக்கா! புலிகள் ஏன் இங்கு கட்டப்பட்டிருக்கின்றன.
சிறையில் அடைக்கப்பட்டிருக்கும் கைதிகள் தப்பி செல்லாமல் இருப்பதற்கு.
சிறையில் அடைக்கப்பட்டிருக்கும் கைதிகள் தப்பிச் செல்ல வேண்டுமென்றால் இந்த புலி கூண்டு வழியாகத்தான் தப்பிச் செல்ல வேண்டும். இரவு நேரத்தில் காவலர்கள் குறைவாக இருப்பார்கள். அதனால், இரவு நேரங்களில் புலிகளை அவிழ்த்து விட்டுவிடுவார்கள்.


சிறைசாலைக்குள் பல கைதிகள் இருந்தாலும், அதில் முக்கியமாக பைத்தியக்காரன் இளவரசிகளின் கவனத்தை ஈர்க்கிறான்.
அங்க இருக்க வேண்டியவன், இங்க இருக்கான். இங்க இருக்க வேண்டியவன், அங்க இருக்கான். ஹிஹிஹி.... ஹிஹிஹி...


நான் சொல்ல வேண்டியதை சொன்னா சோழநாடே தலைகீழா மாறிவிடும். ஆமாம்!
இங்க இருக்க வேண்டியவன் அங்க இருக்கான், அங்க இருக்க வேண்டியவன் இங்க இருக்கான்! எப்படி இருக்கிறது...?
பாவம் பைத்தியம்...!
பொன்னார் மேனியனே புலித் தோலை அரைக்கசைத்து...!


மின்னார் செஞ்சடைமேல் மிளிர் கொன்றை அணிந்தவனே!
யார் அது? சிறைச்சாலைக்குள் சிவ பக்தன்!
ஏனப்பா, சிறைச்சாலைக்குள் பொன்னார் மேனியை நினைத்துக் கொண்டாயோ!?
எங்கும் நிறைந்திருப்பவனை எங்கு நினைத்தால் என்ன தாயே?


பேச்சில் சிவ மணம் கமிழ்கிறது. முகத்தில் ராஜகளை ஓடுகிறதே! இவர் யாராக இருப்பார்?
ஆமாம்! தாங்களை என்ன குற்றத்திற்காக சிறையில் வைத்திருக்கிறார்கள்?
நண்பனுக்கு உதவிய குற்றத்திற்காக!


விசித்திரமாக அல்லவா இருக்கிறது!
நியாயமாக பார்த்தால் உங்கள் இருவரையும் கூட என்னுடன் சிறைச்சாலையில் அடைத்திருக்க வேண்டும்.
ஐயா! தாங்கள் யாரிடம் பேசுகிறீர்கள் என்று தெரிந்துதான் பேசுகிறீர்களா?


இளைய பிராட்டி குந்தவையிடமும், அவரது தோழி கொடும்பாளூர் இளவரசி வானதி தேவியிடமும் பேசுகிறேன்.
ஆம் தேவி! தாங்கள் யாருக்கு உதவி செய்து இலங்கை தப்பிச் செல்ல வழி செய்தீர்களோ, அவன்தான் என் நண்பன்.
அப்படியென்றால், நீர்தான் தளிக்குளத்தார் கோவிலுக்கு கைங்கர்யம் செய்யும் சேந்தன் அமுதனோ?
ஆம் தேவி!
வந்தியத்தேவன், சேந்தன் அமுதன் தனக்கு செய்த உதவி பற்றியும், பொய் சொல்ல மறுத்ததை பற்றியும் முன்பே கூறியிருந்ததால், சேந்தன் அமுதன் மீது மதிப்பும் மரியாதையும் ஏற்படுகிறது. குந்தவையும், வானதியும் சேந்தன் அமுதனை விடுதலை செய்து அழைத்துச் செல்கின்றனர்.




இராஜ்ஜியத்தின் நிலைமையைப் பற்றி பல விதமான செய்திகள் காதில் விழுகின்றன. தாங்கள் எதையும் கவனிப்பதில்லை. நோயினால் மெலிந்திருக்கும் தங்கள் தந்தை பலமுறை சொல்லி அனுப்பியும் தாங்கள் தஞ்சைக்கு வரவில்லை. இதற்கு காரணம் நான்தானோ என்ற எண்ணம் என்னை வதைக்கிறது. தங்களை ஒரு முறை சந்திக்க வேண்டுகிறேன். அதற்கு திருவுள்ளம் இறங்குவீர்களா? தஞ்சைக்கு வர விருப்பமில்லாவிட்டால் கடம்பூர் சம்புவரையர் மாளிகையில் சந்திக்கலாம். நாம் சந்தித்து பேசுவதில் என்ன ஆட்சேபம் இருக்க முடியும். நான் இன்று தங்கள் பாட்டியின் ஸ்தானத்தில் இருக்கிறேன்.


இதை கொண்டு வரும் சம்புவரையர் குமாரரை தாங்கள் பூரணமாக நம்பலாம். அவரிடம் எந்த செய்தியையும் சொல்லி அனுப்பலாம். இங்ஙனம் தாங்களின் உடன்பிறவாத அபாக்கியவதி நந்தினி.
இளையராணிக்கு இன்று ஏன் இப்படி வியர்த்துக் கொட்டுகிறது.
வாசுகி! நீ சென்று உடனே கடம்பூர் இளவரசரை அழைத்து வா...
ஆகட்டும்.


அங்கு வந்த கடம்பூர் இளவரசன் கந்தமாறன் நந்தினியின் பக்கத்தில் நின்று, நந்தினியின் கண்களை சந்திக்கத் தயங்கி, விட்டத்தை பார்த்தபடி இருக்கிறான்.
இளைய பிராட்டியை கண்டதும் அத்தனை உணர்ச்சி பொங்க பேசி இருக்க கூடாது. என்ன செய்ய அழகான பெண்களைக் கண்டால் மனம் பேதலித்து விடுகிறது.
கடம்பூர் இளவரசருக்கு குந்தவை தேவியை பார்த்த கண்களினால் என்னைப் பார்க்க முடியாமலிருப்பதில் வியப்பில்லை!
ஆயிரம் குந்தவைகள் ஒரு நந்தினிக்கு இணையாக மாட்டார்கள்!
இன்று காலை அவளைக் கண்டதும் தாங்களுடைய கற்பனைக்கு அளவே இல்லை.
நடந்தவற்றை தானே கூறினேன்.


ஐயா! அன்று நடந்தவற்றையெல்லாம் தாங்கள் மறுபடி ஒரு தடவை ஞாபகப்படுத்திக் கொள்வது நல்லது.
தாங்கள் கூட என் வார்த்தையை சந்தேகிக்கிறீர்களா என்ன?
சந்தேகிக்கவில்லை! எப்படியிருந்தாலும் வந்தியத்தேவனை என்றைக்காவது ஒரு நாள் சிறைபடுத்திக் கொண்டு வருவார்கள் அல்லவா? அதற்காக கூறினேன்.
அன்றிரவு நிலவறையில் என்னை சந்தித்தது நினைவிருக்கிறது அல்லவா?


நன்றாய் நினைவிருக்கிறது. என் உடம்பில் உயிர் இருக்கும் வரையில் நான் அதை மறக்க முடியாது.
அப்போது என்னை கண்டதும் என்ன சொன்னீர்கள் என்பது நினைவிருக்கிறதா?
என்ன சொன்னேன் என்பது நினைவில்லை!
ஐயா! தாங்கள் என்னை தாலிக்கட்டி மணந்தவரிடமே! தாங்கள் குமாரியின் அழகைப்பற்றி கேள்விப்பட்டதுண்டு.
ஆனால் அதெல்லாம் உண்மைக்கு உறைபோட காணாது என்று சொன்னீர்கள்.
ஐயையோ! அப்படியா சொன்னேன்?


அவன் பதறியதற்கான காரணம் தங்களுக்கெல்லாம் புரிகிறது அல்லவா?
ஒருவரின் மனைவியின் அழகைப் பற்றி கணவரின் முன் வர்ணிப்பதே தவறு. அதிலும் தவறுதலாக மனைவியை மகளென்று கூறி வர்ணிப்பதை எந்த கணவன் பொறுத்துக் கொள்வான். பழுவேட்டரையர் நிலையில் யார் இருந்தாலும் கோபம் வரத்தானே செய்யும்.
அதனால்தான் அவருக்கு என்னை கண்டால் பிடிக்கவில்லை போலும்!
அது போகட்டும். நிலவறையில் எங்களைப் பார்த்த பிறகு என்ன செய்தீர்கள்?
நந்தினி அனைத்து விவரங்களையும் அறிந்திருக்க கூடும். அதனால் மேலும் பேச்சை வளர்த்து மாட்டிக்கொள்ள விரும்பாத கந்தமாறன்...
தேவி! இப்போது எனக்கு ஆணையிடுங்கள், நான் தங்களுக்காக பிரம்ம தேசம் சென்று பிரம்மாவின் தலையைக் கொய்து வர வேண்டும் என்றாலும் தங்களுக்காக அதை நான் செய்வேன்.
என்று பேச்சை மாற்றுகிறான்.


ஐயா! தங்கள் எனக்காக தேவலோகம் எல்லாம் செல்ல வேண்டாம், இந்த பூலோகத்திலேயே என் வேண்டுகோளை நிறைவேற்றினால் போதும். எனக்காக இந்த பணியை முடித்து கொடுத்தால் போதும்.
என்று, தான் எழுதி வைத்திருந்த ஓலையை கொடுக்கிறாள்.
யாருக்கு இந்த ஓலை
கரிகாலருக்குத்தான்
என்றதும் அதிர்ச்சி அடைகிறான் கந்தமாறன்.
ஐயா! தங்கள் குடும்பமும், என் குடும்பமும் மேலும் பல குடும்பங்களும் பெரும் அபாயத்தில் உள்ளன. அதற்கு யார் காரணம் தெரியுமா?
நாம் ஏதாவது தவறு செய்து விட்டோமோ?
கந்தமாறன், அவளைத்தான் சொல்ல போகிறாளோ என்று பார்க்கிறான்.
இன்று மதியம் யாரிடம் உம்முடைய கற்பனா சக்தியெல்லாம் காட்டிக் கொண்டிருந்தீர்களோ அவள்தான்!


கந்தமாறன் தன் செயலுக்காக வெட்கம் அடைகிறான்.
நாம் அவ்வளவு உணர்ச்சி வசப்பட்டிருக்கக் கூடாது.
உம்முடைய சிநேகிதனை அவள்தான் இலங்கைக்கு அனுப்பியிருக்கிறாள். எதற்காக தெரியுமா?
மூலிகை கொண்டு வருவதற்கு என்று... அது பெரும் பொய்! சுந்தர சோழர் பிழைக்க வேண்டுமே என்று அவள் தவித்துக் கொண்டிருக்கவில்லை. அவருக்கு பிறகு மதுராந்தகரும் பட்டத்துக்கு வரக்கூடாது. ஆதித்த கரிகாலரும் பட்டத்துக்கு வரக்கூடாது.
அவளுடைய அருமை தம்பி அருள்மொழி வர்மன் பட்டத்துக்கு வரவேண்டும். எதற்கு?
அருள்மொழி பட்டத்துக்கு வந்தால் அவள் இஷ்டம்போல் ஆட்டி வைக்கலாம் அல்லவா! அதுதான்.
அப்படியா? ஆகா!
அப்புறம் சோழ நாட்டின் சக்கரவர்த்தினி குந்தவை தேவிதான்! சக்கரவர்த்தி யார் தெரியுமா?
உன் சிநேகிதன் வந்தியத்தேவன் தான்!
இதில் இவ்வளவு சூட்சமங்கள் அடங்கியிருப்பது எனக்கு தெரியாமல் போய்விட்டதே!


மாதோட்டம், இலங்கை.
மாதோட்டத்தில் தங்கியிருக்கும் தென்திசை சேனாதிபதி பூதி விக்கிரம கேசரியை சந்திக்க வந்திருக்கிறார் முதன் மந்திரி அநிருத்த பிரம்மராயர்.
ஐயா! பெரிய வேளாரே நான் சொல்றபடி செய்யுங்கள்.


இளவரசர் அருள்மொழி எக்காரணத்தை கொண்டும் தஞ்சைக்கு செல்லக் கூடாது. அது உம்முடைய பொறுப்பு!


அருள்மொழியை யார் தடுக்க முடியும்? அவர் ஒரு முடிவு செய்துவிட்டால் எவராலும் தடுக்க முடியாதே!
டகடக்..
டகடக்..
டகடக்..
இவ்வளவு அவசரமாக கோட்டை காவலன் வரக் காரணம்?
கோட்டை வாயிலில் ஏதோ முக்கிய நிகழ்வு நடந்திருக்க வேண்டும்!
என்ன விஷயம்?


ஐயா! ஒருவன் காஞ்சியில் இருந்து வந்திருக்கிறான். அவன் அடாவடி தனம் செய்து கோட்டைக்குள் நுழைய பார்த்தான், நாங்கள் அவனை சிறைபிடித்து வைத்திருக்கிறோம்.
நல்லது!
அந்த வாலிபனாகத்தான் இருக்க வேண்டும்..!
ஐயா! இது அவனிடமிருந்தது.


நீ புறப்படு! அவனை நான் வந்து விசாரிக்கிறேன்.
சேனாதிபதி, காவலன் கொடுத்த முத்திரை மோதிரத்தை கூர்ந்து கவனிக்கிறார்.
பழுவூர் சின்னம் பொறித்த முத்திரை மோதிரம்
இவன் பழுவேட்டரையரின் ஆளாக இருப்பானோ?
ஐயா, சேனாதிபதி! வந்திருப்பவன் யார் என்று எனக்கு தெரிந்துவிட்டது. அவன் விவகாரத்தை என்னிடம் விட்டுவிடுங்கள்.
தங்களுக்கு வேண்டப்பட்டவனா அவன்?
எனக்கு வேண்டியப்பட்டவன் அல்ல. இளையபிராட்டி குந்தவைக்குத்தான் வேண்டியப்பட்டவன். குந்தவைதான் அவனை இலங்கைக்கு ஓலை கொடுத்து அனுப்பியிருக்கிறார்.


வந்தியத்தேவனிடம் இருந்ததாக காவலன் கொண்டு வந்து கொடுத்த ஓலையை பார்க்கிறார் பெரிய வேளார்.
ஆமாம்! ஒரு ஓலையில் ஆத்தி இலை முத்திரை உள்ளது. நான் இப்போது என்ன செய்வது?
அவனை நீர் ஒன்றும் செய்ய வேண்டாம். அவனை கண்காணிக்க நான் ஆள் ஏற்பாடு செய்துவிட்டேன்.
எப்படி தாங்களால் ஒரு இடத்தில் இருந்தபடியே அனைத்து விவரத்தையும் அறிய முடிகிறது!
ஹா..ஹா..
தாங்களை போன்ற முதன் மந்திரி சோழ நாட்டுக்கு கிடைத்தது பெரும் பாக்கியம் தான்...!
அப்படியெல்லாம் ஒன்றும் இல்லை. தாங்கள் இந்த வயதிலும் வீரத்துடன் போர் களத்தில் இருக்கிறீர்கள் பாருங்கள் அதுதான் சோழ தேசம் செய்த பாக்கியம்!



மாதோட்ட சிறைச்சாலை
புதிதாக கடல் பயணம் செய்பவர்களுக்கு தலை சுற்றலும், வாந்தியும் ஏற்படுவது இயல்பு. அதையெல்லாம் எப்படியோ சமாளித்துவிட்டான். இருந்தபோதிலும் பயண களைப்பு காரணமாக உறங்கிக் கொண்டிருக்கிறான் வந்தியத்தேவன்.


இந்தா! சீச்சீ! போ போ! கிட்ட வராதே! கிட்ட வந்தா கொன்று விடுவேன்! ஜாக்கிரதை! ஒழுங்கா சொன்ன கேட்க மாட்டே, ஒரே உதையில் உன் உயிர் போய்விடும்!
?!!.
அடேயப்பா! பெரிய வீரனாயிருப்பான் போல...
சொன்னா கேட்கமாட்டே? சரி சரி! உன்னை என்ன செய்கிறேன் பார்.
யாருடா இவன் இந்த நேரத்தில்? சரியான பைத்தியக்காரன்!


இவன் இன்று நம்மை தூங்கவிடமாட்டான் போலிருக்கிறது.
தொப்..
ஹா ஹா...!
இதற்கா இந்த ஆர்பாட்டம்! உண்மையிலேயே அவன் பைத்தியக்காரன்தான்.
மியாவ்..
ஓகோ! உனக்கு சிரிக்க வேறு தெரியுமா? சிரி சிரி மறுபடியும் இங்கே மட்டும் வராதே!
பைத்தியக்காரன் என்பதில் சந்தேகமில்லை. ஆனால், இந்த குரலை எங்கோ கேட்ட மாதிரி அல்லவா இருக்கிறது! பழகின குரல் போலத்தான் தெரிகிறது!



சிறிது நேரத்திற்கெல்லாம் நன்றாக கொறட்டை விட்டு தூங்குகிறான் வந்தியத்தேவன்.
ர்ர்ர்
மியாவ்
ஆகா! இளவரசியின் கை மலரினும் மென்மையாக அல்லவா இருக்கிறது!


ம்ம்ம்
ஆகா, என்ன சுகம்! என்ன சுகம்!!


ஆ....
அச்சு...
ஏய்! இது உன்
வேலைதானா?


நீ அங்கேயே போ! அவன்தான் உனக்கு சரியான ஆளு.


மியா யாவ்வ்...
திரும்ப வந்துட்டியா? உன்னை என்ன செய்கிறேன் பார்!
மியாவ், மியாவ்! பூனையின் அலறல் சத்தம் கேட்கிறது.


டொப்
வ்,விங்,ங்,ங்!
இந்த வைஷ்ணவன் ஏதற்காக நம்மையே பின் தொடர்ந்து வருகிறான்? வரட்டும், வரட்டும்!


என்ன தம்பி? கத்திய தீட்டிண்டு இருக்கே!
அதுவா நம்பிகளே! என்னுடைய வாள் வீர வைஷ்ணவனின் ரத்தம் கேட்கிறது.


தம்பி! உன் குலம் புகழ் பெற்ற குலம் அல்லவா! அது உன் பரம்பரை வாள் என்றால், நிச்சயம் வைஷ்ணவனின் இரத்தம் கேட்காது. அது ஒரு சத்திரியனின் இரத்தம்தான் கேட்கும்.
ஆமாம், வைஷ்ணவரே! இது என்ன கோலம்?
அதுவா தம்பி! இது ஒரு பூனை செய்த கோலம்.
அந்த பூனையிடமும், நீ சைவ பூனையா? வைஷ்ணவ பூனையா? என்று கேட்டிருப்பீர்.


இல்லை தம்பி! அதற்கும் எனக்கும் நெடுநாள் பகை, அதை இன்று அது பழி தீர்த்துக் கொண்டது.
வாசகர்களுக்கு நினைவிருக்கும் ஆழ்வார்க்கடியான் கடம்பூர் மதில் சுவரின் மேல் ஒரு பூனையை அடித்தது.
என் கதையை விடு தம்பி! உன்னை ஊரே தேடிக்கிட்டிருக்கு இங்க வந்து எப்படி அகப்பட்ட?
அதுவா! எல்லாம் உம்மால் வந்தது.
நாராயணா! நாராயணா! அப்பனே, நான் என்ன செய்தேன்?


நீர் ஒன்றும் செய்யவில்லை. உம் தமக்கை என்று கூறினீர் அல்லவா! அந்த பழுவூர் ராணி அவளாள் வந்தது.
!?!!
அவள் எனக்கு ஒரு பனை இலை சின்னம் பொறித்த முத்திரை மோதிரத்தை அளித்தாள். தமிழ்நாட்டில் அதற்கு ஏகப்பட்ட மதிப்பு கிடைத்தது. இங்கும் புலிக் கொடி பறக்கிறதே என்று எண்ணி, கோட்டை காவலனிடம் காண்பித்தேன். அவ்வளவுதான் என்னை பிடித்து வந்து இங்கே அடைத்துவிட்டார்கள்.
தம்பி உனக்கு தெரியாதா? பழுவூர் வம்சத்துக்கும், கொடும்பாளூர் வம்சத்துக்கும் பெரும் பகை என்பது. இந்த சேனாதிபதி கொடும்பாளூர் பெரிய வேளார் அல்லவா!
ஓஹோ! அப்படியா?
கவலைப்பட வேண்டாம் தம்பி!


உன்னை ஒரு சமயம் ஓர் உதவி கேட்டேன் நீ மறுத்துவிட்டாய். ஆயினும் நான் உனக்கு உதவி செய்யவே வந்தேன்.
புறப்படு என்னோடு!
இல்லை, நான் வரமுடியாது!
ஏன்?
கண்ணை சுழற்றிக் கொண்டு வருகிறது...


தம்பி! இந்த ஓலையை பொன்னியின் செல்வன் கையில் சேர்ப்பிக்கும் வரையில் இரவென்றும் பகலென்றும் பார்க்காமல் பிரயாணம் செய்வேன் என்று இளைய பிராட்டியிடம் நீ ஒப்புக் கொள்ளவில்லையா?
அது எப்படி உனக்கு தெரியும்?
இந்த ஓலை உன்னிடம் எப்படி வந்தது?
சேனாதிபதி கொடுத்தார். இதோ இந்த பழுவூர் பனை இலச்சினையையும் உன்னிடம் திருப்பிக் கொடுக்கச் சொன்னார்.
இந்த வைஷ்ணவனை நாம் சாதாரணமாக நினைத்தோம்! ஆனால் இவனுக்கு எல்லா இடத்திலும் செல்வாக்கு உள்ளது!


வைஷ்ணவரே! தங்களுக்கு என் மனமார்ந்த நன்றி.
நன்றியெல்லாம் சேர்த்து வைத்துக் கொள், சமயம் வரும்போது உன் நன்றியை காட்டு.
ஐயா, நம்பிகளே! புறப்படுவதற்கு முன்பு சேநாதிபதியை நான் சந்திக்க முடியுமா?
அவசியம் சந்தித்துதான் ஆக வேண்டும் தம்பி. வானதி தேவியை பற்றி சேநாதிபதியிடம் தெரிவிக்காமல் சென்றால் உம்மை இளவரசி வானதி சும்மா விடுவார்களா?




ஆழ்வார்க்கடியான் வந்தியத்தேவனை சிறையிலிருந்து விடுவித்து, சேனாதிபதி பூதி விக்கிரம கேசரியிடம் (பெரிய வேளார்) அழைத்துச் செல்கிறான். அவரிடம் வந்தியத்தேவன் சோழ நாட்டின் நிலவரத்தையும், அதே சமயத்தில் சிறிய வேளாரின் மகள் இளவரசி வானதி தேவியும், இளைய பிராட்டியும் சீரும் சிறப்புமாக இருப்பதையும் எடுத்து கூறுகிறான். அதில் மகிழ்ச்சி அடைந்த சேனாதிபதி பூதி விக்கிரம கேசரி அவர்கள் பயணத்துக்கான ஏற்பாட்டைச் செய்கிறார்.




அரைகாத தூரம் இருக்கிறது.
இந்த பகுதியெல்லாம் யாருடைய கட்டுப்பாட்டில் உள்ளது?
சோழ சைன்யம் தம்பளை வரையில் கைப்பற்றியிருக்கிறது. சிம்மகிரிக் குன்றும், கோட்டையும் மகிந்தன் வசம் உள்ளது.
இவ்வாறு அவர்கள் பேசிக் கொண்டு வரும் தருவாயில் தூரத்தில் மூன்று குதிரைகள் வருவதை இருவரும் பார்க்கிறார்கள்.
டொகடக்... டொகடக்...


தூரத்தில் பார்த்ததுமே வந்தியத்தேவன் கண்டுபிடித்துவிட்டான்.
இவன் இங்கே எங்கே வந்தான்? இவனைப் பார்க்காமல் தவிர்த்து விட வேண்டியதுதான்.
என்று முகத்தை வேறு பக்கம் திருப்பி நின்றான்.
ஐயா, வைஷ்ணவரே! அங்கே பாரும், அது என்ன?
தம்பி!
டொகடக்... டொகடக்...
தம்பி என்று பார்த்திபேந்திரன் அழைத்ததும் வேறு வழியின்றி அவர்கள் பக்கம் திரும்பினான் வந்தியத்தேவன். ஆழ்வார்க்கடியான் அம்மூன்று பேரையும் கண்டதும் சற்று அதிர்ச்சியானான்.
இவர்கள் எப்படி இந்த முரட்டு பார்த்திபனோடு கூட்டு வைத்தார்கள்.
உன்னை பழுவேட்டரையர்கள் வேலை தீர்த்திருப்பார்கள் என்றல்லவா நினைத்தேன்!
நீ எங்கே! இங்கு?


அப்படியா! நான் பழைய பல்லவ குலத்தோன்றலோடு சண்டையிட்டு சாவேனே தவிர, கேவலம் பழுவேட்டரையர்களின் கையினால் சாவேனா?
என்று தன் உறைவாளில் கை வைத்தான்..
சேச்சே! உன்னோடு என்னை சண்டை போடவா சொல்கிறாய்? அதுவும் இந்த தூர தேசத்தில் வந்து. வேண்டாம், வேண்டாம்! எனக்கு அவசர வேலை இருக்கிறது, நான் வருகிறேன்.
ஆனால், உன் ஆசை நிச்சயம் ஒரு நாள் நிறைவேறும்.
என்று கூறி விட்டு, பார்த்திபேந்திரனும் அவனுடன் வந்தவர்களும் அங்கிருந்து புறப்படுகிறார்கள்.


இவன் இங்கு எதற்காக வந்து செல்கிறான்?
இளவரசரை தேடி வந்திருக்கிறான்!
அப்படியென்றால் இளவரசரை சந்தித்திருப்பானா?
அது அவ்வளவு எளிதான காரியமில்லை தம்பி!
தம்பி! அந்த முரட்டு பல்லவனுக்கு பின்னாடி இரண்டு பேர் இருந்தார்களே அவர்களைப் பார்த்தாயா?
அதில் ஒருவன் முகம் மட்டும் எங்கேயோ பார்த்த மாதிரி தோன்றுகிறது.
அந்த முரட்டு பல்லவனை பிடித்துக் கொண்டார்களே? அந்த மட்டும் சாமர்த்தியசாலிகள்தான் அவர்கள்!


அவர்களை உமக்கு தெரியுமா?
ஆங்..... திருப்புறம்பியம் பள்ளிப்படையில் பார்த்திருக்கிறேன். சோழர் குலப் பூண்டே இந்த உலகில் இல்லாமல் அழித்துவிடுவதாகச் சபதம் எடுத்துக் கொண்டார்கள்.
ஆனால், அவர்களுடன் பார்த்திபேந்திரனும் அல்லவா சேர்ந்து செல்கிறார்!


பள்ளிப்படையில் ஆழ்வார்க்கடியானை ரவிதாசனின் ஆட்கள் துரத்தியது உங்களுக்கு நினைவிருக்கிறது அல்லவா!
ஒரு வேளை அந்த முரட்டு பார்த்திபேந்திரனுக்கு அவர்கள் யார் என்று தெரிந்திருக்காது. தெரிந்திருந்தால் அவர்களின் கதை இந்நேரம் முடிந்திருக்கும்.
நல்ல வேளை, பார்த்திபேந்திரனின் கவனம் உன் பக்கம் திரும்பியதால் நான் தப்பித்தேன். அதுமட்டுமில்லாது பார்த்திபேந்திரனுடன் அவர்கள் வந்ததால்தான் என்னை உயிரோடு விட்டு விட்டுச் சென்றார்கள்.
இப்படி பேசிக் கொண்டே செல்கின்றனர்.


தம்பளை
தம்பளை ஒரே விழாக்கோலம் பூண்டிருக்கிறது. வீதியின் ஓரத்தில் தாமரை மலர்களும், செண்பக மலர்களும் விற்கிறார்கள். அதை மக்கள் வாங்கிக் கொண்டு, புத்த விஹாரத்தை நோக்கி செல்கின்றனர்.
அங்கு ஒரு பகுதியில் புத்த ஸ்தூபிகளின் இடிந்த பகுதிகளை செப்பனிடும் வேலை நடைபெறுகிறது. அதை வந்தியத்தேவனும் ஆழ்வார்க்கடியானும் பார்க்கிறார்கள்.
யுத்தம் இன்னும் முடியவில்லை என்கிறாய்! அப்படியென்றால் இதையெல்லாம் யாருடைய ஆணையின் பேரில் புதுப்பிக்கிறார்கள்?


எல்லாம் பொன்னியின் செல்வரின் ஏற்பாடு! எப்படியும் அவரை சந்தித்தால் சொல்லிவிட வேண்டியதுதான், நீங்கள் செய்யும் காரியம் எனக்குக் கொஞ்சமும் பிடிக்கவில்லை என்று.
கட்டாயம் சொல்லிவிடும். உமக்குப் பிடிக்காத காரியத்தைச் செய்வதற்கு அவர் யார்? அவருக்கு என்ன கொம்பா முளைத்திருக்கிறது?
சரி! நீ இங்கேயே நில், நான் வந்துவிடுகிறேன்.
சாலையை கடந்து எதிரில் இருக்கும் கடையில் சென்று விசாரிக்கிறான்.


அப்போது யானையின் மேல் ஒரு பாகனும், இரண்டு சீன யாத்திரிகளும் வருகிறார்கள்.


மாளிகையின் மேல் மாடத்திலிருக்கும் பெண்கள் வீதியில் செல்லும் யானைப் பாகனைப் பார்த்து அவர்களுக்குள் பேசிக் கொள்கிறார்கள்.
அந்த யானை பாகனை பார்த்தால், யானை பாகனை போலவா தோன்றுகிறது! ஏதோ ராஜகுமாரன் போல் அல்லவா தோன்றுகிறான்.


யானையின் மணியோசையைக் கேட்டு ஆழ்வார்க்கடியான் திரும்பி, யானை மேல் இருக்கும் பாகனைப் பார்த்து...
எந்த வேடம் போட்டு வந்தாலும் இந்த ஆழ்வார்க்கடியானிடமிருந்து தப்ப முடியாது.


யானை சற்று தூரத்திலிருந்து வருவதற்குள் வந்தியத்தேவனின் அருகில் ஆழ்வார்க்கடியான் வந்துவிடுகிறான்.
ஆழ்வார்க்கடியான் கண் கொட்டாமல் யானைப் பாகனையே பார்த்துக் கொண்டிருக்க, யானை அவர்களைக் கடந்து செல்கிறது.
யானைப் பாகன் ஆழ்வார்க்கடியானையும், வந்தியத்தேவனையும் பார்க்கிறான்.
இந்த வைஷ்ணவனுடன் வந்திருப்பவன் யார்?


மேல் மாடத்திலிருக்கும் பெண்களைப் பார்த்து
என்னை போல், அழகிய இளம் வாலிபனை விடுத்து அப்படி என்னதான் பேச்சு அவர்களுக்குள்?! ம்.....
மாடத்திலிருக்கும் பெண்களோ யானைப் பாகனையே பார்க்க வந்தியத்தேவனோ அந்தப் பெண்களையே கண் கொட்டாமல் பார்த்துக் கொண்டிருக்கிறான்.
தம்பி! பார்த்தாயா?
பார்த்துக் கொண்டுதான் இருக்கிறேன்!
அவன் முகத்துக்கு நேரே கை அசைத்து...
நான் இளவரசரை பார்த்தாயா? என்று கேட்டேன்.


இளவரசரா! எங்கே? எங்கே இளவரசர்?
இப்போது யானை சென்றதல்லவா!
யானை சென்றதா?
சரியா போச்சு! உன்னிடம் போய் முக்கியமான காரியத்தை ஒப்புவித்தார்களே, அவர்களைத்தான் சொல்ல வேண்டும்.


சரி, சரி! முதலில் இளவரசர் எங்கே அதை கூறும்.
வா என்னோடு.
என்று ஆழ்வார்க்கடியான் வேறு ஒரு இடத்திற்கு வந்தியத்தேவனை அழைத்துச் செல்கிறான்.


இளவரசர் எங்கே? அவருக்காக எவ்வளவு நேரம் நாம் இங்கே காத்திருப்பது?
யாருக்கு தெரியும் தம்பி! காரியம் ஆக வேண்டும் என்றால் காத்திருக்கத்தான் வேண்டும்.
டகடக், டகடக், டகடக்,
அப்போது, ஒரு வீரன் இவர்களை கடந்து குதிரையில் வேகமாக செல்கிறான்.
இவர்தான் இளவரசரா?
அப்படியும் இருக்கலாம்! யாருக்கு தெரியும்?


ஓய் வைஷ்ணவரே! உம்மை நம்பி அல்லவா வந்திருக்கிறேன். இப்படி கூறினால் எப்படி?
அதற்குள் ஒரு வீரன் ஒரு குதிரையில் அமர்ந்தபடி மற்றொரு குதிரையின் கையிற்றை பிடித்து அழைத்து வருகிறான்.
சாமிகளே! எம்முடன் வரத்தயாரா?
இதோ நான் வந்துவிட்டேன்.


அப்படியென்றால் நான்?
உனக்கு அழைப்பு இல்லையே! உனக்கு அழைப்பு வரும் வரை இங்கேயே காத்திரு...
ஓய் நம்பிகளே! ஓய் நம்பிகளே!!
நம்மை பழி வாங்கிவிட்டானே இந்த வைஷ்ணவன்.


நீ... உன்னுடைய சாணக்கியத்தனத்தினால் என்னையா மிஞ்சின? நான் என்னுடைய சாமர்த்தியத்தால் உன்னை மிஞ்சிகிறேனா இல்லையா என்று பார்!
ஆழ்வார்க்கடியான் திரும்பி பார்க்கிறான்.
அடப்பாவி! உன் குணத்தை காட்டிவிட்டாயே?!
அவன் நினைத்தது போலவே காவலனை தாக்கிவிட்டு அந்த குதிரையை எடுத்து கொண்டு வருகிறான்.
என்னையா விட்டுட்டு போற? இதோ வந்துவிட்டேன்!


ஒய் வைஷ்ணவரே! இப்ப என்ன செய்வீர்?
என்று கேட்டுவிட்டு, ஆழ்வார்க்கடியானை கடந்து வேகமாக செல்கிறான் வந்தியத்தேவன்.
இளவரசர் எப்படியிருப்பார் என்று கூட தெரியாது! போகட்டும், போகட்டும்...இளவரசர் இவனுக்கு சரியான பாடம் புகட்டாமலா விடுவார்.


மூன்று குதிரைகளும் சீறிப் பாய்கின்றன.
அந்த வைஷ்ணவரா இவ்வளவு வேகமாக நம்மை பின் தொடர்ந்து குதிரையை செலுத்தி வருவது!
என்று எண்ணி முன்னால் செல்லும் வீரன் பின்னால் திரும்பி பார்க்கிறான்.
யார் இவன்? முந்திரிக் கொட்டை போல் முந்திக் கொண்டு வருகிறான்.


என்ன ஆச்சு, எதற்காக சட்டென்று குதிரையை திருப்பிக் கொண்டு வருகிறார்?!
இவனுக்கு சரியான பாடம் புகட்டத்தான் வேண்டும்.
யார் நீ?
உன்னை யார் வரச் சொன்னது?
நான் சோழ நாட்டு இளவரசியிடமிருந்து ஓலை கொண்டு வந்திருக்கிறேன்.
இளவரசரை அவசரமாக சந்திக்க வேண்டும்.


அதற்குள் அந்த வீரன் வந்தியத்தேவன் மேல் பாய்ந்துவிட்டான்.


ஏய் நில்! நான் சொல்வதைக் கேள்.


அந்த ஓலையை என்னிடம் கொடுத்துவிடு.


முடியாது! அதை இளவரசர் பொன்னியின் செல்வரிடம்தான் கொடுப்பேன்.
இரண்டு பேருக்கு துவந்த யுத்தம் நடைபெறுகிறது.
இறுதியாக அந்த வீரன் வந்தியத்தேவன் மேல் ஏறி அமர்ந்து விடுகிறான்.
அட! நம்மை தந்திரமாக எதிரிகளிடம் சிக்க வைத்துவிட்டானா? அந்த வைஷ்ணவன்.
எதிர்பார்க்காத சமயத்தில் இப்படி நம்மை தாக்கிவிட்டானே!
விடு என்னை! உனக்கு என்ன வேண்டும்?


நீ கொண்டு செல்லும் ஓலை வேண்டும்.
என் உயிர் போனாலும் நான் அதை கொடுக்க மாட்டேன்.
ம்... என்று அந்த வீரன் குரல் கொடுக்க.....
அருகிலிருந்த வீரர்களில் ஒருவன் வலது கையையும், மற்றொருவன் இடது கையையும் மிதித்துக் கொள்ள, வந்தியத்தேவனின் கால்களை இருவர் வந்து பிடித்துக் கொள்கிறார்கள்.
ஆஆஆ!!!


அந்த வீரன் வந்தியத்தேவனிடமிருந்து ஓலை எடுக்கிறான்.
நீ என்ன கொடுப்பது, நானே எடுத்துக் கொள்கிறேன்.
அதை ஒழுங்காக என்னிடம் கொடுத்துவிடு. எங்க இளவரசருக்கு மட்டும் இது தெரிஞ்சா, உன் உயிர் உன்னுடையது கிடையாது. ஜாக்கிரதை!
இளைய பிராட்டி குந்தவைக்கு நான் என்ன பதில் சொல்வேன்.
சரியான ஆளிடம்தான் ஓலை கொடுத்து அனுப்பியிருக்கிறார்கள்.
ஹா... ஹா....
எதிரி கூட்டத்திடம் வந்து அகப்பட்டுக் கொண்டோமே!
அடப்பாவி வைஷ்ணவனே! என்னைக் கூட இருந்தே குழி பறித்து விட்டாயே? உன்னுடைய பக்தியெல்லாம் வேஷம்தானா!?


உன் வீரத்தை இங்க காட்ட வேண்டியதுதானே?
அந்த வீரன் தன் முகத்திரையை விலக்குகிறான்.
என்ன கம்பீரமான முகம்! யார் இவர்?


இளவரசர் வாழ்க!
இளவரசர் வாழ்க!
பொன்னியின் செல்வர் வாழ்க!!
வீரனே! எழுந்திரு.
இவர்தான் பொன்னியின் செல்வரா? என்ன வசீகரம்! கையில் என்ன வலிமை!


எப்படி நம் வரவேற்பு?
எங்கு சென்றாலும் நமக்கு இதே மாதிரி வரவேற்புதான் போலிருக்கிறது! ம்....


ஆகா! அற்புதம் இப்படிபட்ட வரவேற்பைத்தான் நான் தங்களிடம் எதிர்பார்த்தேன்.


இதன் பின் இருவருக்கும் இரவு விருந்து நடைபெறுகிறது. வந்தியத்தேவன் தன் வேண்டுகோளை வைக்கிறான், இளவரசர் உடனே தன்னுடன் தஞ்சைக்கு புறப்பட்டு வர வேண்டும் என்று. ஆழ்வார்க்கடியான் அதற்கு போட்டியாக, தாங்கள் இன்னும் சில காலம் இலங்கை தீவிலேயே இருக்கும்படி கூறுகிறான். இளவரசர் என்ன முடிவு செய்வார் என்பதை பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.


இலங்கையில் ஆண்டுதோறும் நடைபெறும் பிரசித்தி பெற்ற திருவிழாவிற்கு வந்தியத்தேவனையும், ஆழ்வார்க்கடியானையும் அழைத்துச் செல்கிறார் அருள்மொழி வர்மர்.
இளவரசே! இலங்கையில் போர், போர் என்றார்கள். ஆனால், இங்கு பார்த்தால் இலங்கையே விழாக்கோலம் பூண்டிருக்கிறதே?
ஆமாம்! இது என்ன திருவிழா. (வந்திய)


இதுதான் பெரஹராத் திருவிழா! ஆண்டுதோறும் இலங்கையில் விமர்சையாக கொண்டாடப்படும் திருவிழா! (அருள்)
எந்த கடவுளை முன்னிறுத்தி இத்திருவிழா எடுக்கப்படுகிறது? (ஆழ்வார்)


அனைத்து தெய்வங்களையும்தான்! (அருள்)
முன்னால் வருகிறதே யானை, அதன் மேல் ஒரு பெட்டி இருக்கிறது அல்லவா? அதில் புத்த பெருமானுடைய பல் இருக்கிறது! (அருள்)
பின்னால் வரும் யானையில், புத்த பெருமானுடையகை, கால்கள் இருக்கின்றனவா? (வந்திய)
நல்ல வேடிக்கையான மனிதர் நீங்கள்! அதில் ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு தெய்வத்தின் ஆபரணங்கள் உள்ளன.


சிவன், முருகன், கண்ணகி இப்படி
ஒவ்வொரு தெய்வங்களின்
ஆபரணங்களை, ஒவ்வொரு யானையின்
மேலும் ஊர்வலமாக கொண்டு சென்று
வணங்கி கொண்டாடுகிறார்கள். (அருள்)
தாங்களுக்கு பதிலாக இலங்கை
படையெடுப்புக்கு பெரிய பழுவேட்டரையர் மட்டும்
வந்திருந்தால், அந்த ஆபரணமெல்லாம்
இந்நேரம் இளைய ராணியின் அரண்மனையில்
இருந்திருக்கும். ஹா..! ஹா..!! (வந்திய)
பழுவேட்டரையர்களின்
உழைப்பின்றி சோழநாடு
வளர்ந்திருக்காது என்பதை,
மறுத்துவிட முடியாது
நண்பரே...! (அருள்)
இளவரசே! எனக்கு ஒரு சந்தேகம்?
சிவபெருமான் எப்படி? எப்போது
இங்கு வந்தார்? (வந்திய)


கஜபாகு என்னும் இலங்கை அரசன் சிவபெருமானை இங்கு அழைத்து வந்தார். அதன் பிறகு அவர் பிடிவாதமாக இங்கேயே இருக்கிறார்.
இவர்களை பின் தொடர்ந்து ஒரு பெண் வருகிறாள்.
?
ம்... ஜாக்கிரதை! இம்முறை அவன் நம்மிடமிருந்து தப்ப கூடாது.
ம்... விரைந்து வாருங்கள் என்னுடன்.
யார் இவர்கள்? இவர்களின் நோக்கம் என்ன?



இந்த பெண்மணியை எங்கோ பார்த்தது போல் இருக்கிறதே? ஆம்! பூதத்தீவில்
வாருங்கள்! இங்கிருந்து செல்வோம். வெகு நேரம் ஒரே இடத்தில் இருப்பது நல்லதல்ல.
எனக்கு ஒரு சந்தேகம்! எப்போதுமே இலங்கை அரசர்களுக்கும், தமிழக அரசர்களுக்கும் சண்டையிருந்து கொண்டேதான் இருக்குமா?
அப்படி கூறிவிட முடியாது. நட்பு பாராட்டிய காலமும் உண்டு. கஜபாகு மன்னனும், சேரன் செங்குட்டுவனும் அக்காலத்தில் நட்புறவுடன் இருந்திருக்கிறார்கள்.
அவசரப்பட வேண்டாம்! அவர்கள் முன்னேறி செல்லட்டும்.
பொறுமையாக இரு...!
ரவிதாசனும் அவனுடன் மகிந்தனின் ஆட்களும் இணைந்து அருள்மொழி வர்மனை கொல்ல சதி வேலையில் ஈடுபடுகிறார்கள்.


இளவரசே! முதன் மந்திரி அநிருத்தர், தாங்கள் இலங்கையிலேயே இன்னும் சிறிது காலம் இருப்பது உசிதம் என்று சொல்லி அனுப்பினார்.
இளவரசே! சோழ நாட்டில் நடந்தவற்றை தாங்களிடம் ஒன்று விடாமல் கூறிவிட்டேன்.
இளவரசருக்கும் இந்த அம்மையாருக்கும் என்னதான் சம்மந்தம்? ஏன் இவள் இளவரசரை பின் தொடர்கிறாள்?
தயாராகுங்கள்.... அவர்கள் நெருங்கி வந்துவிட்டார்கள். எதிரியின் உயிர் நம் கையில்!
தாங்கள் சகோதரியின் எண்ணத்தையும், நான் கொண்டு வந்த ஓலையின் மூலம் அறிந்திருப்பீர்கள்.
அதனால் தாங்களை நான் மேலும் வற்புறுத்த வேண்டியதில்லை. (வந்தி)


அவர்கள் ஒரு மாளிகையின் மேல் உச்சியிலிருக்கும் சிலையை, கடப்பாரையைக் கொண்டு இடித்து, இளவரசரை கொல்ல முயற்சி செய்கிறார்கள்.
டங்
எப்படியாவது இளைய பிராட்டி கூறியபடி பாதுகாப்பாக சோழ நாட்டிற்கு இளவரசரை அழைத்து சென்றுவிட்டால், இளைய பிராட்டியின் மனதிலும் இடம் பிடித்துவிடலாம். அதே சமயத்தில் நம் பூர்வீக ராஜ்யத்தையும் கேட்டுப் பெறலாம்.
டங்
அவர்கள் செய்யும் காரியம் கண்டு பதறுகிறாள் ஊமைத்தாய்.
அடப்பாவிகளா! இப்போது நாம் என்ன செய்வது...?
டங்
க்ராக்


ம்!
தள்ளு...
தப் தப்
ஒழிஞ்சான்
எதிரி...!


டம்
கைதட்டி யாரோ அழைப்பதை உணர்ந்த இளவரசர், தன் நடைவேகத்தை குறைத்தார். அதனால் மூவரின் உயிரும் தப்பியது. அந்த பெரிய கல்லினால் ஆன சிலை அவர்களுக்கு சற்று முன்னால் விழுந்தது. எதிரிகளின் சூழ்ச்சி வீணானது!
அட! தப்பி விட்டானே?!
விடாதே! அவனை தாக்கு.
தங்களிடமிருந்த கடப்பாரையைத் தூக்கி அவர்களின் மேல் எறிகிறார்கள்.
ஒவ்வொரு முறையும் எப்படியாவது வந்து நம் திட்டத்தை நாசமாக்கும் அந்த பெண் பேயை முதலில் தீர்த்து கட்ட வேண்டும்.


அடே கோழைகளா! நீங்கள் ஆண் மகன்களென்றால் நேருக்கு நேர் வாருங்கள்...
தம்பி! அந்த பிசாசுகளை பிறகு பார்த்துக் கொள்வோம். இளவரசர் அதோ சென்று கொண்டிருக்கிறார், நாம் அவரை பின் தொடர்ந்து செல்வோம்...
இளவரசரையும், மந்தாகினியையும் தொடர்ந்து ஆழ்வார்க்கடியானும், வந்தியத்தேவனும் செல்கிறார்கள்.
பெண் தெய்வம்! அந்த மட்டும் சரியான நேரத்தில் கைதட்டி எச்சரிக்கை செய்யவில்லை என்றால், அந்த சிலை நம்மீது விழுந்து இந்நேரம் கூழாகியிருப்போம்.


எதிரிகளிடமிருந்து தக்க சமயத்தில் வந்து காப்பாற்றிய மந்தாகினி,
அருள்மொழியிடம் தன் வாழ்க்கை வரலாற்றை, தான் ஓவியமாக
வரைந்திருப்பதை இளவரசரை அழைத்து வந்து காண்பிக்கிறார்.


அந்த ஓவியங்களை கூர்ந்து கவனித்து, தனக்கும் அந்த
ஓவியத்துக்குமான தொடர்பை, உறவை புரிந்து கொள்கிறார் இளவரசர்.
(ஆனால், நம்மால் அதை புரிந்து கொள்ள முடியாது. ஆகையால், வேறு சமயத்தில் அந்த
பெண்ணின் வாழ்க்கையோடு சம்மந்தப்பட்டவரின் வாய்மொழியில் தெரிந்து கொள்வோம்.)


அட! இளையராணி நந்தினி எப்போது இங்கே வந்தாள்? (வந்தி)
நந்தினியா? இல்லை, இல்லை! இந்த மூதாட்டியை அல்லவா குருநாதர் தலைநகருக்கு அழைத்து வரும்படி கூறியிருக்கிறார்.
ஒய் வைஷ்ணவரே!
உஷ்..!


இளவரசர் இருவரையும் அனுராதாபுரத்துக்கு அழைத்து வருகிறார்.
இந்த சிலையைக் கண்டவுடன் உங்கள் இருவருக்கும் என்ன தோன்றுகிறது? (அருள்)
எனக்கு என்ன தோன்றுகிறது என்றால், இந்த சிலை செய்தவன் மிக உயரமாய் இருப்பானு தோணுது! (வந்தி)
உண்மைதான்! அவர்களின் மனம் மிக உயர்ந்ததாய் இருந்திருக்க வேண்டும். இல்லையென்றால் இத்தனை பெரிய சிலையை அவர்களால் உருவாக்கியிருக்க முடியாது. (அருள்)
எனக்கு எந்த ராஜியமும் தேவைப்படவில்லை, நாராயணனை தவிர வேறு தெய்வத்தை நான் வணங்குவதில்லை.
பன்னிரெண்டு அல்லி மலர்கள் அங்கு அடுக்கி வைத்துள்ளனர்.
புத்தரின் காலடியில் உள்ள அந்த அல்லி மலர்களை கண்டால் தங்களுக்கு என்ன தோன்றுகிறது? (அருள்)
இருவரும் யோசிக்க,
சரி! என்னுடன் வாருங்கள். அதை பற்றிக் கூறுகிறேன். (அருள்)
என்று கூறி அங்கிருந்து அழைத்துச் செல்கிறார் இளவரசர்.


அல்லி மலர் இரவை குறிப்பிடுகிறது. அதன் எண்ணிக்கை நேரத்தை குறிப்பிடுகிறது.
இளவரசே! அதோ நமக்கு அழைப்பு வந்துவிட்டது.


தேவப்ரியா! வருக! வருக! தங்களை எதிர் நோக்கி வைதுல்ய பிக்ஷு சங்கம் காத்திருக்கிறது. மகா தேரோ குருவும் தங்களுக்காக விஜயம் செய்திருக்கிறார்.
அப்படியா! மிக்க மகிழ்ச்சி. (அருள்)

இளவரசருக்காக காத்திருந்த புத்த சந்யாசி, அவர்களை வரவேற்று குளக்கரையில் ஒரு குறிப்பிட்ட இடத்தில் நிற்கும்படி கூறிவிட்டு, அவர் மண்டபத்தின் படிக்கட்டின் கைப்பிடியில் அமைந்திருக்கும் தாமரை மொட்டை திருக, என்ன ஆச்சரியம்! அப்போது அவர்கள் நிற்கும் இடத்தில் ஒரு ரகசிய வழி வருகிறது.







அடிகளே! இந்த சிறுவனுக்காக மகான்கள் வருகை தந்திருப்பது, என் முன்னோர்கள் செய்த பாக்கியம். (அருள்)
இளவரசே! தங்களுடன் வந்திருப்பவர்கள் தங்களின் பூரண நம்பிக்கைக்கு உகந்தவர்களா? கொடுத்த வாக்கைத் தவறாது நிறைவேற்றக் கூடியவர்களா? (புத்த சந்யாசி)
அடிகளே! என்னுடைய கரங்கள் இரண்டையும் எப்படி நான் நம்புகிறேனோ, அப்படியே இந்த நண்பர்களையும் நம்புகிறேன்!
இவர்கள் புத்த சந்யாசிகள்தானா? இல்லை சந்யாசியை போல் உடை அணிந்தவர்களா?
என்று எண்ணியபடி ஆழ்வார்க்கடியான் புத்த சந்யாசியை பின் தொடர்ந்து செல்கிறான்.


என்ன ஒரு நம்பிக்கை! முன் பின் தெரியாத எங்கள் மீது இவ்வளவு நம்பிக்கை வைத்திருக்கிறாரே! அது எங்கள் மேல் வைத்திருக்கும் நம்பிக்கையா? அல்லது தன் மேல் இருக்கும் தன்னம்பிக்கையா? (வந்தி)


இவ்வளவு ஆழத்தில் பாறைகளை குடைந்து இப்படிபட்ட இடத்தை உருவாக்கியவர்கள் மனிதர்களாகத்தான் இருப்பார்களா?
ஒரு வேளை பழங்காலத்தில் இங்கு இராட்சசர்கள் இருந்ததாக கூறுகிறார்களே, இது ஒரு வேளை அவர்களின் வேலையாக இருக்குமோ?
என்று நினைத்தபடி ஆழ்வார்க்கடியானும், வந்தியத்தேவனும் இளவரசருடன் புத்த சந்யாசியை பின் தொடர்ந்து செல்கின்றனர்.


மூவரும் இறங்கி வந்த பின், புத்த சந்யாசி ஒரு கைப்பிடியை பிடித்து திருக, ரகசிய பாதையின் வழி மூடிக் கொள்கிறது.
ஏன் அப்படி கேட்டேன் என்றால், இந்த மகா போதி விஹாரத்துக்கு மட்டும் எவ்வித சேதமும் இதுவரை ஏற்படவில்லை. ஏனெனில் இங்கே வரும் வழி இவ்விடத்தில் தற்சமயம் கூடியிருக்கும் புத்த சங்கத் தலைவர்களுக்கு மட்டுமே தெரியும். எங்களில் ஒருவர் வழி காட்டாமல் இங்கே யாரும் வர முடியாது. இலங்கை மன்னர்கள் தங்கள் வாழ்க்கையில் ஒரு தடவை புத்த சங்கத்தாரால் முடி சூடிக் கொள்வதற்கு மட்டுமே இங்கு அழைக்கப்படுவார்கள். இங்கே தாங்கள் வந்தது, போனது, இங்கே நடந்தது எதை பற்றியும் வெளியில் யாருக்கும் சொல்லக் கூடாது. அதே போல் தாங்கள் நண்பர்களும் இதைப் பற்றி வெளியில் பேச கூடாது.
இளவரசர் இப்படி ஆபத்தான விஷயங்களில் எல்லாம் சாதாரணமாக இறங்கி விடுகிறாரே!? அப்போது என்னவென்றால் எதிரியின் கோட்டையான சிம்மகிரி கோட்டைக்கு தன்னந்தனியாக சென்று வந்தார்! சோழ குலம் வீரத்துக்கு பேர் போன குலம் என்பது இவரை பார்த்தாலே தெரிந்துவிடும்.


எப்பா! எவ்வளவு பெரிய புத்த
பெருமானோட சிலை! இராவணன்
காலத்திலிருந்தும் சரி, அதற்கு
முன்பிருந்தும் இந்த தேசத்தில் ஓயாது
போர் நடந்து கொண்டுதான் இருக்கிறது.
அப்படி இருக்கையில் இப்படிப்பட்ட கலை
வண்ணம் பொருந்திய இடத்தை
இவர்களால் எப்படி உருவாக்க முடிந்தது!
!


குருநாதரிடம் சொல்லி எப்படியாவது
இதையெல்லாம் விட உயரமான ஒரு சிலையை,
சோழ நாட்டில், நாராயண மூர்த்திக்கு எழுப்பச்
செய்ய வேண்டும். குருநாதருக்கு
சக்கரவர்த்தியிடம் இருக்கும் செல்வாக்குக்கு
ஒரு வார்த்தை சொன்னால் போதும்.


இளவரசர் பொன்னியின் செல்வர் வாழ்க!
சுந்தர சோழரின் புதல்வர் வாழ்க!!
சிபி சக்கரவர்த்தியின் வழி வந்த சோழ சிகாமணி அருள்மொழி வர்மர் வாழ்க! வாழ்க! வாழ்க!!
பொன்னியின் செல்வரே! வருக! வருக!


சாது! சாது!
சாது! சாது!
தங்கள் வருகையினால் இந்த மகாபோதி சங்கம் மிக்க மகிழ்ச்சி அடைந்திருக்கிறது. நாங்கள் குறிப்பிட்ட நிபந்தனைக்கெல்லாம் ஒப்புக்கொண்டு பல சிரமங்களுக்கு உட்பட்டு வந்திருக்கிறீர்கள். புத்த பகவானுடைய கருணை தங்களிடம் இருப்பதற்கு இதுவே சாட்சி.


மகா குருவே! அடியேன் புத்த சங்கத்தாருக்கு இன்னும் ஏதேனும் சேவை செய்ய கூடியதாக இருந்தால், கருணை கூர்ந்து கூறுங்கள்.


ஆம் இளவரசே! புத்த சங்கம் மேலும் தங்களுடைய சேவையை நம்பிக்கையுடன் எதிர்பார்க்கிறது.


இங்கு கூடியிருக்கும் சாதுக்கள் அனைவரும் ஒன்றை தெரிந்து கொள்ள வேண்டும். கங்கை பாயும் வங்க நாட்டிலிருந்து வந்த விஜயராஜன் ஸ்தாபித்த இந்த வம்சத்தில் எத்தனையோ மகா ராஜாக்கள் தோன்றினார்கள். தர்மத்தையும் பரிபாலித்தார்கள். ஆனால், பிற்காலத்தில் வந்த வம்சம் பல கொடிய பாவங்களைச் செய்து தேவ சாபத்துக்கு ஆளாகிவிட்டது. அதில் கடைசியாக முடி சூடிய மகிந்தன் அதிக பாவங்கள் செய்து சிம்மாசனத்தை ஏற்கும் தகுதியை இழந்துவிட்டான். அவனுக்கு சந்ததியும் இல்லை. ஆகையால் இலங்கை ராஜ வம்சம் மாற வேண்டும் என்பது தேவர்களின் கட்டளை. அது நடந்தே தீரும்.
சாது! சாது!
சாது! சாது!
ராஜ வம்சம் மாறும் போது புதிய வம்சத்தின் முதல்வனை தேர்ந்தெடுக்கும் உரிமை இந்த சங்கத்துக்கு உண்டு. தாங்கள் சம்மதித்தால் இன்று இரவே முடிசூட்டு விழா நடத்திவிடலாம்.


இதோ! ஆயிரம் ஆண்டுகளாக அரசர்களை சிருஷ்டித்த சிங்காதனம் தங்களுக்காக காத்திருக்கிறது.
இலங்கை இராஜ வம்சத்ததைச் சேர்ந்த மன்னர்கள் அனைவரும் இந்த சிங்காதனத்தில் அமர்ந்து முடிசூட்டிய பிறகுதான் அங்கீகரிக்கப்பட்ட அரசர்களானார்கள்.


இந்த வாய்ப்பை மட்டும் இளவரசர் ஏற்றுக் கொண்டார் என்றால் இலங்கை நம் கைவசம். போரிடாமல் கிடைப்பதென்றால் சும்மாவா!
ஆஹா! இப்படிப்பட்ட வாய்ப்பு யாருக்கு கிடைக்கும்.


மகான்களே! உங்களை நமஸ்கரிக்கிறேன். இந்த சிறுவனிடம் எல்லையில்லா அன்பும், நம்பிக்கையும் வைத்து இந்த புராதன சிங்காதனத்தை எனக்கு அளிக்க முன்வந்த உங்கள் பெருந்தன்மையை போற்றி வணங்குகிறேன்.
என் தந்தை சுந்தர சோழ சக்கரவர்த்தியின் கட்டளைக்கு உட்பட்டு நான் இங்கே வந்தேன். அவருடைய விருப்பத்தை அறியாமல் என்னால் எதுவும் செய்ய இயலாது.


இந்த கலியுகத்தில் இப்படியெல்லாம் கூட ராஜ குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் இருப்பார்களா என்ன? மக்கள் ஏன் இவரைக் கொண்டாடுகிறார்கள் என்பது இப்பதான் புரியுது!
இளவரசர் எதற்காக நல்ல வாய்ப்பை வேண்டாம் என்று சொல்கிறார்!


சோழ நாட்டை ஆள்வோரின் கட்டளைக்கு நான் கட்டுப்பட்டவன். அவர்களுடைய கட்டளையின்றி நான் இந்த சிங்காதனத்தை ஏற்றுக் கொண்டால் தேச துரோகியும், ராஜ துரோகியும் ஆவேன். (அருள்)
அவ்வாறு தாங்கள் கருதுவதாக இருந்தால், தஞ்சாவூருக்கு தூது கோஷ்டி ஒன்றை அனுப்ப நாங்கள் சித்தமாயிருக்கிறோம். தாங்கள் தந்தையார் புத்த தர்மத்தில் மிக பற்று கொண்டவர். எங்கள் வேண்டுகோளை நிராகரிக்கமாட்டார்.


அப்படியே என் தந்தை சம்மதித்தாலும், இந்த நாட்டின் மக்களின் சம்மதத்தை கேட்காமல் ராஜ்யத்தை விநியோகிக்க யாருக்கு உரிமை உண்டு?
தங்களை அரசராக பெறுவதை பெறற்கரிய பேறாக இந்நாட்டு மக்கள் கருதுவார்கள்.
எல்லோரும் சம்மதிக்கலாம். மகிழ்ச்சியும் அடையலாம். இந்த உலகில் யாருடைய விருப்பத்தையும் காட்டிலும் நான் அதிகமாக மதிப்பது என் தமக்கையாரின் விருப்பத்தையே. என் அன்னை என்னை பெற்றாள். பொன்னி நதி என் உயிரைக் காப்பாற்றினாள். ஆனால் என் தமக்கை என் அறிவை வளர்த்து அகக் கண்களை திறந்தார். அப்படிப்பட்டவருடைய விருப்பத்தைக் காட்டிலும் என் உள்ளத்தின் உள்ளே ஒலிக்கும் குரலின் கட்டளையே எனக்கு மேலானது.
மகா புருஷர்களே! தாங்கள் இச்சிறுவனுக்கு மனமுவந்து அளிக்கும் மகா பாக்கியத்தை ஏற்றுக் கொள்ளும்படி என் உள்ளக் குரல் எனக்குச் சொல்லவில்லை. அதனால் தயவு செய்து இச்சிறுவனை மன்னித்து அருளுங்கள்.


இளவரசே! தாங்கள் கூறிய மறுமொழி எனக்கு அதிக வியப்பை அளிக்கவில்லை. ஒருவாறு எதிர்பார்த்தேன். இதனாலேயே இந்த இலங்கை சிம்மாசனத்தில் ஏற எவரிலும் அதிக தகுதி வாய்ந்தவர் தாங்கள் என்று ஏற்படுகிறது. ஆனால், நாங்கள் தங்களை வற்புறுத்தவும் விரும்பவில்லை. யோசிப்பதற்கு அவகாசம் கொடுக்கிறோம். ஓராண்டுக்குப் பிறகு இதே மாதிரி ஒரு நாள் தங்களுக்குச் சொல்லி அனுப்புகிறோம். அப்போது தாங்கள் முடிவான கருத்தை தெரிவிப்பீராக!


ஒரு முக்கியமான விஷயம். இங்கே தாங்கள் வந்தது, போனது பற்றி வெளியில் சொல்லக் கூடாது. தங்களுடைய நண்பர்களும் சொல்லக் கூடாது. சொன்னால் மிகக் கடுமையான தேவ சாபத்துக்கு உள்ளாகும்படி நேரிடும்!
என்று கூறி விடை கொடுத்து அனுப்புகிறார் தலைமை பிக்ஷு.


மகிந்தலை
தங்களுக்கு இலங்கை சிம்மாசனம் வேண்டாம் என்றால், அதை தாங்கள் எனக்காவது சிபாரிசு செய்திருக்கலாம் அல்லவா!


இப்படி விளையாட்டாக வந்தியத்தேவன் கேட்டுக் கொண்டிருக்கும் வேளையில், புழுதியை கிளப்பிக் கொண்டு ஒரு படை இவர்களை நோக்கி வருகிறது. அதை மூவரும் கவனிக்கிறார்கள்.




ஆகா! இளவரசர் எந்த பாதுகாப்பும் இல்லாமல் நம்முடன் வந்திருப்பதை அறிந்து ஒற்றர்கள் யாரோ துப்பு கொடுத்துவிட்டார்களா?
என்ன வேண்டும்? ராஜ்யமா?
அப்படியென்றால் என்னுடன் யுத்தம் செய்து ராஜ்யத்தை பெற்றுக் கொள்ளும்!
ம்...
பிடியும் இந்த வாளை!


இளவரசர் நாம் விளையாட்டாக கேட்டதை, இப்படி விபரீதமாக புரிந்து கொண்டாரே!?
சும்மா கிடைத்துவிடுமா ராஜ்யம்?
டங்
ம்... எங்கே காட்டும் உம்முடைய வானர் குலத்து வீரத்தை!


டங்
டிஷ்ம்...
எதிரில் இருப்பவர் இளவரசராக இருந்தால் என்ன? சக்கரவர்த்தியாக இருந்தால்தான் என்ன? நம் சுயமரியாதைக்கு இழுக்கு ஏற்பட்ட பின் பொங்கி எழ வேண்டியதுதான்.


இளவரசரை தாக்க ஆக்ரோஷமாக ஓடி வருகிறான்.
இளவரசே! எனது தாக்குதலை தடுக்க தயாராக இருங்கள்...
டங்
டிங்


இளவரசரும் வந்தியத்தேவனும் கடுமையான வாட் போர் புரிகிறார்கள்.
இவர்களின் வாட் போரை பார்க்க மக்கள் கூட்டமே கூடிவிட்டது.


புரிந்துவிட்டது! எதற்காக இளவரசர் திடீரென்று வந்தியத்தேவனை வலுச்சண்டைக்கு அழைத்தார் என்று.


எதற்கும் குதிரைகளை சாலையின் குறுக்கே நிற்க வைத்து பிடித்துக் கொள்வோம். வருவது யாராக இருந்தாலும் அப்படியே நமக்கு பின்னால் நிற்கட்டும்.


நாம் என்னவோ ஏதோவென்று நினைத்தோம்! ஆனால், இளவரசரின் வாளுக்கு இணையாக சுழல்கிறதே வந்தியத்தேவனின் வாள்!


டங்
இப்படிபட்ட வாட் போரை பார்த்து எத்தனை காலமாகிறது!
இந்த அதிக பிரசங்கி இளவரசரையும் விட்டு வைக்கவில்லையா?!


இவனை ஏதாவது செய்தாக வேண்டும்...
பார்த்திபேந்திரா! நீ கொஞ்சம் பொறு. இப்படிபட்ட வாட் போரை பார்த்து வெகு காலம் ஆகிறது!
ஆம்பல் மலரை கையில் பிடித்தபடி பூங்குழலி!
இளவரசருக்கு ஓலை கொண்டு வந்திருப்பதாக சொல்லி விட்டு, இளவரசிடமே சண்டைக்கு சென்றிருக்கானே! இவனிடம் நாம் ஏமாந்து போய்விட்டோமோ?


ஆ! பூங்குழலி!!
டணால்...
வந்தியத்தேவன் கவனம் சிதறிய அந்த நொடி போதுமானதாக இருந்தது, இளவரசர் வந்தியத்தேவனின் வாளை தட்டிவிடுவதற்கு....


ச்சே! இப்படி இளவரசரிடம் தோற்றுவிட்டோமே! நான் தோற்றதும் அல்லாமல் என் குலத்துக்கும் அல்லவா இழுக்கு தேடிவிட்டேன்...
அற்புதம் நண்பரே! அற்புதம்!!


அற்புதம்! அற்புதம்! அருமையான வாள் வீச்சு.
அய்யா, வந்தியத்தேவரே! தாம் ஒன்றும் என் வாள் வீச்சுக்கு தோற்கவில்லை. அந்த பெண்ணின் சேல் விழியின் வீச்சுக்கு அல்லவா தோற்றீர்கள்!
இளவரசே! வாருங்கள் இந்த மண்டபத்தில் அமர்ந்து பேசுவோம். (பெரிய வேளார்)
திடீரென்று எதற்காக நம்மிடம் சண்டை பிடித்தார்? நம்மை போலவே அவரும் அந்த பெண்ணை கவனித்து இருக்கிறார். ஆனால், அவரின் வாள் நழுவவில்லை. இனி பெண்களை காணும் பொழுது நம் மனதை சிதறவிடக் கூடாது.


ஐயா சேனாதிபதி! தாங்கள் என்னை இவ்வளவு அவசரமாக தேடிவர காரணம்?
வாருங்கள்! அந்த மண்டபத்தில் அமர்ந்து பேசுவோம்.
பூங்குழலி மட்டும் தனியாக மரத்தடியில் நின்று விடுகிறாள்.
பெரிய இடத்து சவகாசமே இப்படித்தான் போலும்! வேலை முடிந்ததும் ஆளை மறந்துவிடுவது.
ஆளுக்கு ஒரு பக்கம் என்னை வரச் சொன்னால் என்ன செய்வது?


இளவரசே! நான் கூறும் கருத்தையேதான் முதன் மந்திரியும் கூறுகிறார். அதனால் தாங்கள் சில காலம் இலங்கையில் தங்கியிருப்பதுதான் நல்லது! (பெரிய வேளார்)
இளவரசே! தங்கள் தமையனாரும், தங்கள் பாட்டன் மலையமானும் தங்களை கையோடு அழைத்து வரும்படி கூறியிருக்கிறார்கள். தாங்கள் வந்தவுடன் எதிரிகளின் கொட்டத்தை அடக்கிவிட்டு தங்களிடம் ஆட்சி பொறுப்பை ஒப்படைத்துவிட்டு, வடநாடு மீது படையெடுத்து செல்வதாக திட்டமிட்டிருக்கிறார் கரிகாலர். (பார்த்தி)
அதை நான் ஒரு போதும் ஒப்புக் கொள்ள மாட்டேன். எனக்கு ஆட்சி அதிகாரத்தில் விருப்பமில்லை. என் தமையனோ அல்லது என் சிறிய தந்தை மதுராந்தகரோ ஆட்சி செய்யட்டும். அது பெரியவர்கள் கூடி எடுக்க வேண்டிய முடிவு...
என்று கூறி அமைதி ஆனார் அருள்மொழி.
அப்படியென்றால் அந்த ஓடக்காரப் பெண் கூறுவதை கேட்டுவிட்டு, தாங்கள் முடிவு செய்யலாம்.


திருமலை! அந்த ஓடக்காரப் பெண்ணை நான் அழைத்ததாக அழைத்து வா.
ஏய் பெண்ணே! உன்னை சேனாதிபதி அழைக்கிறார்.
நான் கூப்பிடுவது உன் காதில் விழவில்லையா?
நான் ஒன்றும் செவிடு இல்லை... (பூங்குழலி)
பின் எதற்காக நான் கூப்பிட்டும் அசையாமல் இங்கேயே நிற்கிறாய்!
அவர்களுக்கு இப்பொழுதுதான் என் நினைவு வந்ததா.... என்ன?
அதையெல்லாம் நீ அவர்களிடம் பேசிக் கொள். விரைந்து என்னுடன் வா!
பெண்ணே! நீ யானை இறவில் பார்த்ததையும், கேட்டதையும் இளவரசிடம் கூறு. (பெரிய வேளார்)
தொண்டைமான் ஆற்று முகத்துவாரத்தில் பார்த்ததையும் இளவரசிடம் கூறு.


ஓகோ! தாங்கள் கூறிய பெண், சமுத்திர குமாரிதானா! சமுத்திர குமாரி... நீ என்ன பார்த்தாயோ சுருக்கமாகச் சொல்.
ஆகா! இளவரசர் நம்மை மறந்திருப்பார் என்றல்லவா நினைத்தோம். அவர் நம்மை மறக்கவில்லை.
சமுத்திர குமாரி! நீ பார்த்ததையும், கேட்டதையும் தயங்காமல் கூறு. (பெரிய வேளார்)
இதோ இருக்கும் உங்கள் நண்பரை மாதோட்டத்தில் கொண்டு வந்து விட்டு, நான் செல்கையில்...


"அலை கடலும் ஒய்ந்திருக்க அகக்கடல்தான் பொங்குவதேன்?
நிலமகளும் துயிலுகையில் நெஞ்சகந்தான் விம்முவதேன்?"
வேண்டாம்! இதையெல்லாம் கேட்கும் சூழ்நிலையில் இளவரசர் இல்லை. ஆகையால், சுருக்கமாக அவருக்கு தேவையான விவரத்தை மட்டும் கூறிவிட வேண்டியதுதான்.



பூங்குழலி! மேற்கொண்டு சொல். (அருள்)
என்றதும் பூங்குழலி மீண்டும் சுயநினைவுக்கு வந்தாள்.
ஆங்!... அப்போது எனக்குப் பின்னால் இரண்டு மாபெரும் நாவாய்கள் வருவதை உணராதிருந்தேன்.


இரண்டும் என்னை கடந்து செல்லும் பொழுதுதான் சுயவுணர்வு பெற்றேன். இரண்டு பெரும் யானையின் நடுவே சிக்குண்ட முயல் போல் என் படகு நாவாயினால் ஏற்பட்ட அலையினால் சிக்குண்டு தள்ளாடியது... நான் கோபத்தினால் அந்த மாலுமியை மனதிற்குள் சபித்தேன்.
அந்த நாவாயை கூர்ந்து நோக்கும் பொழுதுதான் அதில் புலிக் கொடி பறப்பதைக் கண்டு அது சோழ நாட்டை சேர்ந்தது என்று அறிந்தேன்.
அது எங்கு செல்கிறது என்று பார்த்தால். அந்த இரண்டு மரக்கலங்களும் யானை இறவுத்துறையை நோக்கி சென்றது.


யானை இறவுத்துறை
அதை பின் தொடர்ந்து சென்றேன். தொடர்ந்து படகு வலித்ததில் களைப்பு அடைந்திருந்தேன். ஆகையால் அங்கிருந்த மரத்தில் ஏறி சிறிது ஓய்வு எடுத்தேன்.
அப்போது, அந்த மரக்கலத்தில் வந்த சோழநாட்டு வீரர்கள் பேசிய படி நான் இருக்கும் மரத்தின் அருகாமையில் வந்தார்கள். அவர்களின் குரல் கேட்டு விழித்துக் கொண்டேன். அவர்கள் அணிந்திருந்த உடையிலிருந்து தெரிந்து கொண்டேன், அவர்கள் பழுவேட்டரையர்களின் ஆட்கள் என்று.
இந்த கடல் பயணத்திற்கே உனக்கு இப்படி தலைச் சுற்றுகிறது என்கிறாயே? நான் சொல்லப் போகிற விஷயத்தை கேட்டா மயக்கம் போட்டே விழுந்துடுவ!
அப்படி என்ன தலை கிறுகிறுக்கிற விஷயம்? அத முதல்ல சொல்லு.
நாம் ஏன் வந்திருக்கிறோம்னு தெரியுமா?
அது தெரியாதா? இலங்கை யுத்தத்துக்குதானே!


அதுதான் இல்லை! நம்ம சின்ன இளவரசர் அருள்மொழி வர்மரை, கைது செய்து கொண்டு போக வந்திருக்கோம்.


நிஜமாகவா சொல்ற? என்ன அநியாயம்! நம்ம எஜமானருக்கு பைத்தியம் ஏதாவது பிடிச்சிருக்கா என்ன?


இதெல்லாம் எங்க போய் முடியுமோ? தெரியல...!
எல்லாம் அந்த இளையராணியின் வேலை.


பழுவேட்டரையர்கள் இந்த அளவுக்கு போய்விட்டார்களா! இந்த விஷயத்தை உடனே பொன்னியின் செல்வரிடம் கொண்டு போய் சேர்த்துவிட வேண்டும். என்று ஓடோடி வந்தேன்.


இந்த பெண் கூறியதிலிருந்தும், தாங்கள் கூறியதிலிருந்தும் எனக்கு ஒரு விஷயம் தெளிவாக தெரிகிறது.
நான் உடனே தஞ்சைக்கு செல்ல வேண்டும் என்பதும், இம்மாதிரியான நேரங்களில் என் தந்தையின் பக்கத்தில் நான் இருப்பது அவசியம் என்பதும்.
இளவரசே!
பார்த்திபேந்திரரே! தாங்கள் என் தமையனின் ஸ்தானத்தில் உள்ளவர். ஆனால், தாங்களின் பேச்சை கேட்கும் சூழ்நிலையில் நான் இல்லை.
இளவரசே! அந்த பாவிகள் சூழ்ச்சி செய்து தாங்களை சிறையில் அடைத்துவிட்டால்?
என்னை சிறையில் அடைக்க துணியும் ஆண்மகன் அங்கு யார் இருக்கிறார்கள்?


பெண்ணே! நீ என்னை, அவர்கள் சிறைபிடிக்க வந்து காத்திருக்கும் இடத்திற்கு அழைத்துச் செல்வாயா?
பெண்ணே! முடியாது என்று சொல்.
பெரிய வேளாரை ஒரு பார்வை பார்க்கிறார். இளவரசரின் பார்வையைக் கண்டு அமைதியாகிறார் பெரிய வேளார். (வருங்கால மருமகப்பிள்ளை அல்லவா!)
இளவரசருடன் பயணம் செய்யும் இப்படிப்பட்ட சந்தர்ப்பம் இனி எப்போது கிடைக்கும்!


வல்லத்து அரசே! நாம் புறப்படலாம் அல்லவா?
புறப்படலாம் இளவரசே!
நான் தயார்!
இளவரசரின் கட்டளையை மீற முடியாமலும், அதே சமயத்தில் இளவரசருடன் பயணம் செய்யலாம் என்ற ஆசையினாலும் இளவரசரை அழைத்துச் செல்கிறாள் பூங்குழலி.
பெரிய வேளாரும், அவருடன் வந்த படையும் இளவரசரை பின் தொடர்ந்து செல்கிறது.
வழியில்.....
ஏனப்பா! அண்டை நாட்டு இளவரசரை இவ்வளவு ஆர்வமா பார்க்கிறாய்?
ஆமா! நம்ம ராஜா மகிந்தன் தோற்று பின் வாங்கும் போது என்ன செய்தாரு? ஏரி, குளம் எல்லாம் உடைச்சி விட்டுல்ல போனாரு. மக்கள் துன்பப் படுவார்களே என்று யோசிச்சாரா? யாரு மக்களுக்கு நல்லது செய்றாங்களோ அவங்கதான் நம்ம ஆளு.


இளவரசர் அருள்மொழி அந்த வழியாக வரப்போகிறார் என்று தெரிந்து, மக்கள் கூட்டம் கூட்டமாக இளவரசரை வரவேற்க ஆங்காங்கே தயாராக காத்திருக்கிறார்கள்.
இளவரசே! எங்கள் கிராமத்தின் உபசரிப்பை ஏற்று, ஒரு சில நாள் எங்கள் கிராமத்தில் தங்கிச் செல்ல வேண்டும்.
உங்கள் அன்பையும், உபசரிப்பையும் நான் என்றும் மறக்க மாட்டேன்!
என் தந்தையின் உடல்நிலை குறித்து, நான் உடனே என் தாய்நாடு திரும்புகிறேன். அதற்கு தங்களின் அனுமதி வேண்டுகிறேன்.
ஆகா! இது பார்த்திபேந்திரனும், பெரிய வேளாரும் சேர்ந்து செய்த வேலைதான்.
இளவரசரை சோழ நாட்டு மக்கள் ஏன் கொண்டாடுகிறார்கள் என்பது இப்போதுதான் புரிகிறது!


இளவரசரும் அவருடன் வருபவர்களும் கிராமங்களை கடந்து காட்டு பாதைக்கு வருகிறார்கள். ரவிதாசன் இலங்கை வந்ததும், இலங்கை மன்னன் மகிந்தனின் உதவியை நாடுகிறான். அவன் அருள்மொழி வர்மரை கொல்ல தனது ஆட்களை உடன் அனுப்புகிறான்.
இன்னும் நெருங்கி வரட்டும்.
ம்... தயாராக இருங்கள்.
முதலில் நான் அம்பை விடுகிறேன். அதற்கு அவன் தப்பினால், அவன் சுதாரிப்பதற்குள் நீ விடு மற்றொரு அம்பை. இன்று அவனுக்கு இறுதி நிச்சயம்!


இளவரசர் மீது அம்புகள் சரமாரியாக பாய்கின்றன.
அம்புகள் தன் மேல் படாதவாறு நகர்ந்து கொள்கிறார்.
இளவரசருக்கு முன்னே சென்று கொண்டிருந்த பெரிய வேளாரும், வந்தியத்தேவனும் தன் குதிரையின் கடிவாளத்தை பிடித்து இழுத்து நிறுத்தினார்கள்.
தம்பி! நீ அந்த பக்கம் பாரு, நான் இந்த பக்கம் பார்க்கிறேன். அவர்களுக்கு நாம் இங்கேயே இன்றே சமாதி கட்டி விடுவோம்.
அய்யோ! இந்த கிழவன்கிட்ட மாட்டினா அவ்வளவுதான்.


பெரிய வேளாரின் படை சதிகாரர்களை பிடிக்க நாலா திசையிலும் விரைகிறது.
போ! போ! வேகமா போ! அந்த கிழவன்கிட்ட மாட்டினா அவ்வளவுதான்.
வேகமாக போ....! பின்னாடி வராங்க வேகமா போ...!
ஏன்டா துங்கா... நான் அப்படி, நான் இப்படின்னு பெருமை பேசின? ஒழுங்கா குறி பார்த்து அடிக்க மாட்டியா?
துங்கா நீ மட்டும் என்ன ஒழுங்கா? போ! போ!


இளவரசரை களத்துல வெற்றி பெற முடியல, மறைந்திருந்து தாக்குறீங்களா? வாங்கடா... உங்களுக்கு இங்கேயே சரியான பாடம் புகட்டுகிறேன்!


தம்பி! இளவரசர் ஏறி வந்த யானைக்கு மதம் பிடித்துவிட்டது. உடனே வாங்க...
தப்பி ஓடிவிட்டார்கள் கோழைகள். அடுத்த முறை மாட்டினீங்க, அவ்வளவுதான்!


யானைக்கு மதம் பிடித்துவிட்டது. அதை அடக்கி இளவரசரை காப்பாற்ற அனைத்து திசைகளிலிருந்தும் வீரர்கள் முயற்சிக்கிறார்கள்.
இளவரசரை யாராவது காப்பாற்றுங்கள்! (பெரிய வேளார்)


வேல் எரியாதே! இளவரசர் மேல் பட்டுவிடப் போகிறது.


சமுத்திர குமாரி பயமாக இருந்தால் இருக்கையை நன்றாக பிடித்துக் கொள். (அருள்)
ஐயா! தாங்களே கூறிவிட்டீர்களே சமுத்திர குமாரி என்று. சமுத்திர குமாரிக்கு பயம் ஏது? (பூங்குழலி)


ஏன்டா நீ என்ன நினைக்கிற? உண்மையாலுமே யானைக்கு மதம் பிடிச்சிருக்கும்னு நினைக்கிற?
அதான் இல்ல! நம் எஜமான், இளவரசரோட பயணத்தை தாமதம் பண்ணுறத்து பல முயற்சி செய்தாரு. அதை புரிஞ்சிகிட்ட இளவரசர் இதான் சமயம் என்று யானைக்கு மதம் பிடிக்கிற மாதிரி ஓட வைச்சிட்டாரு!


நாம இளவரசரை பின் தொடர்ந்து செல்வது சுத்த தண்டம். அந்த யானைக்கு மதமும் பிடிக்கல ஒன்னும் பிடிக்கல. எப்படி சொல்றேன்னா...
இளவரசருக்கு யானைகளோட மொழி தெரியும்னு எனக்கு தெரியும்!
நிஜமாவா சொல்றா..!
இளவரசரை கைது செய்து கொண்டு செல்ல காத்திருக்கும் தொண்டைமானாறு முகத்துவாரத்தை நெருங்கி விட்டார்கள் இளவரசரும் பூங்குழலியும்..

சுந்தரசோழ சக்கரவர்த்தி தன் இரு மகன்களையும் தஞ்சை வரும்படி பல ஓலைகள் அனுப்பியும், அவர்கள் வராததை எண்ணி பெரிய பழுவேட்டரையரிடம் வருத்தப்படுகிறார். அப்போது அங்கு சக்கரவர்த்தியை சந்திக்க புத்த சங்கத்தார் வருகிறார்கள். இலங்கை மன்னன் மகிந்தனின் ஆட்சி சரியில்லை என்ற காரணத்தினால், அவர்கள் இலங்கை சிம்மாசனத்தை அருள்மொழி வர்மர் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று சக்கரவர்த்தி சுந்தர சோழரை வேண்டுகிறார்கள். அதை அருகில் இருந்து பார்த்த பெரிய பழுவேட்டரையருக்கு ஒரு யோசனை தோன்றுகிறது. அருள்மொழி வர்மர் இலங்கை சிம்மாசனத்தை அபகரிக்க எண்ணியதாக குற்றச்சாட்டி இளவரசரை கைது செய்தாவது அழைத்து வரலாம் என்ற யோசனையை சக்கரவர்த்திக்கு பெரிய பழுவேட்டரையர் கொடுக்கிறார்.

ஏன் இந்த யோசனை என்ற எண்ணம் நம் எல்லோர் மனதில் எழுவது இயல்பு. சக்கரவர்த்தியிடமிருந்து சென்ற ஓலைகளை இளவரசர்களிடம் சேரவிடாமல், காஞ்சியில் கரிகாலனின் பாட்டன் மலையமானும், இலங்கையில் பெரிய வேளாரும் தடுப்பதாக பெரிய பழுவேட்டரையர் எண்ணுகிறார். அதனால் சக்கரவர்த்தியிடம் அப்படி கூற, தன் மகனை பார்க்க வேண்டும் என்ற ஆவலில் பொன்னியின் செல்வரை கை செய்து வர உத்தரவிடுகிறார் சக்கரவர்த்தி.

## தொண்டைமானாற்று முகத்துவாரம்

தொண்டைமானாறு முகத்துவாரம் எனப் பெயர் வந்த காரணத்தை தெரிந்து கொள்வோம்.

கதை நடக்கும் காலத்துக்கு மூந்நூறு வருஷத்துக்கு முன்னால் இலங்கை இளவரசனாகிய மானவன்மன் காஞ்சிபுரத்தில் வந்து சரண் புகுந்தான். அவனுக்கு இராஜ்யத்தை மீட்டு தருவதற்காக மாமல்ல சக்கரவர்த்தி ஒரு பெரும்படையை அனுப்பினார். அவர் அனுப்பிய படைகள் இந்தப் பிரதேசத்திலேதான் வந்து இறங்கின. அச்சமயம் தொண்டைமானாறு ஒரு சிறு ஓடையாகத்தான் இருந்தது. கப்பல்கள் வந்து நிற்பதற்கும் படைகள் இறங்குவதற்கும் சௌகரியமாக அந்த ஓடையை வெட்டி ஆழமாகவும், அகண்டதாகவும் மாற்றினார்கள். அதன் பிறகே அந்த ஓடை தொண்டைமானாறு என்று பெயர் பெற்றது. ஆறு கடலிலிருந்து உள்வாங்கி வளைந்தும் நெளிந்தும் ஆற்றின் இருபுறமும் மரங்கள் அடர்ந்து காணப்படுவதால், கப்பலை மறைத்து வைக்க ஏதுவாக இருக்குமென்று இந்த இடத்தை சோழநாட்டு மாலுமி தேர்ந்தெடுத்திருக்க வேண்டும்.


பூங்குழலி கூறிய இடத்திற்கு
இளவரசர் வந்து சேர்ந்துவிட்டார்.




நீ கூறியது போல் என்னை கைது செய்து, அழைத்துச் செல்ல வந்த எந்த மரக்கலத்தையும் இங்கு காணவில்லையே?
இளவரசே! நான் இங்குதான் பார்த்தேன்.
அப்போது அங்கு ஒரு கருப்பு அரேபிய குதிரையை எடுத்துக் கொண்டு இளவரசரை நோக்கி வருகிறாள் மந்தாகினி!
அந்த மூதாட்டி ஏதோ முக்கிய செய்தியோடு வருகிறார் போலும்.


மந்தாகினி அம்மையார்
இளவரசரிடம் ஏதோ
இடத்தை சுட்டிக் காட்ட,
அவரை பின் தொடர்ந்து
இருவரும் செல்கின்றனர்.


மந்தாகினி அம்மையார் காட்டிய இடத்தை பார்த்து இளவரசரும்,
பூங்குழலியும் அதிர்ச்சி அடைகின்றனர். ஒரு முரட்டு அரேபியர்
கூட்டம் சோழநாட்டு கப்பலை தாக்கியதும் அல்லாமல், சோழ நாட்டு
வீரர்களையும் கொன்று குவித்துவிட்டு சென்றிருக்கிறார்கள்.


நம் பொருட்டல்லவா இந்த வீரர்கள் உயிர் தியாகம் செய்திருக்கிறார்கள்.
சேனாதிபதியும் அவரது படையும் இளவரசரை தேடி வருகிறார்கள்.


இறந்து கிடக்கும் சோழ நாட்டு வீரர்களை பார்வையிடுகிறார் இளவரசர்.
யாரோ இவர்களை அசந்திருக்கும் நேரத்தில் தாக்கி இருக்க வேண்டும்.
தூரத்திலிருந்து ஒரு குரல்... இளவரசே! இளவரசே!
மூவரும் குரல் வந்த திசையை கண்டு ஓடிச் சென்று பார்க்கிறார்கள். கலபதி பலத்த காயம் பட்டு குற்றுயிராக இருக்கிறான்.


கலபதி என்ன நடந்தது?
தங்களுக்கு என்ன ஆயிற்று!
இந்த கொடூர செயலை செய்ய
துணிந்தவன் யார்?
(என்று கர்ஜிக்கிறார்.)
கலபதி என்பவன் அந்த மரக்கலத்தின் தலைவன்.
இளவரசே! என்னை
மன்னித்துவிடுங்கள்.
நான் தங்களுக்கு செய்த
துரோகத்துக்கான தண்டனையை
அனுபவித்துவிட்டேன்.
சோழநாட்டு
கலபதியாவது
எனக்கு துரோகம்
செய்வதாவது?
அய்யா! தாங்கள், தங்கள் கடமையைத்தான் செய்தீர்கள்.
சக்கரவர்த்தியின் உத்தரவைத்தான் நிறைவேற்ற
வந்தீர்கள். இதில் யாதொரு தவறும் இல்லை!
தங்களுடன் வந்த
மற்றொரு கப்பல் எங்கே?
நன்றாக வேண்டும்
இவர்களுக்கு!


கலபதியிடம், இளவரசர் என்ன நடந்தது? யார் அவர்களைத் தாக்கியது? போன்ற விவரங்களை கேட்டு அறிந்து கொள்கிறார்.
சேனாதிபதி இளவரசரை தேடி வருகிறார்


சேனாதிபதியை கண்டதும், இளவரசர் வந்த யானை பிளறி அழைக்கிறது.
இளவரசர் இங்கு எங்கேயாவதுதான் இருக்க வேண்டும்.


மனிதர்களின் பேச்சுக் குரலும், காலடிச் சத்தமும் கேட்டு, இளவரசர் சத்தம் வரும் திசையை பார்க்கிறார்.
அவர்கள் வருவதை பார்த்து மந்தாகினி ஓடி ஒரு மரத்தின் பின் ஒளிந்து கொள்கிறாள்.
அவள் வழக்கமாகவே மனிதர்களை பார்க்க விரும்புவதில்லை. அதனாலேயே பெரும்பாலும் காட்டில் அலைந்து திரிகிறாள்.
அவர்களை கூர்ந்து கவனிக்கிறாள் மந்தாகினி அம்மையார். யார் அவர்கள்? எதற்காக வருகிறார்கள்? என்பதை அவர்களை பார்த்தே, நோக்கத்தை புரிந்து கொள்வாள் மந்தாகினி.


எங்கே அந்த கூட்டத்தில் வானர்குலத்து வீரனை காணோம்!


அங்கு வீழ்ந்து கிடக்கும் கலபதியை கண்ட பெரிய வேளார்.
இவர்களுக்கு சரியான பாடம் புகட்டியது யார்?


அய்யா! உங்கள் பகைமையை காட்ட இது இடம் அல்ல.
வந்தியத்தேவன் எங்கே?
இளவரசே! நீரே அந்த அதிக பிரசங்கி செய்த வேலையை, இந்த வைஷ்ணவனிடம் கேளும்.


இளவரசே! உங்கள் யானை
மதம் பிடித்து ஓடியது. அடுத்து
நாங்கள் எல்லோருமே
உங்களை பின் தொடர
முயன்றோம். எங்களால் மதம்
பிடித்து ஓடும் யானையின்
பின்னால் வர முடியவில்லை.
ஆனால், எங்களை
முந்திக்கொண்டு அந்த
முந்திரிக் கொட்டை வந்தான்.


அப்போது, தொண்டைமானாற்று
முகத்துவாரத்திலிருந்து பார்க்கும் போது
சோழ நாட்டு கப்பல் ஒன்று கடலில்
புறப்பட்டது. அதை கண்டதும், தாங்கள்
அதில்தான் செல்கிறீர்கள் என்று
நினைத்து அப்போது புறப்பட்ட படகு
ஒன்றில் ஓடிச் சென்று ஏறி விட்டான், அந்த
படகில் தங்களைக் கொல்ல முயற்சித்த
பாண்டியநாட்டு ஆபத்துதவிகள்
இருப்பதாக கேள்விப்பட்டேன். (ஆழ்வார்)
தம்பி ஓடாதே,
நில்லு! நான்
சொல்றதை கேள்...
ஐயா! சேனாதிபதி நீங்கள்
அவனை கூப்பிடுவது வீண்.
அவன் நாம் சொல்றதை
கேட்க மாட்டான். அவன்
நினைச்சதைதான்
செய்வான். (ஆழ்வார்)




ஆகா! எனக்காக எப்படிப்பட்ட ஆபத்தில் சென்று சிக்கிக் கொண்டார் அவர்.
தளபதியாரே! நான் அந்த மரக்கலத்தை எப்படியாவது பிடிக்க வேண்டும். அதற்கு வழி இருக்கிறதா?
அப்போது இளவரசர் கூறியதை கேட்டுக் கொண்டே தூரத்தில் ஒரு படகு வருவதை கவனிக்கிறார் பெரிய வேளார்.
இளவரசே! அதோ பாருங்கள் ஒரு படகு, அவன் அந்த மரக்கலத்துக்குத்தான் சென்று வருகிறான் போலிருக்கிறது.


அவர்கள் நமக்காக காத்திருக்கிறார்கள் போலிருக்கிறதே!
வருகிறது முருகையன்தான் என்பதை இளவரசர் தூரத்திலிருந்து கவனித்துவிட்டார்.
அய்யா தளபதி! இவனை எனக்கு நன்கு தெரியும். இவன் கோடிக்கரை தியாக விடங்கரின் மகன்.
முருகையா! நீ எனக்காக ஒன்று செய்ய வேண்டும். என்னை உடனே அதோ நிற்கிறதே அந்த மரக்கலத்துக்கு அழைத்துச் செல்ல வேண்டும்.
உத்தரவு இளவரசே!


இளவரசே! அந்த மரக்கலம் புறப்பட்டுவிட்டது. இந்த சிறிய படகைக் கொண்டு அதை பிடிப்பது இயலாத காரியம். (பெரிய வேளார்)
எப்படியும் வல்லத்து இளவரசரை காப்பாற்றித்தானே ஆக வேண்டும்...


கவலையில்லை! நான் எதற்கும் முன்னேற்பாடோடுதான் வந்திருக்கிறேன். அதோ பார்த்திபேந்திரன் வருகிறான் பாருங்கள். அவன் கொண்டு வரும் அந்த பெரிய நாவாயைக் கொண்டு நாம் எளிதில் அந்த மரக்கலத்தை பிடித்துவிடலாம்.


அப்போது இவர்கள் நிற்கும் இடம் தெரிந்து,
தயாராக வந்து நிற்கிறான் பார்த்திபேந்திரன்.


இளவரசர் படகில் ஏறியதும்.
யாரும் என்னுடன் வரவேண்டாம். முருகையா, புறப்படு!


இளவரசர் தன்னுடன் யாரும் துணைக்கு வர வேண்டாம் என்று கூறி, முருகையனுடன் தனியாக பார்த்திபேந்திரன் கொண்டு வந்திருக்கும் கப்பலுக்கு செல்கிறார்.
முருகைய்யா! இது என் நண்பனின் உயிர் சம்மந்தப்பட்ட விஷயம். கொஞ்சம் படகை விரைவாக செலுத்து!


இளவரசர் வாழ்க!
ஈழம் கொண்ட வீரராதி வீரர் வாழ்க!!
இளவரசரின் வருகையை அறிந்து அவர் ஏறுவதற்கு ஏதுவாக நூல் ஏணி தொங்கவிட்டிருக்கிறார்கள். அதன் வழியாக ஏறி கப்பலுக்கு செல்கிறார் இளவரசர். அவரை காத்திருந்து வரவேற்கிறான் பார்த்திபேந்திரன்.
திருமலை! இளவரசர் பத்திரமாக கப்பலில் ஏறிவிட்டார் அல்லவா?
ஆம், ஐயா! பத்திரமாக ஏறிவிட்டார்.
மந்தாகினி அம்மையாரும், இவர்களை போலவே இளவரசர் பத்திரமாக கப்பலில் ஏறிவிட்டாரா? என்று மறைந்து நின்றபடி பார்த்துக் கொண்டிருக்கிறார்.


ஓய் வைஷ்ணவரே! நீராவது இளவரசருடன் சென்றிருக்கலாம் அல்லவா! என்னைத்தான் இளவரசர் தன்னுடன் வர வேண்டாம் என்று கூறிவிட்டார்.
எனக்கு இன்னும் கொஞ்சம் வேலை இங்கே இருக்கிறது.
இதைவிட அப்படி என்ன முக்கிய வேலை உன் குருநாதர் உனக்கு இட்டிருக்கிறார்?
ஈழத்து காடுகளில் அலையும் ஊமை பெண்ணை, அந்த மாதரசியை சோழ நாட்டுக்கு அழைத்து வரும்படி கூறியிருக்கிறார்.
அந்த ஊமைச்சியை அழைத்து வரும்படி கூறியதைவிட, புயல் காற்றை கட்டி இழுத்து வரும்படி உன் குருநாதர் உன்னிடம் கூறியிருக்கலாம். (பெரிய வேளார்)


ஊமை பெண்ணை பற்றி பேசிய உடன் அவருக்கு பூங்குழலியின் நினைவு வந்தது.
மொடவன் கொம்பு தேனுக்கு ஆசைப்பட்ட கதையா அல்லவா இருக்கு, இந்த பெண்ணோட ஆசை! இந்த பெண்ணை, இளவரசருடன் பழகுவதை இத்துடன் நிறுத்திக் கொள்ளச் சொல்ல வேண்டும்.
ஏய் பெண்ணே! இங்கே வா.
என்று சேனாதிபதி பூதி விக்கிரம கேசரி பூங்குழலியை அழைக்கிறார்.
சேனாதிபதி என்ன சொல்ல போகிறாரோ? அவர் வேண்டாம் என்று கூறியும் அதை கேளாமல் இளவரசரை அழைத்து வந்துவிட்டோம். (என்று எண்ணியபடியே அருகில் வருகிறாள்.)


பெண்ணே! சோழ நாட்டுக்கு நீ பெரும் உதவி செய்தாய். அதை இல்லை என்று சொல்வதற்கு இல்லை. அதற்கு பொன், பொருள் வேண்டுமானால் வாங்கிக் கொள்.
அதை விடுத்து இளவரசருடன் பழகலாம் என்ற எண்ணம் இருந்தால் அதை இன்றோடு விட்டு விடு, புரிந்ததா?
ஐயா! உங்களுடைய பணமும் எனக்கு வேண்டாம். உங்களுடைய சகவாசமும் எனக்கு வேண்டாம்.
என்று கூறிவிட்டு பூங்குழலி வேகமாக அங்கிருந்து செல்கிறாள்.
ஓய் வைஷ்ணவரே! அந்த பெண்ணை பார்த்தீரா, என்ன துடுக்காகப் பேசிவிட்டு போகிறாள்? (பெரிய வேளார்)
இந்த கிழவனுக்கு புத்தி கெட்டுவிட்டதா என்ன? பணத்தை கொண்டு எல்லாவற்றையும் வாங்கிவிட முடியுமா என்ன?
சேனாதிபதி! உம்முடைய வீரமெல்லாம் நிலத்தில்தான். அவள் கடலில் இறங்கிவிட்டாள் அவள் சமுத்திர குமாரி! அவளுக்கு வீரம் இல்லாமலா போய்விடும்?


சோழ நாட்டு கப்பலை எடுத்துக் கொண்டு அரபியர்கள், அரபு நாட்டுக்கு செல்கிறார்கள். அதில் நம் வந்தியத்தேவன் அகப்பட்டு கொண்டிருக்கிறான். உடன் ரவிதாசனும், தேவராளனும் இருக்கிறார்கள். வந்தியத்தேவனை காப்பாற்ற பார்த்திபேந்திரன் கொண்டு வந்த கப்பலில் பின் தொடர்ந்து செல்கிறார் அருள்மொழி.


நமக்கும் அந்த கப்பலுக்கும் எவ்வளவு தூரம் இருக்கும்.
அது என்ன அரைகாத தூரம் இருக்கும்.


ஆமாம்! அந்த இரண்டு பேரை உங்களுக்கு எப்படி தெரியும்.
திரிகோணமலையில் சந்தித்தேன். எனக்கு அரேபியர்களிடமிருந்து குதிரை சம்பாதித்து கொடுத்தார்கள். அவர்களும் உங்களை சந்திக்க வந்திருப்பதாக சொன்னார்கள்.
இளவரசன் குறிப்பிட்டு கேட்பது ரவிதாசனையும், அவனது கூட்டாளி தேவராளனையும்தான்.
அப்படியா! ம்... சரி இன்னும் எவ்வளவு நேரத்துல நாம அந்த மரக்கலத்தை பிடிக்கலாம்.
அது வந்தியத்தேவனின் அதிர்ஷ்டத்தை பொறுத்தது! (பார்த்தி)


என்ன அதிர்ஷ்டத்தை பொறுத்தது?
ஆமாம்! காற்றடிப்பது படிப்படியாக குறைந்து கொண்டே வருகிறது. இன்னும் கொஞ்ச நேரத்தில் பெரும் மழையுடன் கூடிய சூறைக்காற்று அடித்தாலும் அடிக்கலாம்.
இவருக்கு வந்தியத்தேவனை காப்பாற்றுவது குறித்து அவ்வளவு ஆர்வம் இருப்பதாக தோன்றவில்லையே!?


அரபு நாட்டுக்கு செல்லும் மரக்கலம்.
ஹா..ஹா..!
இப்படி ஏடாகூடாமா வந்து மாட்டிக் கொண்டோமே!


ஹாஹா.... ஹாஹா....


என்ன சொல்றீங்க?
ஆமாம்! இந்த கப்பல் அரபு நாட்டுக்குத்தான் போகுது.
அப்ப நாம எப்படி, நம்ம நாட்டுக்கு போவது?
நாம அந்த அரேபியர்களை வேலை தீர்த்தாதான்.
அவர்கள் சரியான முரட்டு கூட்டமாக அல்லவா இருக்கிறார்கள்!
அதான் யோசிக்கிறேன்! சரி, கொஞ்சம் வா என்னோடு.....


என்ன தம்பி? வானத்தையே பார்த்துகிட்டிருக்கே...
எங்க உதவி ஏதாவது தேவையா? சொல்லு....
வந்தியத்தேவன் அவர்களுக்கு பதில் கூற விருப்பம் இல்லாததால் வானத்தைப் பார்த்தபடி இருக்கிறான்.
என்ன தம்பி! பதில் ஏதும் பேசமாட்டியா?
தம்பி! இங்கே பாரு, நீ ரொம்ப கெட்டிக்காரப் பிள்ளையா இருக்க. வீணா ஏன் உயிர விடப்போற? பேசாம நீ எங்கக் கூட சேர்ந்திரு. என்ன சொல்ற?
நீங்கன்னா! நீங்க யாரு?


அருத்து சோழ நாட்ட ஆளப்போறவங்க!
ஹா..ஹா..
ஏன் சிரிக்கிறே...? (ரவிதாசன்)
முதல்ல நீங்க, இந்த கப்பலவிட்டு தப்பி போறீங்களானு பார்ப்போம்.


தம்பி நாங்க மட்டுமில்லை, நீயும் இந்த கப்பலவிட்டு தப்ப முடியாது. நாங்க வயதானவங்க, ஆண்டு அனுபவிச்சவங்க. பாவம் நீ வாலிப பிள்ளை உனக்கு நிறைய கனவுகள் எல்லாம் இருக்கும்.
அது மட்டுமில்லை, உனக்கு அந்த முரட்டு அரேபியர்களை அழிக்க நிறைய காரணம் இருக்கு.
இது சோழ நாட்டு கப்பல். இவர்கள் சோழ நாட்டு வீரர்களை அசந்திருக்கும் நேரத்தில் கொன்றுதான் இந்த கப்பலை கொண்டு போறாங்க.
நீ என்ன சொல்ற...
இன்னும் கொஞ்ச நேரத்துல என் மந்திர சக்தியால பலத்த புயல நான் உருவாக்க போறேன். நடு கடலிலே இருந்து சாக போறீயா? எங்களோட சேர்ந்து அவங்களை வேலை தீர்க்க போறீயா? சொல்லு, இல்ல ....


உனக்காக ஒருத்தி கரையில் காத்திருப்பதும் எனக்கு தெரியும்!


இப்போது என் மந்திர சக்தியை உனக்கு காட்டுகிறேன். ஓம்.. ஹ்ரீம்... ஷட்... பார்! இன்னும் கொஞ்ச நேரத்தில் பெரிய சூறாவளிக் காற்று வரப்போகிறது அப்போது தெரியும் என் மந்திர சக்தி என்னவென்று!
மந்திரமாவது, தந்திரமாவது! ஆனால், நமக்கு வேறு வழியில்லை. நாம் இவர்களை பயன்படுத்திதான் இங்கிருந்து தப்பி செல்ல முடியும்.
மந்திரவாதி உன் சக்தியை புரிந்து கொண்டேன்! என் கட்டை அவிழ்த்து விடு.
உண்மையில் ரவிதாசனுக்கு மந்திர சக்தி இருக்கிறதா? என்பது தெரியவில்லை. ஒரு வேளை அனுமானத்திலும் கூறியிருக்கலாம்.


வந்தியத்தேவன் ஏதோ யோசனை செய்வதைப் பார்த்து...
தம்பி! நம்ம பஞ்சாயத்தை பின்னாடி வெச்சுபோம். முதல்ல அவர்களை வேலை தீர்த்திடுவோம். ம்.. உன் வீரத்தை அவர்களிடம் காட்டு.
ரவிதாசன், தேவராளனை பார்த்து கண் ஜாடையில் ஏதோ கூறுகிறான்.
தேவராளனுக்கு அது புரிந்துவிட்டது.
உன்னை கட்டிப் போட்டவர்களை சும்மா விடாதே! போ!
முதல்ல அவங்கள வேலை தீர்த்துட்டு வந்து, உங்களை ஒரு கை பார்க்கிறேன்.


அரேபியர்கள் எப்படி சோழ நாட்டு வீரர்கள் அசந்திருக்கும் சமயம் பார்த்து திடீரென்று தாக்கினார்களோ, அது போலவே ரவிதாசனும், வந்தியத்தேவனும் அவர்களை தாக்குகிறார்கள். அதை சற்றும் எதிர்பாராத அரேபியர்கள் நிலை குலைந்து போகிறார்கள்.
ஆ ஆ ஆ
டிஷ்ம்...
டிஷ்ம்...
பங்!..
என்னையா கட்டி போடுறீங்க? இந்தா...


ஆ ஆ ஆ
யார்கிட்ட உங்க வேலையை காட்டுறீங்கள்? (வந்திய)
ஆ ஆ ஆ
ஆ... ஆ... ஆ... ஆ
குடி போதையிலிருந்த அரேபியர்களை இருவருமாக சேர்ந்து சமுத்திர ராஜனுக்கு பலி கொடுகின்றனர்.


தேவராளன்
திடீரென்று ஆந்தையை
போல் கத்துகிறான்.
தேவராளனின் குரல் கேட்டு....
இதுதான் நல்ல
சந்தர்ப்பம்!


எங்க நாட்டுப் பக்கம் தலை வெச்சும் படுக்க கூடாது... புரிந்ததா? ஜாக்கிரத்தை!
தட, தட..,
இந்த மந்திரவாதி இவ்வளவு அவசரமாக ஓடி, எதற்கு கடலில் குதிக்கிறான்? அவனின் மூளை ஏதாவது குழம்பிவிட்டதா!?


அடப்பாவிங்களா!
தம்பி! உன் வீரத்த எங்ககிட்ட காட்டலாம்னு நினைச்சல, இப்போ உன் வீரத்த சமுத்திர ராஜன்கிட்ட காட்டு! நீ உயிரோடு கரைக்கு வந்தால் நாம் சந்திப்போம்.
அடக்கடவுளே! மரக்கலத்தில் வேற யாருமே இல்லை. இப்ப நாம என்ன செய்யுறது?
ரவிதாசா! இவன் சாவதினால் நமக்கு என்ன பயன்?
பயனா! புலி சிநேகித துரோகம் செய்யாது என்பது உனக்கு தெரியாதா? இவன் பொறிதான். புலி அதில் வந்து தானாகவே அகப்பட்டுக் கொள்ளும்.
ஹா... ஹா... என்று இருவரும் சிரித்துக் கொண்டே செல்கின்றனர்.


அங்கு பெரிய யுத்தகாண்டமே நடைபெறுகிறதே! வல்லத்து அரசர் தனியாக சென்று அகப்பட்டுக் கொண்டாரே!
இளவரசே! நம்ம கதையே எப்படி முடியும் என்று தெரியாது? பலத்த புயலுக்கான அறிகுறி தென்படுகிறது. நங்கூரம் இட்டால் ஒரு வேளை நம் மரக்கலத்தை காப்பாற்றலாம். அதுவும் சொல்வதற்கில்லை.
அப்போது இளவரசர் வானத்தை அன்னார்ந்து பார்க்கிறார். கருமேகங்கள் திரண்டு வருகின்றன, கடலையே புரட்டிப்போட.
ம்...ஆகட்டும்! நாலா பக்கமும் நங்கூரத்தை பாய்ச்சுங்கள்.
அப்படியென்றால் வந்தியத்தேவனின் கதி?!


இளவரசே! நம் நிலைமையே இப்போது என்ன ஆகும் என்று தெரியாது. மழை துவங்கி விட்டது. பலத்த சூறாவளி காற்று அடிக்கப்போகிறது!
டம,டமா
பொன்னியின் செல்வர் என்ன செய்வது என்று புரியாமல் நிலை தடுமாறுகிறார்.
இளவரசே! நீங்கள் கவலைப்படாமல் உள்ளே அறைக்கு செல்லுங்கள். மற்றவைகளை நான் பார்த்துக் கொள்கிறேன்.


வந்தியத்தேவன் இருக்கும் கப்பலை கருமேகங்கள் சூழ்கின்றன. அதில் தனிமையில் வந்தியத்தேவன். அவனுக்கு கடலைப் பற்றியும், கப்பலை பற்றியும் ஒன்றுமே தெரியாது பாவம்!
வந்தியத்தேவன் இருக்கும் மரக்கலத்தை இடி தாக்குகிறது. கப்பல் எறிகிறது!
ஆ! வல்லத்தரசர் இருக்கும் மரக்கலத்தை இடி தாக்கிவிட்டதே!!


வந்தியத்தேவன் இருக்கும் மரக்கலம் பற்றி எறிகிறது. போதாக்குறைக்கு கடலும் கொந்தளிக்கிறது!
வல்லத்தரசரை நாம் காப்பாற்றியே ஆக வேண்டும். நமக்காக அல்லவா அந்த மனிதர் ஓடிச் சென்று அந்த மரக்கலத்தில் ஏறினார்.
அய்யோ! நம் விதி இதுதானா? நம் மனோரதமெல்லாம் இந்த சமுத்திரத்தில் மூழ்கிவிடப் போகிறதா? நாம் நெருப்பில் கருகி கரிக்கட்டையாக சாவதைவிட கடலில் ஜல சமாதி ஆவது எவ்வளவு மேல்...!


கடல் கொந்தளிப்பில் நிலை தடுமாறுகிறான் வந்தியத்தேவன்.
அப்போது அவன் பிடித்திருக்கும் கயிறு நெருப்பில் எரிந்து அறுகிறது.
டப்
"ஆ....."
"ஆ...."


வந்தியத்தேவன் கொந்தளிக்கும் கடலில் வீழ்கிறான்.
நம்ம நாயகனை காப்பாற்ற யாருமே இல்லையா? அட கடவுளே!
பார்த்திபேந்திரரே! அவரை காப்பாற்ற ஏதாவது வழி கூறுங்கள்.
அவசர உதவிக்கு சிறிய படகு ஒன்று உண்டல்லவா! அதை இறக்குங்கள்.
இளவரசே! உங்களை கடலில் இறங்க நான் அனுமதிக்க மாட்டேன்.


நீர் யார் என்னை அனுமதிக்க? என் நண்பனை காப்பாற்ற யாரிடம் நான் அனுமதி பெற வேண்டும்.
உங்களுக்கும் அவருக்கும் என்ன பகை?
இளவரசே!
ம்... என்னைத் தடுக்க வேண்டாம்!


தடுக்க முயற்சித்த பார்த்திபேந்திரனை தள்ளி விடுகிறார் பொன்னியின் செல்வர்.
இளவரசே! நான் கூறுவதை கேளுங்கள்.
என்னை தடுக்க முயற்சிக்க வேண்டாம். இது எனது ஆணை!


இளவரசே, வேண்டாம்!
பார்த்திபேந்திரன் சொல்லை மீறி கொந்தளிக்கும் கடலில் பாய்ந்தார் இளவரசர்.
நம்மை நம்பி வந்தவரை, நாம் எப்படியும் காப்பாற்றியே ஆக வேண்டும்.


இந்த கொந்தளிக்கும்
கடலில், இந்த ஊர் பேர்
தெரியாதவனை காப்பாற்ற
யார் வருவார்கள்?!


யாராவது காப்பாற்றுங்க என்பது போல
அவனுடைய கை நமக்கு உணர்த்துகிறது.
க்ளாக், ப்ளாக் என்று தண்ணீரில் மூழ்குகிறான் வந்தியத்தேவன்.


இளவரசர் எரியும் மரக்கலத்தை நோக்கி நீந்துகிறார்.


யாரது? இளவரசர் பொன்னியின் செல்வரா! எனக்காக கொந்தளிக்கும் கடலில் குதித்துவிட்டாரா? இந்த அனாதை அப்படியே போகட்டும் என்று விட்டு விடக் கூடாதா? இளவரசரை கடலில் மூழ்கடித்து கொன்றேன் என்ற பழி அல்லவா என் மேல் விழும்.
வந்தியத்தேவனைப் பார்த்ததும் மேலும் வேகமாக நீந்துகிறார் இளவரசர்.
வந்தியத்தேவன் வந்த மரக்கலத்தின் நடுக் கம்பம் எரிந்து முறிகிறது.


ஆ! நம் கதை முடிந்தது. இளவரசி.... என்னை மன்னித்துவிடுங்கள். தங்களுக்கு கொடுத்த வாக்கை என்னால் நிறைவேற்ற முடியாமல் நான் போகிறேன்.
இவ்வளவு தூரம் முயன்றும் பயனற்று போய்விட்டதே!
அய்யோ! மரக்கலம் எரிந்து முழுவதும் அப்படியே இருவர் மீதும் சாய்கிறது.






இந்த துயரச் செய்தியை எப்படி நாம் சோழ நாட்டு மக்களிடம் கொண்டு செல்வது. பொன்னியின் செல்வரை கடல் கொண்டது என்ற செய்தி தலைநகரை எட்டினால் என்னவாகும்? இந்த கடல் கொந்தளிப்பை காட்டிலும் அதிகமாக, சோழ நாடே கொந்தளிக்கும். இறைவா உன் திருவிளையாடல் இதுதானா!


கோடிக்கரை.
நேற்றிரவு அடித்த புயலில் கோடிக்கரை கரையோரப் பகுதியெல்லாம் பெரும் சேதம் ஏற்பட்டிருக்கிறது. வீடுகள் சேதம் அடைந்துள்ளன. மரங்கள் புயல் காற்றில் வேரோடு சாய்ந்துள்ளன. அவைகளையெல்லாம் வெட்டி ஊர் மக்கள் சீர் செய்கின்றனர்.
நேத்து அடிச்ச புயலை போல என் ஜென்மத்துல பார்த்ததில்லப்பா!
கரையில இருந்த நம்மையே இந்த புயல் இப்படி பாடாய் படுத்திருச்சே! கடல்ல அகப்பட்டவங்க பாடு அதோகதிதான்!
நேத்து இரவு இடி தாக்கி, ஒரு கப்பல் எரிஞ்சு போச்சாமே?!
அப்படியா! அது எந்த நாட்டு கப்பலுன்னு தெரியுமா?
கொட்டின மழையில, கொந்தளித்த கடல்ல அதையெல்லாம் யாரால கவனிக்க முடியும்?


ஒன்னு ஈழ நாட்டு கப்பலா இருக்கும். இல்ல சோழ நாட்டு கப்பலா இருக்கும்.
வேலை செய்யும் தன் மகனுக்கு களைப்பு தீர, நீராகாரம் கொடுக்க அதை வாங்கி குடிக்கிறான் மகன்.
கா, கா...


அய்யோ! போச்சே,
எல்லாம் போச்சே!
என்ன ஆச்சு? இவன் ஏன் இப்படி கத்திக்கிட்டே வரான்!
என்று அங்கிருந்தவர்கள் கத்திக் கொண்டு வருபவனை நோக்கி ஓடி வருகிறார்கள்.
எல்லாம் போச்சே!
என்ன ஆச்சு? ஏன் அழுறே? காரணத்தை சொல்லு!



நான் அதை எப்படி சொல்லுவேன்!
தம்பி! இப்படி அழுதா எப்படி? விவரமா சொல்லு தம்பி!
இளவரசர் பொன்னியின் செல்வர் நம்மையெல்லாம் விட்டு போயிட்டாரு!
பொன்னியின் செல்வரை கொன்னுட்டாங்க பருபாவிங்க...
ஆ... இளவரசே!
கா,கா...
கா,கா...
பொன்னியின் செல்வா!
கா,கா...


இலங்கை யுத்தத்தில எதிரிகள் மறைந்திருந்து கொன்னுட்டாங்களா?
இல்லை, இந்த படுபாவி பழுவேட்டரையர்கள் திட்டம் போட்டு இளவரசரை கொன்னுட்டாங்க!
ஆ.... இளவரசே! இப்படி சோழ நாட்டு மக்களை தவிக்க விட்டு விட்டு போயிட்டீங்களே!


பொன்னியின் செல்வனை கொன்னுட்டாங்களா?
ஆ....
எல்லாம் போச்சே...
ஆ! இவளுக்கு என்ன ஆச்சு?
இளவரசர் கடலில் மூழ்கி இறந்துவிட்டார் என்ற செய்தி காட்டு தீயைப் போல் பரவினால், சோழநாடு என்னவாகும்? இந்த பெரும் துன்பத்திலிருந்து கடவுள்தான் காப்பாத்தனும்.


அதே வேளையில், பிணம் தின்னும் கழுகுகள் பெருமளவில் வந்து கோடிக்கரையில் வட்டமிடுகின்றன.
பெரிய பழுவேட்டரையர் தனது பரிவாரங்களுடன் கோடிக்கரையில் வந்து இளவரசரின் வருகைக்காக காத்திருக்கிறார்.
நேற்றிரவு புயலால் மூழ்கிய கப்பல் சோழ நாட்டு கப்பல் என்றல்லவா ஊரெல்லாம் பேச்சாக இருக்கிறது. ஒருவேளை இளவரசர் நேற்றிரவு வந்திருந்து அவருக்கு ஏதாவது நேர்ந்துவிட்டால்! பழி நம்மேல் அல்லவா வந்துவிடும்.
நாம் அல்லவா சக்கரவர்த்திக்கு இந்த கைது யோசனையைக் கூறினோம்.
சூழ்ச்சி செய்து இளவரசரை கடலில் வைத்து கொன்றுவிட்டார்கள் பழுவேட்டரையர்கள் என்றல்லவா நம் மேல் பழி வந்துவிடும்!


இந்த கிழவர் ஏன் கிடந்து தனியாய் தவிக்கிறார்! இவருக்கு ஏதாவது நேர்ந்துவிட்டால் நம் திட்டமெல்லாம் பாழாகியல்லவா விடும்!
சோழ நாட்டு கடற்கரை எங்கும் தேடியாகிவிட்டது. எந்த கப்பலும் கரை ஒதுங்கியதாக தெரியவில்லை. சக்கரவர்த்திக்கு என்ன பதில் கூறுவது?
அம்மா! துர்கா பரமேஸ்வரி நீதான் இந்த சிக்கலிலிருந்து என்னை காப்பாற்ற வேண்டும்.
ஆந்தையின் குரல் அதிகாலையிலேயே இரண்டு முறை கேட்டது. மந்திரவாதியும், அவனது ஆட்களும் இந்த காட்டிலேதான் எங்கேயாவது இருக்க வேண்டும்! நல்ல சமயம் பார்த்து, இளவரசர் நலமுடன் திரும்ப, குழகரிடம் வேண்டி வருவதாக கூறிச் செல்ல வேண்டியதுதான்!


நாதா!
கண்ணே! நீதானா. நீ ஏன் இந்த உப்பு காற்றில் வந்து நிற்கிறாய். உன்மேனி கருத்துவிடப் போகிறது. உள்ளே கூடாரத்திற்குச் செல். என் மனவேதனை என்னோடு போகட்டும்.
நாதா! நான் ஒருத்தி உயிரோடு இருக்கும் போது தங்களுக்கு என்ன மன வேதனை?
இளவரசருக்கு ஏதாவது நேர்ந்துவிட்டால் பழி என்பேரில் அல்லவா விழுந்துவிடும்.
இதற்கு தாங்கள் ஏன் கவலைப்பட வேண்டும்? தாங்கள் இளவரசரை சிறைபிடித்து வர ஆட்களை அனுப்பாவிட்டாலும் அந்த கர்வம் பிடித்த குந்தவை அந்த காஞ்சி வாலிபனை அனுப்பினாள் அல்லவா! எல்லாம் அவளால் வந்தது. இதற்கு தாங்கள் ஏதற்காக கவலைப்பட வேண்டும்.


நாதா! அதோ பாருங்கள் ஒரு கப்பல் வருகிறது. அதிலிருந்து செய்தி ஏதாவது நமக்கு கிடைத்தாலும் கிடைக்கும்.
நாம் உடனே மந்திரவாதியை சந்திக்க வேண்டும்.
ஒருவேளை தப்பி பிழைத்து இந்த கப்பலில் வந்தாலும் வரக்கூடும். அதை பார்த்தால் சோழ நாட்டு கப்பலை போலத்தான் தெரிகிறது. ஆனால், நாம் அனுப்பிய கப்பல் மாதிரியும் தெரியவில்லை. எதற்கும் நாம் இந்த இடத்தைவிட்டு எக்காரணத்தைக் கொண்டும் அசையக் கூடாது!
நாதா! தாங்கள் ஒன்றும் கவலைப்பட வேண்டாம். இளவரசர் நலமுடன் திரும்பி வர நான் குழகரை வேண்டிவிட்டு வருகிறேன்.
சென்று வா, என் கண்ணே!
இவளது மனதோ பால் போல் தூய்மையாய் இருக்கிறது! ஆனால், மற்றவர்கள் இவளை பற்றி நம் காதுபடவே என்னவெல்லாமோ பேசுகிறார்களே!
இவள் சென்று வரட்டும். இளவரசர் வந்தால் நாமே சென்று வரவேற்பதுதான் சரியாக இருக்கும். இல்லையென்றால் அது பல குழப்பங்களுக்கு வழி வகுத்துவிடும்.


அதே வேளையில், கலங்கரை விளக்கத்தின் மேலிருந்து யாரோ எதையோ பார்க்கிறார்களே! யார் அவர்கள்? எதை பார்க்கிறார்கள்?
அட! நம்ம சேந்தன் அமுதன்! எப்போது தஞ்சையிலிருந்து வந்தான்? அவன் பக்கத்திலிருப்பது ராக்கம்மாள். தியாகவிடங்கரின் மருமகள். (அவர் கலங்கரை விளக்கத்தின் தலைவர்). அப்படி என்ன கடலில் நடக்கிறது, எதை இருவரும் பார்க்கிறார்கள்? கடல் பொங்கி வருகிறதா என்ன?
தூரத்தில் படகு வருவதைத்தான் ஆவலுடன் இருவரும் பார்க்கிறார்கள்.
அந்த படகை வலித்து வருவது உன் அத்தை மகள் பூங்குழலியை போல தெரியல!
அப்படியா! படகா அது?
அப்ப உன் கண்ணுல விளக்கெண்ணைதான் விடனும்!


அதோ பாரு! அதில் இரண்டு ஆணும், ஒரு பொண்ணும் வராங்க.
பூங்குழலி வருகிறாள் என்று ராக்கம்மாள் கூறிய உடனே அவன் மனம் மகிழ்ச்சி வெள்ளத்தில் திகைக்க தொடங்கிவிட்ட படியால், ராக்கம்மாள் அதற்கு மேல் கூறுவது ஏதும் அவன் காதில் விழவில்லை.
நாம் உடனே இளையராணி நந்தினிதேவியிடம் இதை பற்றி கூற வேண்டும்.
இவ்வாறு இவர்கள் பார்த்து கொண்டிருக்கையில் படகு ஒன்று கோடிக்கரை சதுப்பு நிலக் காட்டில் சென்று மறைகிறது.


கோடிக்கரையில் உள்ள காட்டில் இருக்கும் ஒரு உயரமான மரத்திலிருந்து பார்க்கிறாள் பூங்குழலி. (அதே வேளையில்)
ஆ! இங்கேயே வந்துவிட்டார்களா பாதகர்கள்?
பழுவேட்டரையரின் சிறிய படை கலங்கரை விளக்கத்தை ஒட்டி கூடாரம் அமைத்திருக்கிறார்கள்.
இந்த பழுவேட்டரையர் பொல்லாதவராய் இருக்கிறாரே! இளவரசரை கைது செய்யாமல் தஞ்சை திரும்புவதில்லை என்று கங்கணம் கட்டியிருக்கிறாரா என்ன?
நான் ஒருத்தி உயிரோடு இருக்கும் வரை அவர்கள் எண்ணம் ஒரு போதும் ஈடேறாது.


இளவரசரின் உடல் இப்படி
கனலாய் கொதிக்கின்றதே!
நாம் என்ன செய்வது?
பூங்குழலியையும் இன்னும்
காணவில்லை.
இலங்கையில் பரவலாக அடித்த விஷக்காய்சல், இளவரசருக்கு
வந்திருக்கிறது. என்ன செய்வது என்று வழி தெரியாமல்
பதைபதைத்துக் கொண்டிருக்கிறான் வந்தியத்தேவன்.


பூங்குழலி! இளவரசருக்கு உடனே மருத்துவம் பார்த்தாக வேண்டும்.
இந்த காட்டை விட்டு இப்போதைக்கு நாம் வெளியில் செல்ல முடியாது. பழுவேட்டரையரின் படை இளவரசரை கைது செய்ய தயாராக காத்திருக்கிறது. இருட்டும் வரை பொறுத்திருக்கத்தான் வேண்டும்.
பசி.... பசி....!
நான் ஒன்று செய்கிறேன். குழகர் கோயிலுக்குச் சென்று, இளவரசருக்கு சாப்பிடுவதற்கு பிரசாதம் கொண்டு வருகிறேன். குழகர் பூமியில் இளவரசருக்கு ஒன்றும் நேராது. கவலைப்படாதே!


கோடிக்கரை காட்டில்..
தேவராளன்
மந்திரவாதி! எனக்கு என்னமோ அவள் வருவாள் என்று தோன்றவில்லை.
மந்திரவாதி
நிச்சயமாக வருவாள்...!
மந்திரவாதியையும், அவனது கூட்டத்தையும் தேடி வரும் இளையராணி நந்தினியை, ராக்கம்மாள் வந்து சந்திக்கிறாள்.
குழகர் கோவில்.
என்னடி அப்படி பார்க்கிறாய்? என் முகத்தில் அப்படி என்ன இருக்கிறது?
தங்களை பார்க்கும் போது இன்னொரு ஞாபகம் வந்தது.
என்னடி உளறுகிறாய்?


ராணி! என்னை தவறாக நினைக்க வேண்டாம். ஈழத்தில் ஒருத்தி இருக்கிறாள். என் மாமனாருக்கு பெரியப்பன் மகள். சில சமயம் இங்கேயும் வருவாள். பார்ப்பதற்கு அச்சு அசலாக தங்களைப் போலவே இருப்பாள்...! ஆனால், அவள் ஊமை.
நந்தினியின் சிறிய வயதில் அவள் தூங்கும் சமயத்தில் ஓர் உருவம் அடிக்கடி தன்னை பார்த்து விட்டுப் போவதும், அது நந்தினி, தான் தற்போது இருக்கும் உருவம் போன்று இருந்ததும் அவள் நினைவுக்கு வருகிறது.
சற்று யோசித்துவிட்டு....
ராக்கம்மாள், இப்போது அந்த ஊமை இங்கே இருக்கிறாளா?
இல்லை ராணி. எப்போதாவது வருவாள்.
மறுபடியும் வரும்போது என்னிடம் அழைத்து வா!


சரி.
ராணி! தாங்கள் பாண்டிய நாட்டை சேர்ந்தவர்தானே!
ராணி இந்த கோட்டான் நம்மை ஏன் வழி மறிக்கிறது?
ஆம்! இது மந்திரவாதி வளர்க்கும் கோட்டானாகத்தான் இருக்கும்.
மந்திரவாதி இங்கே எங்கேயாவதுதான் இருக்க வேண்டும்.


அந்த கோட்டான் எங்கோ நம்மை அழைப்பது போல் அல்லவா இருக்கிறது!
ஆமாம்! பேசாமல் வா என்னோடு.
அந்த கோட்டான் அவர்களுக்கு வழிகாட்டிச் செல்கிறது.
இருவரும் அதை பின் தொடர்ந்து செல்கின்றனர்.
தம்மை யாராவது பார்க்கிறார்களா? என்று நோட்டமிட்டுவிட்டு கோட்டான் சென்ற புதருக்குள் செல்கிறாள் நந்தினி. அவளை பின் தொடர்ந்து செல்கிறாள் ராக்கம்மாள்.


நம் அண்ணி ராக்கம்மாள் அல்லவா அது! யாரோ பெண்மணியுடன் செல்கிறாளே? அதுவும் தாழை புதருக்குள் எதற்காக செல்கிறாள்?!
எதற்காக அவசரமாக இந்த கோட்டானை விட்டு அழைத்தாய்?
இப்பொழுது என் மந்திர சக்தியின் மகிமை தங்களுக்கு புரிந்திருக்குமே!
வதந்திகளை எப்போதும் நாம் நம்புவதில்லை.


ஹா...! ஹா...!!
இளையராணி அதற்கு பதில் ஏதும் கூறாமல் அவர்களை உற்று பார்க்கிறார்.
தாழைபுதரை விலக்கி உள்ளிருக்கும் சதிகாரர்களைப் பார்க்கிறாள் பூங்குழலி.
தேவராளா! கேட்டியா, வதந்தியாம்...! இளைய இளவரசனும், அந்த காஞ்சிபுரத்து வாலிபனும் கடல்ல மூழ்கி இறந்தது வதந்தியாம்! ஹா ஹா....!!


தேவராளா! நீயே இளையராணியிடம் எடுத்துக் கூறு.
என் மந்திர சக்தியினால் கடலில் புயல் காற்றை வர வைத்து, கப்பலை எரித்து, அந்த இருவரையும் கடலில் மூழ்கி சாகும்படிச் செய்தேன் என்று கூறு தேவராளா...!
ஆம் ராணி! மந்திரவாதி கூறுவது உண்மைதான்.
நிறுத்துங்கள் உங்கள் அபத்தமான பேச்சை....


நம் கண்முன்னே அல்லவா இருவரும் கடலில் மூழ்கினார்கள். அப்படிப்பட்ட கடல் கொந்தளிப்பில் விழுந்த எவரும் தப்பி பிழைக்க வாய்ப்பே இல்லை!
என் மந்திரத்துக்கு சக்தி இல்லை சரி! இந்த சமுத்திரத்திற்கு கூடவா அவர்களை கொல்லும் சக்தி இல்லை? ம்...
ராக்கம்மா! நீ என்ன பார்த்தாய் என்று கூறு.
என்னைக் கண்டு பயப்பட வேண்டாம். தைரியமா கூறு. (ரவிதாசன்)


உங்களைக் கண்டு எனக்கென்ன பயம்?
சரி! நீ என்ன பார்த்தாய், சீக்கிரம் கூறு. (ரவிதாசன்)
என் நாத்தியா தெரியுமில்ல....
உன் நாத்தியா எனக்கு எப்படி தெரியும்?
அதான்! ஒரு நாள் இரவு அவள்தான் உங்களை எங்கள் வீட்டுக்கு அழைத்து வந்தாள். என் கணவர்தான் உங்களை இலங்கைக்கு படகு தள்ளி வந்துவிட்டார். இப்போது ஞாபகம் வருகிறதல்லவா...!
ஆமாம்! அவளுக்கு என்ன இப்போ....? (ரவி)


அவளும், அவளுடன் இரண்டு ஆண்களும், அதிகாலையில் கடலிலிருந்து கோடிக்கரை காட்டில் சென்று மறைவதைப் பார்த்தேன்.
அந்த பெண்ணாக இருந்தால் அவர்கள் தப்பி பிழைத்திருக்க வாய்ப்பு உண்டு...! ம்...!
அப்படியென்றால் அவர்களை தேடிப் பிடித்து இந்தக் கோடிக்கரைக் காட்டிலேயே தீர்த்து கட்டிவிட வேண்டியதுதான். (ரவி)
பூங்குழலி.... (சேந்தன்)
பூங்குழலி.... (சேந்தன்)
இது நம் அத்தான் சேந்தன் அமுதனின் குரல் அல்லவா!


அவசரமாக மாமன் மகள் பூங்குழலியை காண கோடிக்கரை வந்திருக்கிறான் சேந்தன் அமுதன்.
பூங்குழலி.....
அவரேதான். அய்யோ! அவரோ சாது. இந்த பிசாசுகளிடம் வந்து அகப்பட்டுக் கொள்ளப் போகிறார்.
சேந்தன் அமுதனை அருகில் வர வேண்டாம் என்று கை காட்டுகிறாள். சேந்தன் அமுதனும் சூழ்நிலையை புரிந்து கொள்கிறான்.


ஒருவேளை கோடிக்கரையில் இளவரசர் கரை ஒதுங்கியிருக்கலாம் என்று கோடிக்கரை வருகிறான் பார்த்திபேந்திரன். அங்கு பெரிய பழுவேட்டரையரின் பரிவாரங்கள் இருப்பதைக் கண்டு பழுவேட்டரையரை சந்திக்கிறான்.
பார்த்திபேந்திரா! சீக்கிரம் சொல். பொன்னியின் செல்வன் கடலில் மூழ்கி இறந்துவிட்டார் என்றா சொல்கிறாய்? பசித்திருக்கும் புலியிடம் விளையாடாதே. ஜாக்கிரதை!
ஐயா! இளவரசர் இறந்துவிட்டார் என்று நான் சொல்லவில்லை. சுழற்காற்று உக்கிர நிலையை அடைந்திருந்த நிலையில் கப்பலிலிருந்து கடலில் குதித்தார் என்றுதான் கூறினேன்.
சுழற்காற்று அடித்தபோது இளவரசர் கடலில் குதித்தாரா?! ஏன் குதித்தார்? எதற்காக குதித்தார்? அவர் குதிக்கும் போது நீ என்ன செய்து கொண்டிருந்தாய்?
இளவரசர் பொன்னியின் செல்வர், நான் தடுத்தும் கேளாமல் கொந்தளிக்கும் கடலில் வந்தியத்தேவனை காப்பாற்ற குதித்தார். பெரும் மழை, கொந்தளிக்கும் கடல், இருள் சூழ்ந்த வானம் இம்மூன்றும் சேர்ந்ததால் இளவரசர் எங்கிருக்கிறார் என்று என்னால் கண்டுபிடிக்க முடியவில்லை.


...ம்
ஐயா! இவர் இலங்கைக்கு எதற்காக போனார் என்று சொல்லச் சொல்லுங்கள்.
ஆமாம்! உள்ளது உள்ளபடி சொல். இல்லையென்றால் இங்கிருந்து நீ உயிருடன் தப்ப முடியாது.
அரசே! உண்மையை தவிர வேறு எதுவும் சொல்லி எனக்கு பழக்கமில்லை. கேளுங்கள், தாங்களும் கடம்பூர் சம்புவரையர் மற்றும் பலரும் சேர்ந்து சோழகுலத்துக்கு விரோதமாகச் சதி செய்கிறீர்கள் என்று காஞ்சிக்கு செய்தி எட்டியது.


பொய்! பொய்! முற்றிலும் பொய்!
செய்தி பொய்யாகவே இருக்கட்டும்! அதுவே நான் வேண்டுவது. அதன் காரணமாகவே திருக்கோவலூர் மலையமானும், ஆதித்த கரிகாலரும் என்னை ஈழத்துக்கு அனுப்பினார்கள். பொன்னியின் செல்வரை கையோடு அழைத்து வரும்படியும் கூறினார்கள்.
நாதா! இதில் தாங்கள் குற்றம் எதுவும் இல்லை. வீணாக நொந்து கொள்ள வேண்டாம். நம்முடைய செயல்களுக்கு மேலே விதியின் செயல் ஒன்று இருக்கிறது அல்லவா!


ம்...! என்று கை அசைத்து
பார்த்திபேந்திரனை சுற்றி நின்ற
வீரர்களை பின்னுக்கு செல்லும்படி
ஆணையிடுகிறார் பழுவேட்டரையர்.
காவலர்கள் பின் வாங்கியதை
அறுத்து தனது உறைவாளை
உறைக்குள் தள்ளுகிறான்
பார்த்திபேந்திரன்.


பார்த்திபேந்திரன் தன் வாளை உறையில் போடுவதில் காட்டிய வேகம் பழுவேட்டரையருக்கு கோபத்தை ஏற்படுத்துகிறது.
காலம் நமக்கு சாதகமாக இல்லை. இல்லையென்றால் இவனுக்கு சரியான பாடம் புகட்டி இருக்கலாம். போகட்டும்.
அப்போது நந்தினி, நாதா என்று பழுவேட்டரையரை அருகில் அழைத்து ஏதோ காதில் கூறுகிறாள்.
அதுவும் சரிதான்! பார்த்திபேந்திரன் வந்த கப்பலுக்கே சென்று சோதனை செய்துவிட வேண்டியதுதான்.


பழுவேட்டரையர் சிந்திக்கும் வேளையில் தனது காந்த பார்வையை பார்த்திபேந்திரனின் மேல் செலுத்துகிறாள் நந்தினி.
அவ்வளவுதான்! பார்த்திபேந்திரன் சிலந்தி வலையில் அகப்பட்ட பூச்சியைப் போல் மாட்டிக் கொண்டான் நந்தினியிடம்.
பார்த்திபேந்திரா! நான் மரக்கலத்துக்கு சென்று சோதனையிட்டு வரும் வரை இந்த இடத்தைவிட்டு அசையக் கூடாது. புரிகிறதா?
என்று கூறிவிட்டு அங்கிருந்து புறப்பட்டு செல்கிறார் பழுவேட்டரையர்.
நந்தினியை அந்த பாதகனிடம் தனிமையில் விட்டுவிட்டு வருகிறோமே!
என்று நினைத்தவர் சட்டென்று திரும்பி
பார்த்திபேந்திரா! தப்பிச் செல்ல முயல வேண்டாம். ஓட முயற்சி செய்தால் உடனே வேல் எறிந்து கொல்லும்படி கட்டளையிட்டு வந்திருக்கிறேன். ஜாக்கிரதை! முதுகில் காயம் பட்டு சாகாதே! உன் பரம்பரை வீரப் பரம்பரை!
என்று கூறிவிட்டு செல்கிறார்.


தப்பி ஓடும் எண்ணம் எனக்கில்லை. அப்படி ஓடுவதாக முடிவு செய்துவிட்டால் உங்கள் ஆட்களால் என்னை தடுக்க முடியாது!
ஐயா! தப்பி ஓடலாம் என்று என்ன வேண்டாம்.
ராணி நானாவது, தங்களிடமிருந்து தப்பி ஓடுவதாவது! வலையில் அகப்பட்ட மீன் எவ்விதம் தப்பி ஓடும்!
ராணி தாங்கள் காலால் இட்ட வேலையை தலையால் செய்ய காத்திருக்கிறேன்.
அடப்பாவி! கரிகாலரிடம் என்ன, என்ன வீர வசனம் பேசினாய். இப்போ, நந்தினியின் ஒரு பார்வைக்கு வீழ்ந்து விட்டாயே!


நந்தினி இறுதியாக பார்த்திபேந்திரனிடம் ஒரு கோரிக்கை வைக்கிறாள். இளவரசர் கரிகாலரை கடம்பூர் அரண்மனைக்கு பார்த்திபேந்திரன் அழைத்து வரவேண்டும் என்றும், அவருக்கு சம்புவரையர் மகளை மணம் முடித்துவிட வேண்டும். அதுவே அவள் மனோரதம் என்று கூறுகிறாள். அவனும் அதற்கு ஒத்துக் கொள்கிறான்.
இதைதானா இத்தனை பீடிகை போட்டு இவள் கேட்க வேண்டும். இந்த கிழவனிடமிருந்து என்னை காப்பாற்றிச் செல் என்று கூறுவாள் என்றல்லவா எதிர் பார்த்தேன்!


சேந்தன் அமுதனும் பூங்குழலியும் அத்தை மகனும், மாமன் மகளும் ஆவார்கள்.
சேந்தன் அமுதனுக்கு பூங்குழலி மேல் காதல் என்பது நமக்கெல்லாம் தெரிந்ததுதான். ஆனால், பூங்குழலியின் மனதில் சேந்தன் அமுதனுக்கு இடம் உண்டா என்பது போகப் போகத்தான் தெரியும்.
அமுதா! என்னை, என்ன காரணத்திற்காக பார்க்க வந்தாய்?
மாமன் மகளைக் காண காரணம் வேண்டுமா? பூங்குழலி...
காரணமே இல்லாமல் இருக்குமா என்ன?


உன்னுடைய இனிமையான குரலில் தேவராப் பாடல் கேட்கலாம் என்று வந்தேன். எனக்காக ஒரு தேவாரப் பாடல் ஒன்றை பாடேன்.
பூங்குழலி தேவாரப் பாடல் ஒன்றைப் பாடத் துவங்குகிறாள்.
தோடுடைய செவியன்
விடையேறியோர்
தூவெண்மதி சூடிக்
காடுடையசுடலைப்
பொடிபூசி என்
உள்ளங்கவர் கள்வன்
ஏடுடையமலரான்முனை
நாட்பணிந்
தேத்த அருள் செய்த
பீடுடையபிர மாபுரம்மேவிய
பெம்மானிவனன்றே!
இளவரசர் அருள்மொழியையும், வந்தியத்தேவனையும் தீர்த்துக் கட்ட கோடிக்கரைக் காட்டையே அலசி ஆராய்கிறான் ரவிதாசன்.


ஷிக்...
ஷிக்...
பூங்குழலி பாடுவது ரவிதாசன் காதில் விழுகிறது. குரல் வந்த திசையில் தேடுகிறான் ரவிதாசன்.
ரவிதாசன் புதர்களை தன் வாளால் வெட்டின சத்தம் கேட்டு பூங்குழலி திரும்புகிறாள்.
இந்தப் பெண்ணை பிடித்தால் அவர்கள் இருக்கும் இடம் தெரிந்துவிடும்.


ஆ! மந்திரவாதி...!
ஏய் பெண்ணே! நில்.
அமுதா! இவனிடம் நாம் அகப்படக் கூடாது. ஓடு.....
ஏய்! ஓடாதே நில். மந்திரம் போட்டு விடுவேன்.
அமுதா! நீ அப்படி ஓடி வா.. நான் இந்த வழியாக வருகிறேன். முன்பு ஒருமுறை என்னுடன் வந்தாயே அதே இடம்தான். ஞாபகம் இருக்கிறது அல்லவா!


பெண்ணே! ஓடாதே நில். நீ செய்யும் காரியத்திற்காக பின் வருத்தப்படுவாய்!
இருவரையும் துரத்திக் கொண்டு ஓடுகிறான் ரவிதாசன்.
உங்களுக்கெல்லாம் தெரியும் அல்லவா பூங்குழலிக்கு கோடிக்கரை காடு அத்துப்படி என்று.
உஷ்ஷ்... உஷ்ஷ்... குளிருதே! அம்மா, அம்மா! தாங்க முடியலேயே! (அருள்)
இளவரசரை உடனே வைத்திய சாலைக்கு அழைத்துச் செல்ல வேண்டும். இல்லாவிட்டால் அது அவரின் உயிருக்கே ஆபத்தாக முடிந்துவிடும்.


பூங்குழலி எதற்காக சிரித்துக் கொண்டே ஓடி வருகிறாய்? (வந்திய)
சிரித்துக் கொண்டே மூச்சு வாங்குகிறாள்.
பூங்குழலி ஏன் இப்படி மூச்சிறைக்க வந்தாய்? என்ன ஆயிற்று!


பூங்குழலி! நீ எப்படி அந்த பாதகனிடமிருந்து தப்பினாய்? அவன் உன்னை அல்லவா துரத்திக் கொண்டே வந்தான்.
அமுதா! உன் மாமன் மகளை காண நீ எப்போது கோடிக்கரைக்கு வந்தாய்?
என்னை காப்பாற்றுங்க! உங்களுக்கு புண்ணியமா போகும். (ரவி)
இது மந்திரவாதியின் குரலாயிற்றே!
அய்யோ! நான் புதைச் சேற்றில் மூழ்கி சாகப்போறேன். என்னை யாராவது ஓடிவந்து காப்பாற்றுங்க...
அய்யோ, பரிதாபம்! மந்திரவாதிக்கா இந்த நிலைமை?


என்னை காப்பாத்துங்க...!
என்னை காப்பாத்துங்க...!
யாரோ மனிதனின் அபயக்குரல் கேட்கிறதே! யாரது? அவனை நான் காப்பாற்றியே ஆக வேண்டும்.
பூங்குழலி! மந்திரவாதியை என்ன செய்துவிட்டு வந்தாய்?


அய்யோ! என்னை இந்த புதைகுழி விழுங்கிவிடும் போலிருக்கிறதே? என்னை யாராவது காப்பாற்றுங்க... (ரவி)
இது நம் எஜமானின் குரலேதான்!
என்று, ஆந்தை குரல் கேட்ட திசை நோக்கி பறக்கிறது.
இனியும் நாம் தாமதிக்க கூடாது. இளவரசி கூறியபடி உடனே சூடாமணி விஹாரத்துக்கு படகை விடு. (வந்திய)
சரி! இருவரும் கொஞ்சம் பின்னாலிருந்து ஆழத்திற்கு படகை தள்ளுங்கள்.
இளவரசரின் உடல் மேலும் மோசம் அடைகிறது. இளவரசி குந்தவை, சேந்தன் அமுதனிடம் கூறியபடி நாகைப்பட்டினத்திலுள்ள சூடாமணிவிஹாரத்தில் கொண்டு போய் சேர்க்க விரைகிறார்கள்.


இன்னும் கொஞ்ச தூரம் தள்ளுங்கள்.
போதுமா!


படகு சூடாமணி விஹாரத்தின் பின் பக்கம் வருகிறது. வந்தியத்தேவன் படகிலிருந்து தாவி, விஹாரத்தின் பின் வாசல் வழியாக உள்ளே சென்று, ஒரு புத்த சந்யாசியை அழைத்து வருகிறான்.


புத்த விஹாரத்திலிருந்து புத்த சந்யாசி ஒருவர் தீவட்டியை கொண்டு வர, புத்த குரு மற்றும் சீடர்கள் பின் வருகிறார்கள்.


அவர்கள் பொன்னியின் செல்வரை புத்த விஹாரத்துக்குள் தூக்கிச் செல்கின்றனர்.


நீங்கள் யாரும் உள்ளே வர வேண்டாம். இளவரசரை பாதுகாப்பது இனி எங்கள் பொறுப்பு. நீங்கள் கவலையின்றி உங்கள் பணியை தொடருங்கள்..!
என்று கூறிவிட்டு புத்த சன்யாசி உள்ளே சென்றுவிட்டார்.
நண்பா! நீ உடனே பழையாறைக்கு புறப்படு. நீ கொண்டு செல்லும் செய்திக்காக இளவரசி குந்தவை காத்திருக்கிறார்.
அதோ பார்! உனக்காக உன் குதிரை காத்துக் கொண்டிருக்கிறது.
சேந்தன் அமுதன் சமீபத்தில் குதிரையேற்றம் பழகியிருந்தான். சமுத்திர குமாரியை மணக்க விரும்பினால் அனைத்தையும் கற்றுதானே ஆக வேண்டும்.


சேந்தன் அமுதனும் பூங்குழலியும் இளவரசரை பத்திரமாக சூடாமணி விஹாரத்தில் ஒப்படைத்து விட்டோம் என்ற மன நிம்மதியில், நீரோடையில் பேசிக் கொண்டே மகிழ்ச்சியாக பயணிக்கிறார்கள்.
அமுதா! உண்மையிலேயே உனக்கு என்னை அவ்வளவு பிடிக்குமா என்ன?
என்ன இப்படி கேட்டுவிட்டாய். இறைவன் என் முன்னால் தோன்றி, நீ சுந்தரமூர்த்தியை போல் இந்த உடம்போடு கைலாசத்திற்கு வருகிறாயா? அல்லது பூலோகத்தில் பூங்குழலியுடன் வாழ்கிறாயா? என்று கேட்டால் நான் பூங்குழலியுடன் வாழ்கிறேன் என்றுதான் சொல்லுவேன்.
சல,சல,


அவர்கள் வரும் ஓடையின் அருகில் இருக்கும் புதர்களில் இருந்து யாரோ, யாரையோ துரத்துவது போல் சத்தம் கேட்கிறது.
இருவரும் சத்தம் வந்த திசையை பார்க்கிறார்கள்.


விடாதே பிடி! பிடி!


இளவரசரின் மீது அப்படி என்ன பாசமோ என் அத்தைக்கு! அவரை பின் தொடர்ந்து வந்துவிட்டாளே!


யார் இவர்கள்? இவர்கள் எதற்காக நம் அத்தையை பிடித்துச் செல்கின்றனர்.
அமுதா! அந்தப் பெண் யார் என்று தெரியுமா? அவள் என் அத்தை. உனது பெரிய அன்னை.


அவள் ஈழத்தில் இருப்பதாக அல்லவா கேள்விப்பட்டேன்.
ஆமாம்! எப்போதும் ஈழத்தில் இருப்பாள். சில நாட்களாக நான் பார்த்ததில் பொன்னியின் செல்வருக்கு ஒன்று என்றால் துடித்து போகிறாள். இங்கேயும் அவரை பார்க்கவே வந்திருக்கிறாள்.
இப்போது நாம் என்ன செய்வது பூங்குழலி?
பூங்குழலி! பெரிய அன்னையை எப்படியாவது அந்த பாதகர்களிடமிருந்து காப்பாற்ற வேண்டும்.
அழுதா! நீ ஒன்றுக்கும் கவலைப்படாதே. என் அத்தையை அந்த பாவிகளால் ஒன்றும் செய்ய முடியாது.




குளிர் சுரம் வந்த பொன்னியின் செல்வருக்கு சூடாமணி விஹாரத்தில் உள்ள புத்த பிச்சுக்கள் வைத்தியம் செய்கிறார்கள். ஆனால் ராக்கம்மாள், சூடாமணி விஹாரத்தில் உள்ள புத்த பிச்சுக்கள் பொன்னியின் செல்வரை மறைத்து வைத்திருப்பதாகவும், அவரை புத்த மதத்துக்கு மாற்றும் ஏற்பாடுகள் நடைபெற்று வருவதாகவும், வதந்தியை பரப்புகிறாள். அதனால் மக்கள் சூடாமணி விஹாரத்தை முற்றுகையிட்டு, இளவரசரை வெளியில் அனுப்புங்கள், இல்லையென்றால் சூடாமணி விஹாரத்தை இடித்து தரைமட்டம் ஆக்கிவிடுவோம் என்று கொந்தளிக்கின்றனர்.

(ராக்கம்மாள் கிராமவித்தனின் (ரேவதாஸன்) மகள். கிராமவித்தன் ரவிதாசனின் கூட்டத்தில் ஒருவன்.)


பழையாறை கோட்டை.
பழையாறை கோட்டைக்கு வந்துவிட்டோம்! உள்ளே செல்வோமா?
அங்கு நமக்கு என்ன வேலை! வந்தியத்தேவன் இல்லாமல்?
வந்தியத்தேவனும் வரட்டும் சேர்ந்தே செல்வோம்.
மதுராந்தக தேவர் வாழ்க! கண்டராதித்தரின் திருப்புதல்வர் வாழ்க! செம்பியன் மாதேவியின் தவப்புதல்வர் வாழ்க! வாழ்க!!
நிறுத்துங்கள்! வருங்கால சக்கரவர்த்தி வருவதைக் கூட பார்க்காமல் மக்களுக்கு அப்படி என்ன வேடிக்கை?


அங்கே என்ன வேடிக்கை என்று பார்...
இங்கே இருக்கிற ஒருத்தருக்கு அதிர்ஷ்டம் அடிக்கப் போகிறது...!
யாருக்கு நிமித்தக்காரரா? யாருக்கு அதிர்ஷ்டம் அடிக்கப்போகிறது.?


உங்களில் யாருக்கு மூணு பல்லு ஆடுதோ! அவருக்கு.


எனக்கு இரண்டு பல்லு ஆடுது! உனக்கு..?
எனக்கு மூணு பல்லு ஆடுது!


இவர்தான் அந்த அதிர்ஷ்டசாலி! இந்த மூணு பல்லு விழுந்ததும், இவரை மணக்க தேவலோகத்திலிருந்து தேவலோக கன்னி வரப் போறா...!



அந்த கிழவனுக்கு அடிச்ச அதிர்ஷ்டத்தை பார்த்தீங்களா!
ஏய் நிமித்தக்காரா! எனக்கு ஏதாவது பார்த்து சொல்லேன்.
இளவரசே! யாரோ நிமித்தக்காரன்.
அவனை உடனே என் அரண்மனைக்கு வரச் சொல்.
என்று கூறிவிட்டு, பழையாறையின் கோட்டைக்குள் செல்கிறார் மதுராந்தகத்தேவர்.
இளவரசரிடமிருந்தே அழைப்பு வந்தபின் இனி வந்தியத்தேவன் கோட்டைக்குள் செல்வதை யார் தடை செய்ய முடியும்!


மாறுவேடத்தில் வந்திருக்கும் வந்தியத்தேவனிடம் நிமித்தம் பார்க்கிறார் மதுராந்தகத்தேவர். யாருக்குத்தான் தன் எதிர்காலத்தை அறிந்து கொள்வதில் ஆர்வம் இருக்காது.
நிமித்தகாரா என்ன தெரிகிறது?
ம்....
மதுராந்தகரை அமைதியாய் இருக்கும் படி கை காட்டுகிறான் நிமித்தக்காரன்.
அற்புதம்! (நிமித்த)
என்ன!? என்ன பார்க்கிறாய்!


ஆஹா! அற்புதம்..!
என்ன தெரிகிறது? கொஞ்சம் சொல்லேன்.
இந்திரலோகம் போல் தெரிகிறது.


வேறென்ன தெரிகிறது?
(மதுராந்தகர்)
இந்திரலோகமா!
(மதுராந்தகர்)
ஒரு அழகிய சிம்மாசனம்.
சிம்மாசனமா! நன்றாகப் பார். அதில்...
இளவரசே! தங்களை, தங்கள் தாயார் செம்பியன் மாதேவி அழைக்கிறார்.
உஷ்....
தாதிப் பொண்ணிடம் மதுராந்தகர் சத்தம் போடாதே என்று சைகை செய்கிறார்.


நீ போ! நான் வருகிறேன்.
என்று மெல்லிய குரலில் கூறுகிறார். நிமித்தக்காரன் நிமித்தத்துக்கு இடஞ்சல் வந்துவிடக் கூடாது என்பதற்காக.
அந்த சிம்மாசனத்தில் யார் அமர்ந்திருக்கிறார்?
மன்மதன் போல் தெரிகிறது.
மன்மதனா!?
மன்மதனா? என்று சலிப்பாக கேட்கிறார் மதுராந்தகத்தேவர்.


இல்லை, இல்லை, தாங்களேதான்!
நானா! நிமித்தக்காரா இன்னும் மேலே சொல். என்னை சுற்றி யார், யார் இருக்கிறார்கள்? அங்கு என்ன நடக்கிறது?
ம்... பட்டாபிஷேக திருவிழா போல் தெரிகிறது. பல சிற்றரசர்கள் இருக்கிறார்கள். உங்கள் தாய் இருக்கிறார்.
தங்கள் தலையில், கரிகால் வளவரின் மணிமகுடத்தை சூட்ட வருகிறார் பழுவேட்டரையர்.


ம்... என்ன இது ஒரே புகை மண்டலமாக காட்சி தருகிறதே!
பட்டாபிஷேகம் என்றால் அங்கே பூஜை நடக்கத்தானே செய்யும்! பூஜை செய்தால் புகை வரத்தானே செய்யும்! புகை மண்டலத்தை தாண்டிப் பார், உனக்கு வேண்டிய பொன் தருகிறேன்.
ஆ....! என்னால் கண் எரிச்சல் தாங்க முடியவில்லையே!


நிமித்தகாரா...! நிமித்தகாரா...! என்ன ஆயிற்று?
மயங்கி விழுகிறான் நிமித்தகாரன்.
அரிச்சந்திர ஆற்றில் மூழ்கியதிலிருந்து பொய் கூறுவதில்லை என்று உறுதி மொழி அல்லவா எடுத்துக் கொண்டேன்.
ஆகா! சொல்ல வந்ததை முழுமையாக சொல்லாமல் இப்படி மயங்கி விழுந்துவிட்டானே.
திருநாரையூர் நம்பி என்பவர், திருநாரையூரைச் சேர்ந்தவர். அவ்வூரிலுள்ள பொல்லாப் பிள்ளையாரின் பூரண அருளைப் பெற்றவர். அவர் பழையாறைக்கு வந்திருப்பதால், அவரை தரிசித்து ஆசி பெறுவதற்காக மதுராந்தகத்தேவரை அழைக்கிறார் செம்பியன் மாதேவி.


இளவரசே! தங்களை, தங்கள் தாயார் உடனடியாக அழைக்கிறார். (தாதிப்பெண்)
எவனாவது பண்டாரம் வந்திருப்பான். வேறு என்ன!
என்று எண்ணியபடி அங்கிருந்து செல்கிறார் மதுராந்தகத்தேவர்.
நிமித்தக்காரன்! நிமித்தம் பார்த்து மயங்கியே விட்டான். அவன் முகத்தில் தண்ணீர் தெளித்து எழுப்பி இருக்கலாம் மதுராந்தகத்தேவர். அப்படியே விட்டுவிட்டு சென்று விட்டாரே...!
இந்நேரத்தில் இந்த முன் குடுமி நம்பி இங்கு எதற்காக வருகிறான்!?
இங்கேதான் இருக்கிறாயா? உன் நாடகமெல்லாம் என்கிட்ட செல்லாது தம்பி!


ரகசியமாக மெல்லிய குரலில்....
ஓய் நிமித்தகாரா! இளவரசிக்கும் நிமித்தம் பார்க்க வேண்டுமாம் வருகிறாயா?
நிமித்தகாரன் கண் விழித்து....
எங்கேயோ கேட்ட குரல் மாதிரி இருக்கிறதே!
என்ன நிமித்தம் பார்க்க வறியா? இல்ல வேற நிமித்தக்காரன இளவரசிகிட்ட அழைச்சிட்டு போகவா?
இந்த வைஷ்ணவன் நமக்கு உதவி செய்ய வந்திருக்கானா? இல்ல உபத்திரவம் செய்ய வந்திருக்கானா? ஒண்ணுமே புரியலையே!


உன் மனம் சிவபக்தியாகிய கங்கை நதியிலிருந்து மண்ணாசையாகிய குட்டையில் விழுந்துவிட்டது. சோழ குலத்துச் சிம்மாசனத்தில் ஏற நீ ஆசைப்படுகிறாய் என்று கேள்விப்படுகிறேன். பால் போல தூய்மையாக இருந்த உன் உள்ளத்தில் இந்த விஷம் எப்படி வந்தது? யாரோ உனக்கு துர்போதனை செய்து கெடுத்து விட்டார்கள். (செம்பியன் மாதேவி)
என்னுடைய மனதை விரோதிகள் யாரும் கெடுக்கவில்லை. என்னை சிம்மாசனம் ஏற்ற விரும்புகிறவர்கள் என் விரோதிகளா? எனக்காக தங்கள் உயிரையும் கொடுக்க முன் வந்திருப்பவர்கள் விரோதிகளா? ஒரு நாளும் இல்லை. உண்மையில் என் ஜென்ம விரோதி யார்?
மகனே! உனக்கு போதனை செய்திருப்பவர்கள் அரசியல் நீதியின் ஆரம்ப தத்துவத்தை கூட உனக்கு உணர்த்தவில்லை. மக்களின் அபிமானம் இல்லாமல் எந்த அரசனும் நீடித்து அரசு செலுத்த முடியாது.


அப்படி அரசு புரிவதில் புண்ணியமும் இல்லை. (செம்பியன் மாதேவி)
நியாயமாக எனக்கு உரிய சோழ சிம்மாசனத்தை, நான் ஒரு நாளும் யாருக்காகவும் விடமாட்டேன்.
நீ சொன்னாலும் சரி! சிவபதம் அடைந்த என் தந்தையே திரும்பி வந்து சொன்னாலும் சரி! நான் கேட்க மாட்டேன்.
இந்த சோழ சாம்ராஜ்யம் என்னுடையது. இந்த பழமையான சிங்காசனம் என்னுடையது. அவற்றை நான் அடைந்தே தீருவேன்.


உண்மையில் என் ஜென்ம விரோதி என்னை பெற்றவளாகிய நீதான்! நீயும் ஒரு தாயா? அன்னையின் இயல்புக்கே மாறான இயல்புடையவள். நீ ஒரு அரக்கி!
மகனே! நான் வஞ்சக அரக்கியாகவே இருந்தாலும் என் வார்த்தைகளை சற்று செவி சாய்த்து கேள். (செம்பியன் மாதேவி)
கேட்க மாட்டேன்..! (மதுராந்தகர்)
அதே வேளையில், தலைநகர் தஞ்சையில் இரண்டு வீரர்கள் குதிரையில் செய்தி தாங்கி வருகிறார்கள். அந்த வீரர்களின் கண்ணில் கண்ணீர் பெருகின்றன.


தலைநகரிலிருந்து ஏதோ துக்க செய்தி செல்கிறது.
அவ்வளவு நேரம் செம்பியன் மாதேவியிடம் நாவடக்கம் இல்லாமல் பேசிய மதுராந்தகதேவர் செம்பியன் மாதேவியின் காலை கட்டிக் கொண்டு கண் கலங்குகிறான்.
குழந்தாய்! அழாதே, நான் இதை யாரிடமும் சொல்லமாட்டேன்.
தாயே! இது தங்களை தவிர வேறு யாருக்கும் தெரியாது அல்லவா?
என்று ஏதோ துர்நோக்கத்துடன் கேட்கிறார்.


அப்போது அரண்மனையின் வெளியில் பெரும் இரைச்சல் கேட்கிறது.
செய்தி பழையாறை அரண்மனைக்கு வரும் முன்னரே, பழையாறை எங்கும் செய்தி காட்டுத்தீயைப் போல் பரவி, மக்கள் செம்பியன் மாதேவியின் அரண்மனை முன்னால் குவிந்தனர்.
மகாராணி எங்களுக்கு நீதி சொல்லுங்க? பொன்னியின் செல்வன் எங்கே? ஐயோ... ஆ... (மக்கள்)
மகனே! வெளியில் கேட்கும் அழுகுரலை கேட்டால், சோழ குலத்துக்கு நடக்கக் கூடாதது ஏதோ நடந்திருக்க வேண்டும். நீ இங்கேயே இரு! நான் அழைக்கும் வரை நீ வெளியில் வர வேண்டாம்.
நடக்கக் கூடாதது ஏதோ நடந்துவிட்டது என்று செம்பியன் மாதேவி கூறியது மதுராந்தகரின் மனதில் பல தீய எண்ணத்தை தூண்டிவிட்டன.


பொன்னியின் செல்வர் எங்கே?
இளவரசர் எங்கே?
ஈழம் கொண்ட வீராதி வீரர் எங்கே?
இளவரசருக்கு என்ன ஆச்சு?
இளவரசர் கடல்ல மூழ்கி இறந்து விட்டாராம்!
செய்தி கொண்டு வரும் வீரர்களுக்கு மக்கள் வழிவிடுகிறார்கள்.
செம்பியன் மாதேவி, முதன் மந்திரி அநிருத்த பிரம்மராயரும் அரண்மனையின் மேல் மாடத்துக்கு வருகிறார்கள். கட்டுக்கடங்காத கூட்டம் அரண்மனையின் முற்றத்தில் கூடியிருப்பது கண்டு அதிர்ச்சி அடைகிறார்கள்.


அமைதியாக இருங்கள்! செய்தி தாங்கியிடமிருந்து செய்தி என்னவென்று அறிவோம்.
செய்தி தாங்கி வந்தவன் அழுது கொண்டே லிகிதத்தை மகாராணி செம்பியன் மாதேவியிடம் கொடுகிறான்.
செய்தியை படிக்கும் செம்பியன் மாதேவியின் கண்கள் குளமாகிறது.
அதை கவனிக்கிறார் அநிருத்த பிரம்மராயர்.
மக்களும் செம்பியன் மாதேவியின் கண்ணீரைக் கண்டதும் மேலும் உணர்ச்சிக்குள்ளாகிறார்கள்.


அந்த செய்தியை (கடிதத்தை) முதன் மந்திரி அநிருத்தரிடம் கொடுக்கிறார் பெரிய பிராட்டி செம்பியன் மாதேவி.
சுந்தர சோழ சக்கரவர்த்திக்கு என்ன ஆயிற்று!
அந்த கூட்டத்தில் ஒருவன் முன்னால் வந்து...
அந்த படுபாவி பழுவேட்டரையர்கள் சதி செய்து இளவரசர் அருள்மொழியை கொன்றுவிட்டார்கள்.


அப்படி அவன் கூறியதும் பல பெண்கள் மயக்கம் போட்டு விழுகிறார்கள்.
ஆ.... இளவரசே! அந்த பாவிங்க உங்கள சூழ்ச்சி செய்து கொன்னுட்டாங்களா?
பழுவேட்டரையர் ஒழிக!
பழுவேட்டரையர் ஒழிக!


பழுவேட்டரையர் ஒழிக!
பழுவேட்டரையர் ஒழிக!
பழுவேட்டரையர் ஒழிக!
ஆகா! பழுவேட்டரையர்களை அல்லவா மலைபோல் நம்பியிருந்தேன். அவர்கள் பாடே திண்பாட்டம்தான் போலியிருக்கிறது.
மகாராணி! எங்களுக்கு உத்தரவிடுங்கள்...
அந்த பழுவேட்டரையர்களை அழித்து, சக்கரவர்த்தியை பழையாறைக்கு மீட்டு வருகிறோம்!


மகாராணி! நிலைமை கட்டுக்குள் இல்லை. உடனே இளைய பிராட்டி குந்தவையை எங்கிருந்தாலும் இங்கே வரச் சொல்லுங்கள்.
என்று முதன் மந்திரி யோசனை கூற....


திருமலை, நீ சென்று இளைய பிராட்டி குந்தவையிடம் நிலவரத்தை எடுத்து கூறி உடனே இங்கு அழைத்து வா!
ஆகட்டும் தாயே!


அனைவரும் கொஞ்சம் அமைதியாக இருங்கள். இளவரசர் பொன்னியின் செல்வருக்கு ஒன்றும் நேர்ந்திருக்காது என்று எனக்கு தோன்றுகிறது. இளவரசர் சிறு வயதில் பொன்னி நதியில் தவறி விழுந்த போது பொன்னித் தாய் அவரைக் காப்பாற்றியது போல, இப்போது சமுத்திர ராஜனும் காப்பாற்றியிருக்க வாய்ப்பிருக்கிறது. ஏனென்றால் அவர் ஜாதகம் அப்படி என்பது உங்களுக்கெல்லாம் தெரிந்ததுதான்.


பொன்னியின் செல்வர் எங்கே?
இளவரசர் எங்கே?
ஈழம் கொண்ட வீராதி வீரர் எங்கே?
இளவரசருக்கு என்ன ஆச்சு?
இளவரசர் கடல்ல மூழ்கி இறந்து விட்டாராம்!



எப்படியோ இளவரசிக்கு கொடுத்த வாக்கை காப்பாற்றிவிட்ட உற்சாகத்தில் இளைய பிராட்டி குந்தவையை வந்து சந்திக்கிறான் வந்தியத்தேவன்.
இளவரசரை சூடாமணி விஹாரத்தில் கொண்டு போய் சேர்த்துவிட்டு வந்த வரை, இளைய பிராட்டியிடம் கூறுகிறான்.
தாங்கள் எதற்காக தனியாக சென்று அண்டை நாட்டவர்களிடம் அகப்பட்டுக் கொண்டீர்கள்.
இளவரசி! நான் என்ன வேண்டும் என்றா எதிரிகள் இருக்கும் மரக்கலத்தில் சென்று ஏறினேன்.
அந்த மரக்கலத்தில் சோழநாட்டு கொடி பறந்தது. அதுதான் இளவரசர் பொன்னியின் செல்வரை கைது செய்ய வந்த மரக்கலம் என்று எண்ணி அதில் சென்று ஏறிவிட்டேன்.


அசந்திருந்த நேரம் பார்த்து சோழ நாட்டு வீரர்களை தாக்கி , அந்த மரக்கலத்தை அரபு நாட்டுக்கு கொண்டு செல்கிறார்கள் என்று.அதில் ஏறி பார்த்த பின்தான் தெரிந்தது
அவர்களால் தங்களுக்கு ஏதாவது ஆபத்து ஏற்பட்டிருந்தால்...
சோழ நாடு ஒரு வீரனை இழந்திருக்கும். அவ்வளவுதான் !


ஐயா! ஒரு பேதை பெண் தங்களுக்காக காத்திருப்பதையே மறந்துவிட்டீர்களா?
என்று கூறி வந்தியத்தேவனின் கையை குந்தவை பற்றியதும்...
வந்தியத்தேவனுக்கு ஒன்றும் புரியவில்லை.
யார்? சோழநாட்டின் செல்வ புதல்வியா! என் கைகளை பற்றியிருப்பது. ராஜாதி ராஜாக்கள் குந்தவை பிராட்டியை மணமுடிக்க காத்திருக்க, நாடு நகரமில்லாத இந்த ஏழை வீரனின் கைகளை பற்றினாள். என்ன நான் செய்த பாக்கியம்!


இளவரசி...! இளவரசி...!!
இளவரசர் பொன்னியின் செல்வர் கடலில் மூழ்கி மாண்டுவிட்டதாக செய்தி சோழ நாடெங்கும் பரவி, பழையாறை நகரமே கொந்தளிக்கிறது. தாங்கள் உடனே வந்தால் பெரிய விபரீதம் ஏதும் நடக்காமல் ஒரு வேளை தடுக்கலாம்!
அங்கே என் பாட்டி செம்பியன் மாதேவி இருக்கிறார்கள் அல்லவா?!


அவர்தான் தங்களை எங்கிருந்தாலும் உடனே அழைத்து வரும்படி என்னிடம் கூறினார்.
தாங்கள் முன்னே செல்லுங்கள், இதோ வந்துவிடுகிறேன்.


ஐயா! நான் கூறியதை தாங்கள் மனதில் வைத்துக் கொள்ளுங்கள். தங்கள் உயிர் தங்களுக்கு வேண்டுமானால் சாதாரணமாக இருக்கலாம். இனி என் பொருட்டாவது தாங்கள் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும்.


இளைய பிராட்டி குந்தவை, பழையாறை அரண்மனையின் மேல் மாடத்துக்கு வருகிறார். தன் கைகளை உயர்த்தி அமைதி காக்கும்படி கேட்கிறார்.
இளவரசி! பொன்னியின் செல்வர் எங்கே?
பழையாறை எங்கும் ஒரே அழுகுரல்..
என் அருமை தம்பி அருள்மொழிக்கு ஒன்றும் நேர்ந்திருக்காது! என் தந்தை சுந்தர சோழ சக்கரவர்த்தி....
இளம் பிராயத்தில் ஈழ நாட்டுக்கு, போருக்கு சென்றவர் எங்கு தேடியும் கிடைக்காமல், சில மாதங்கள் கழித்து உதயமானது போல் பொன்னியின் செல்வனும் இந்த கண்டத்திலிருந்து தப்பி பிழைத்து வருவான்.
இதற்கு மேலும் தங்களுக்கு எல்லாம் நம்பிக்கை உண்டாகவில்லை எனில்,


இதோ இருக்கும் நிமித்தக்காரனை வேண்டுமானாலும் கேட்கலாம்!
அப்போது அனைவரும் நிமித்தக்காரன் என்ன சொல்லப் போகிறான் என்று காத்திருக்க...
பினகாபாணி கூட்டத்தினரைப் பார்த்து..
இவன் ஒற்றன்! இளவரசரை கடலில் மூழ்கடித்துக் கொன்ற கொலைகாரன்.
அடே! யாரை கொலைகாரன் என்றாய்?
என்று மேலிருந்து பினகாபாணியின் மேல் பாய்கிறான் வந்தியத்தேவன். இருவரும் கட்டிப் பிடித்து சண்டை செய்கிறார்கள்.


அதை கவனித்துக் கொண்டிருந்த
முதன் மந்திரி.
அவர்களை கைது
செய்யுங்கள்!
என்று கட்டளையிட காவலர்கள் சண்டையை
தடுத்து இருவரையும் கைது செய்கிறார்கள்.
எத்தனை முறை எடுத்துச்
சொல்லியும் கேளாமல்
இப்படி சண்டையில்
இறங்கிவிட்டாரே!
பொது இடமாதலால் இளைய பிராட்டி,
வந்தியத்தேவனை கைது செய்ததைக் கண்டும்,
வந்தியத்தேவனுக்கு உதவ முடியவில்லை!
என்ன செய்வது இளவரசியின் நிலை அப்படி.


முதன் மந்திரியின் அரண்மனை முற்றம்.
ஐயா! தாங்கள் சொல்வதெல்லாம் உண்மையாகவே இருக்கலாம். ஆனால், அந்த வாணர்குல வீரன் பழுவூர் ராணியின் ஒற்றனாயிருப்பான் என்று மட்டும் என்னால் நம்ப முடியவில்லை. (குந்தவை)
நன்றாக யோசித்து பார்! அந்த பெண்ணிடம் ஏதோ மாயா மந்திர சக்தி இருக்கிறது. (அநிருத்தர்)
சிவ பக்தன் மதுராந்தகன், அவளுடைய வலையில் விழுந்து இராஜ்யத்தில் ஆசை கொண்டான்.
சம்புவராயரின் மகன் கந்தமாறன், அவளுடைய ஓலையை எடுத்துக் கொண்டு ஆதித்த கரிகாலனிடம் சென்றிருக்கிறான். பழுவேட்டரையர்களின் பரம விரோதி பார்த்திபேந்திரன் பழுவூர் ராணியின் அடிமை ஆகிவிட்டான்.
சோழ இராஜ்யத்தை இரண்டாகப் பிரித்து மதுராந்தகனுக்கு ஒரு பகுதியும், ஆதித்த கரிகாலனுக்கு ஒரு பகுதியும் கொடுத்து சமாதானம் செய்து வைக்கவும் முன் வந்திருக்கிறான். (அநிருத்தர்)


இது என்ன அக்கிரமம்? இராஜ்யத்தை இரண்டாகப் பிரிப்பதாவது!
இராஜ்யத்தை பிரிப்பதை நீ விரும்பமாட்டாய். நானும் விரும்பமாட்டேன். தாயே பத்து நாட்களுக்கு முன் இந்த யோசனையை பார்த்திபேந்திரனிடம் யாரேனும் சொல்லியிருந்தால் கொதித்து எழுந்திருப்பான்.
இது என்ன விந்தை! அந்த பழுவூர் ராணியிடம் அப்படிப்பட்ட மாயசக்தி என்ன இருக்கிறது?!
அதுதான் எனக்கும் புரியவில்லை! அது போகட்டும் அந்த வாணர்குலத்து வீரன் மட்டும் எப்படி நந்தினியின் மாயவலையில் வீழ்ந்திருக்க மாட்டான் என்று, எப்படி நம்புவது?


ஐயா! காரணம் கேட்டால் எனக்கு சொல்லத் தெரியாது. மனதுக்கு மனதே சாட்சி! வாணர்குல வீரன் அத்தகைய துரோகம் செய்ய மாட்டான்.
அப்படியானால் அதை பரீட்சித்துப் பார்த்துவிடலாம். காஞ்சிக்கு ஒரு தூதனை அனுப்பியாக வேண்டும். ஆதித்த கரிகாலனுக்கு மிக நம்பிக்கையான ஆளிடம் ஓலை கொடுத்து அனுப்ப வேண்டும்.
உன் தமையன் ஆதித்த கரிகாலனை, கடம்பூர் அரண்மனைக்கு அழைக்கும்படி சம்புவராயரை தூண்டியிருக்கிறாள் பழுவூர் இளையராணி. சம்புவராயர் மகள் ஒருத்தியையும், பழுவேட்டரையர் குமாரி ஒருத்தியையும் கரிகாலனுக்கு மணம் செய்விப்பது பற்றி பேசி வருகிறார்கள்.


அதைப் பற்றி பேச இவர்கள் யார்?
இவையெல்லாம் வெளிப்படையான பேச்சு. ஆனால் அவளுடைய அந்தரங்கத்தில் உள்ள நோக்கத்தை யார் அறிவது?
அவள் ஒரு விஷ நாகம்!
என்று கூற வந்து பாதியில் நிறுத்திவிடுகிறாள்.


உண்மையில் அவள் விஷ நாகத்தைவிட கொடியவள். இந்த சோழ குலத்தை பூண்டோடு அழித்துவிட அவள் திட்டமிட்டிருக்கிறாள்.


ஐயா! தாங்கள் யோசனை கூறியபடியே அவரை (வந்தியத்தேவனை) உடனே காஞ்சிக்கு அனுப்புவோம்.


இறுதியில் வந்தியத்தேவனின் விடுதலைக்கு போராடி, விடுதலைக்கான உத்தரவை முதன் மந்திரியிடமிருந்து பெற்று செல்கிறாள் குந்தவை.


குந்தவை, வந்தியத்தேவனை விடுவிக்க சிறைச்சாலைக்கு வருகிறார்.
நல்ல ஆளைப் பார்த்து எனக்கு வழித்துணைக்கு அனுப்பினீர்கள்!
நீர் மட்டும் என்ன? நான் தங்களை எவ்வளவு ஜாக்கிரதை செய்தேன். அந்த வைத்தியர் மகனிடம் தாங்கள் சண்டை பிடிக்காமல் இருந்திருக்கலாம் அல்லவா!
என்னை ஒற்றன் என்றதோடு அவன் நிறுத்தியிருந்தாலும் கூட நான் அவனை சும்மா விட்டிருப்பேன். இளவரசரை கடலில் மூழ்கடித்து கொன்ற கொலைகாரன் என்றல்லவா என் மீது குற்றம் சாட்டினான். அவனை எப்படி சும்மாவிடுவது?


ஆதித்த கரிகாலர் கடம்பூர் வருவதை தடுக்க, வந்தியத்தேவனை காஞ்சிக்கு அனுப்பிவிட்டு, சூடாமணி விஹாரத்தில் குளிர் சுரத்தில் பாதிக்கப்பட்டு இருக்கும் அருள்மொழியை சந்திக்க இளைய பிராட்டி குந்தவையும், வானதியும் வருகின்றனர். சூடாமணி விஹாரத்தின் உள்ளே பெண்களுக்கு அனுமதி இல்லையென்பதால், ஆனை மங்கலம் அரண்மனையில் உள்ள நந்தி மண்டபத்திற்கு இளவரசரை வரவழைக்கின்றனர்.
நந்தி மண்டபம் அருகில் படித்துறையில் சேந்தன் அமுதனும், பூங்குழலியும் இளவரசருக்காக படகில் காத்திருக்கிறார்கள்.
தம்பி! இலங்கையில் பைத்தியக்காரியை போல் திரியும் நம் பெரியம்மாவை நினைத்து நீ நெஞ்சம் குமுறுவதாகச் சொன்னாய். அரண்மனையில் சகல சுக போகங்களுடன் வாழ்ந்திருக்க வேண்டிய நந்தினி, எப்படியெல்லாம் வாழ்க்கையில் கஷ்டப்பட்டாள் என்பதை நினைக்கும் போது என் இதயம் பிளந்து போதும் போலிருக்கிறது. யாரோ எப்பொழுதோ செய்த தவறுகளின் காரணமாக எனக்கு முன் பிறந்த தமக்கை அந்த கிழவரை மணக்க நேர்ந்துவிட்டதே! (குந்தவை)


அக்கா! இதெல்லாம் எப்படி நேர்ந்திருக்கும் என்று? நான் இரவும் பகலும் யோசித்து வருகிறேன். நம் பெரியம்மா இறந்துவிட்டதாக தந்தை எண்ணுவதற்கு காரணம் என்ன? நந்தினி அநாதையைப் போல எங்கேயோ, யார் வீட்டிலோ வளர்ந்து, இந்த நிலைமைக்கு வருவதற்கு காரணம் என்ன?


தம்பி! அதையெல்லாம் கண்டுபிடிப்பதற்கு இப்போது அவசரம் இல்லை. நம் குலத்துக்கு நந்தினியினால் ஏதும் விபரீதம் ஏற்படாமல் தடுப்பதுதான் முக்கியம். தான் பிறந்த குலம் சோழ குலம் என்பதை அறியாமல் பழுவூர் ராணி ஏதாவது செய்துவிடப் போகிறாளோ என்றுதான் கவலையாயிருக்கிறது.


பழுவூர் ராணியிடம் எல்லாவற்றையும் சொல்லிவிட்டால் என்ன?
அவளுக்கே தன் பிறப்பை குறித்து சந்தேகம் இருக்கிறது. ஒரு நாள்....
இளைய பிராட்டி, நந்தினியை பற்றி தனக்கு தெரிந்தவற்றை எல்லாம் தனது தம்பியிடம் கூறுகிறாள்.
அத்தான்! அந்த அரண்மனை சீமாட்டியின் நன்றி இங்கே யாருக்கு வேண்டும்? அவளே வைத்துக் கொள்ளட்டும். அத்தான் இளவரசரை படகில் ஏற்றிக் கொண்டு திரும்ப புத்த விஹாரத்துக்கு போக வேண்டுமாயிருந்தால், நீ மட்டும் படகை செலுத்திக் கொண்டு போ. (பூங்குழலி)
ஏன்? நீ என்னுடன் வர மாட்டாயோ! (சேந்தன்)
நான் வந்தால், ஒரு வேளை வேண்டுமென்றே படகை கவிழ்த்தாலும், கவிழ்த்து விடுவேன்.


நீ ஒரு நாளும் அப்படி செய்ய வேண்டாம். சரி, இளவரசர் என்ன குற்றம் செய்தார்? அவர் ஏறியுள்ள படகை நீ கவிழ்ப்பதற்கு...
என் அத்தைக்கு இவர் தந்தை செய்த துரோகத்தை நினைத்தால்....
நீயே படகை விட்டுக் கொண்டு போ!
அப்படியே ஆகட்டும்! நானே இளவரசரை கொண்டு போய் விட்டு விடுகிறேன். நீ இங்கு என்ன செய்யப் போகிறாய்?
நான் அந்த கொடும்பாளூர் இளவரசி தலையில் கல்லை தூக்கி போடப் போகிறேன்.
விஷயம் என்னவென்று புரிகிறது அல்லவா? இளைய பிராட்டி, வானதியிடம் காட்டிய நெருக்கம்தான்.
மேலும், காற்று வழியாக வந்த செய்தியான பொன்னியின் செல்வருக்கு வானதியை மணம் செய்யப் போவதாகவும்! அது மட்டுமில்லாது, வானதியின் பெரிய தந்தை இலங்கையில் இவளிடம் சொன்ன வார்த்தை, இவையெல்லாம் சேர்ந்துதான் பூங்குழலிக்கு வானதியின் மீது கோபமாக மாறி இருக்கிறது.


அக்கா! இவ்வளவு பெரிய பீடிகை எதற்கு? நீ சொல்வதை என்றைக்காவது நான் மறுத்ததுண்டா?
மறுத்ததில்லை. அந்த நம்பிக்கையோடுதான் இப்போதும் கேட்கிறேன். ஆதித்த கரிகாலர் கலியாணம் செய்து கொள்ளவில்லை. கலியாணம் செய்து கொள்வான் என்றும் தோன்றவில்லை. சுந்தர சோழரின் குலம் உன்னால்தான் விளங்க வேண்டும். என் விருப்பத்தை இந்த விஷயத்தில் நீ நிறைவேற்றி வைக்க வேண்டும்.


உன் விருப்பத்தை நிறைவேற்ற நான் சம்மதித்தால் எனக்கு பிரியமான பெண்ணை மணந்து கொள்ள நீ சம்மதம் கொடுப்பாய் அல்லவா?
என்ன தம்பி! இப்படி கேட்கிறாய்? இருபது ஆண்டுகளாக நம் விருப்பங்கள் மாறுபட்டதில்லை. இதிலே மட்டும் தனியாக எதற்குச் சம்மதம் கேட்கிறாய்?


இளவரசரின் மனதில் பூங்குழலி இடம் பெற்றதாலும், ஆனால் குந்தவைக்கு கொடும்பாளூர் வானதியை அருள்மொழிக்கு மணம் முடிக்கும் திட்டம் இருப்பதாலும், இரண்டு பேருமே அவரவர் மற்றவரின் வாக்குறுதியை வாங்க முயல்கின்றனர்.
யாருக்கு யார்? வாக்குறுதி அளித்தார்கள் என்று அங்கிருக்கும் வானதியின் காதில் ஒருவேளை விழுந்திருந்தாலும் விழுந்திருக்கலாம்.


மேலும், பொன்னியின் செல்வரை இன்னும் சில காலம் சூடாமணி விஹாரத்திலே இருக்க வேண்டுமென்றும், இப்போது பொன்னியின் செல்வர் வெளிப்பட்டால் அதனால் பல விபரீதங்கள் ஏற்படும் என்று கூறி அங்கிருந்து விடை பெற்றுக் கொண்டு தஞ்சை திரும்புகின்றனர் குந்தவையும், வானதியும்.


நடுக்காட்டில், அதுவும் நடு ராத்திரியில் ஒரே கொண்டாட்டம்! அந்த இசையில் சோகம், சந்தோசம், வீரம் இப்படி பல விதமான உணர்வுகளைத் தூண்டும்படி பாடியும், ஆடியும், இசைத்தும் கொண்டாடுகிறார்கள்.
உறுமி மேளம் வாசிக்க ரவிதாசன் சாமி வந்தவன் போல பேயாட்டம் ஆடுகிறான்.
ஆமாம்! அந்த மேடையின் மேல் உள்ள சிம்மாசனத்தில் அமர்ந்திருக்கும் குழந்தை! அது யாருடைய குழந்தை?


உறுமி இசையுடனே ரவிதாசனும் உறும்புகிறான்.
ம்... ம்...
ஓம், க்ரீம், க்ராம், ஹ்ராம்
என்று மந்திரத்தை உச்சாடனம் செய்கிறான்.
யார் கண்டது, அது மந்திரம் தானோ அல்லது சும்மா மற்றவர்களை தன் கட்டுப்பாட்டில் வைக்க இப்படி செய்கிறானோ!


மந்திரவாதி, தான் கொண்டு வந்த வாளை தன் கண்ணில் ஒற்றிக் கொள்கிறான்.


அந்த குழந்தை மந்திரவாதியின் செய்கையையே உற்றுப் பார்க்கிறது. ஒரு வேளை மந்திரவாதி பரிட்சயமானவனாக இருக்கலாம்.


அந்த மீன் சின்னம் பொறிக்கப்பட்ட வாளில் தன் கை கட்ட விரலை சிறியதாக கீறி.....


அந்த குழந்தைக்கு வீரத் திலகமிடுகிறான்.
வருங்கால சக்கரவர்த்தி வாழ்க!
வருங்கால சக்கரவர்த்தி வாழ்க!
சக்கரவர்த்தி இதை பெற்றுக் கொள்ளுங்கள். உங்களுக்கு இந்த வாளை யாரிடம் கொடுக்க தோன்றுகிறதோ அவரிடம் இதை கொடுங்கள். இதை பிடியுங்கள்.
வருங்கால சக்கரவர்த்தி வாழ்க!
குமரா! அதை பெற்றுக் கொள். (நந்தினி)


மீன் எப்படி புலியை விழுங்கும்? என்று நீ இன்னும் சொல்லவில்லையே.
அந்த வாள் உன்னிடம் இருந்தால் புலி என்ன, யானையையே விழுங்கிவிடலாம்.
அந்த வாளை முதலில் பெற்றுக் கொள்.
உனக்கு யாரை பிடித்திருக்கிறதோ, யாரிடம் உனக்கு கொடுக்கத் தோன்றுகிறதோ அதை அவரிடம் கொடு! புரிகிறதா?
அனைவரும் வட்ட வடிவமாக அமருங்கள். (ரவிதாசன்)


குழந்தை, மீன் சின்னம் பொறிக்கப்பட்டிருந்த அந்த வாளை பெற்றுக் கொண்டு படி இறங்கி வருகிறது.
புலியை விழுங்க வந்த மீன்! மகர மீன்! வாழ்க!!


புலியை விழுங்க வந்த மீனா!
அட! இந்த குட்டி மீனை வைத்துக் கொண்டா, அந்த புலிக்கூட்டத்திடம் மோத திட்டமிட்டிருக்கிறார்கள்!?
இந்த பழுவூர் இளையராணி, தான் யார் என்று தெரியாமல் இப்படி தன் குலத்தை அழிக்க, தானே எதிரிகளுக்கு உடந்தையாக இருக்கிறாளே! இவளிடம் எப்படி நாம் எடுத்துக் கூறுவது.


பாண்டிய நாட்டு ஆபத்துதவிகள் தங்கள் கைகளை நீட்டி காத்திருக்கிறார்கள்.
குழந்தை ஒவ்வொருவராக பார்த்துக் கொண்டு வருகிறது.
சக்கரவர்த்தி அதை என்னிடம் கொடுங்கள். என்னிடம் கொடுங்கள். என்று ஒவ்வொரு ஆபத்துதவியும் குழந்தையிடம் கெஞ்சுகிறார்கள்.


குழந்தை அந்த வாளை யாரிடம் கொடுக்கலாம் என்று எண்ணியபடி ஒவ்வொருவரின் முகத்தையும் பார்த்தப்படியே வருகிறது.
அம்மா! உன்னைதான் எனக்கு மிகவும் பிடித்திருக்கிறது.
குழந்தை கொடுத்த வாளை வணங்கி பெற்றுக் கொள்கிறாள் நந்தினி.


அம்மாவா!? இது என்ன புதிய குழப்பம்?


தேவி! குழந்தை நமது திட்டத்தை சரியாக புரிந்து கொள்ளவில்லை. அதனால் மீண்டும் ஒரு முறை...
ஐயா! என் குமரன் எல்லாம் புரிந்துதான் என்னிடம் தந்திருக்கிறான்.


கர்ணன் எப்படி அர்ச்சுனனைக் கொல்ல நாகாஸ்திரத்திற்கு பால் வார்த்து பூஜித்து வந்தானோ, நானும் அப்படித்தான் நான்கு ஆண்டுகள் இந்த வாளுக்கு பூஜை செய்து கரிகாலரை பழி தீர்க்க காத்திருக்கிறேன். இந்த வாள் சரியான இடத்தில்தான் வந்து சேர்ந்திருக்கிறது.


இவ்வளவு வஞ்சம் வைத்திருப்பவளிடம் நாம் எப்படி சொல்லி புரிய வைப்பது! இளைய பிராட்டி கூறியது சரிதான். நாம் காலம் தாழ்த்தாமல் உடனே ஆதித்த கரிகாலரை சந்தித்து அவரை கடம்பூர் வராமல் தடுக்க வேண்டும்.


நல்லா வசமா மாட்டிக் கொண்டாயா? இம்முறை உன்னை உயிரோடு விடப் போவதில்லை!
பின்னால் வந்த பாண்டிய நாட்டு காவலர்கள் வந்தியத்தேவனை ஒரே அழுத்தாக அழுத்திவிடுகிறார்கள்.


வந்தியத்தேவனை பிடித்து ஒரு பனை மரத்தில் வைத்து கட்டிவிடுகிறார்கள்.
தேவி! இவனுக்கு நம் திட்டம் தெரிந்துவிட்டது. இவனை இம்முறை விடுவது நம் காரியத்துக்கு தடையாகிவிடும். அதனால் இவனை தீர்த்துக்கட்டிவிட்டு அதன் பின் இவன் எஜமானையும் தீர்த்துக் கட்டிவிடலாம்.
அவரின் மேல் சுண்டு விரல் கூடப் படக்கூடாது. ஜாக்கிரதை! அவரை அப்படியே விட்டு, விட்டு புறப்படுங்கள்.


ரவிதாசனும் நந்தினியும் சிறிது தூரம் சென்று அவர்களுக்குள் பேசுகிறார்கள். அப்போது,
ராணி! அவன் இப்போது எங்கு போய் கொண்டிருக்கிறான் என்று உமக்கு தெரியுமா?
தெரியும் மந்திரவாதி! தெரியும்! கரிகாலரை கடம்பூர் மாளிகைக்கு வர வேண்டாம் என்று தடுப்பதற்கு. சரிதானே!


அப்படி நடந்து விட்டால் நம் திட்டமெல்லாம் என்ன ஆவது?
மந்திரவாதி! கரிகாலரின் இயல்பை நீர் அறியவில்லை. இவன் போய் அவரை வரவிடாமல் தடுக்க, தடுக்கத்தான் அதை மீறி அவர் கடம்பூர் வருவார். அதுதான் கரிகாலரின் இயல்பு.
அங்கிருந்து அனைவரும் சென்று விடுகிறார்கள். அவர்கள் பேசியது வந்தியத்தேவனின காதில் மெல்லியதாக கேட்டது.
அட கடவுளே! தன் சொந்த சகோதரியைக் காட்டிலும் இவள் கரிகாலரை சரியாக புரிந்து வைத்திருக்கிறாளே!
வந்தியத்தேவனை நரிகள் ஊளையிட்டபடி சுற்றி வளைக்கின்றன.


வந்தியத்தேவனும், ஆழ்வார்க்கடியானும் யார் கண்ணிலும் படாமல் இரவு தங்க, கடம்பூர் அரண்மனையின் பின்னால் அமைந்திருக்கும் மூங்கில் காட்டில் உள்ள அய்யனார் கோயில் மண்டபத்திற்கு வந்திருக்கிறார்கள். ஆழ்வார்க்கடியான் மாறுவேடம் பூண்டிருக்கிறான்.


நீர் வந்து என்னை காப்பாற்றவில்லை என்றால், நான் தப்பி வந்திருக்க மாட்டேன் என்றுதானே சொல்ல வருகிறீர்? (வந்திய)


அது எப்படி நான் சொல்ல முடியும். நீதான் மகா சூரனாயிற்றே!
அப்போது அய்யனார் கோயிலின் அருகில் இருக்கும் மண் குதிரை நகர்கிறது.
அதன் உராய்வு சத்தம் கேட்டு இருவரும் திரும்பிப் பார்க்கிறார்கள்.
அட! மண் குதிரை அசைகிறதே!!


குதிரை நகர்ந்த இடத்திலிருந்து ஒரு மனிதன் வெளியில் எட்டிப் பார்க்கிறான்.
யாரும் இல்லை என்பதை உறுதிபடுத்திக் கொண்டு, அதிலிருந்து வெளியில் வந்து மீண்டும் பழையபடி குதிரையை நகர்த்தி வைத்துவிட்டு, நேரே அய்யனார் கோயிலை நோக்கி வருகிறான்.
இவனை எங்கோ பார்த்தது போல் இருக்கிறதே?!
இரும்பன்காரிதானே அவன்!


அவன் வருவதை கண்டு இருவரும் கோயிலின் பக்கவாட்டு சுவரில் மறைந்து கொள்கின்றனர்.
இவன் எதற்காக இந்த கோயிலின் விளக்கை ஏற்றுகிறான்? அய்யனாருக்கு தினமும் விளக்கு ஏற்றுவதாக வேண்டியிருப்பானோ!
ரகசிய வழியில் வந்து விளக்கேற்றுவதை பார்த்தால், வேண்டுதல் போலவும் தோன்றவில்லை!




இரும்பன்காரி சென்று மறையும் வரை காத்திருந்த வந்தியத்தேவன், இரும்பன்காரி சென்ற பிறகு, அவன் வந்த துவாரத்தின் வழியாக செல்கிறான். அதற்கு ஆழ்வார்க்கடியானை வெளியில் காவலுக்கு நிறுத்திவிட்டு செல்கிறான். வந்த வேலையை விட்டு பூந்தகாலை பிடிப்பது என்பார்களே அது போலத்தான் இருக்கிறது வந்தியத்தேவன் செய்யும் இந்த செயல். ஆபத்தை எதிர் நோக்குவது ஒன்றும் புதிதில்லையே நம் வந்தியத்தேவனுக்கு.


கெடிலம் நதிக்கரை
ஆதித்த கரிகாலர், கடம்பூர் புறப்பட்டுவிட்டார். பாட்டன் மலையமான் ரதத்தில் வர நண்பர்களுடன் குதிரையில் வருகிறார் ஆதித்த கரிகாலர்.


மலையமான் சமிக்ஞை செய்ய கரிகாலன் குதிரையை திருப்பி, அவர் ரதத்தை நோக்கி செல்கிறான்.




குழந்தாய் கரிகாலா! நான் இவ்விடத்தில் உன்னிடம் விடை பெற்றுக் கொண்டு திருக்கோவலூர் போக எண்ணுகிறேன். போவதற்கு முன்னால் உன்னிடம் சில முக்கிய விஷயங்கள் சொல்ல வேண்டும்.
பார்த்திபேந்திரனும், கந்தமாறனும்...
நல்ல வேலையாக போயிற்று! எங்கே இந்த கிழவர் விடேன், தொடேன் என்று நம்முடன் நெடுகிலும் வந்து விடுவாரோ என்று பயந்தேன்.
ஹா..ஹா..
அப்படி தொடர்ந்து வந்தால் அந்த கிழவரை வெள்ளாற்றின் பிரவாகத்தில் தள்ளி மூழ்கடித்து விடுவது என்று நான் எண்ணியிருந்தேன்.
ஹா..ஹா..


பேரனை மட்டும் தனியா அழைத்து ஏதோ கூறுகிறார் பார்த்தாயா?
இந்த பேரன் என்றால் மலையமானுக்கு உசுரு இல்லையா!
கரிகாலர் பிறந்த போது பார்த்திருக்கணுமே! திருக்கோவலூரில் என்ன விருந்து! என்ன விழா! அந்த மாதிரி ஒரு கொண்டாட்டத்தை என் வாழ் நாள்ல பார்த்ததில்ல.
அவசியம் நீ கடம்பூர் போகத்தான் வேண்டுமா?
அதைப் பற்றி இன்னும் என்ன சந்தேகம் தாத்தா? பாதி வழிக்கு மேல் வந்தாகிவிட்டதே!


ஆம்! பாதி வழிக்கு மேல் வந்தாகிவிட்டது. நானும் முதலில் உன்னை போக வேண்டாம் என்றேன். அப்புறம் போகும்படி சொன்னேன். உன் தம்பியை பற்றிய செய்தி கேட்ட பிறகு நீ போவதே நல்லது என்று நினைத்தேன்.
உன் தந்தையை போல் அருள்மொழியும் ஏதேனும் ஒரு தீவில் ஒதுங்கியிருப்பான். சில நாளைக்கெல்லாம் வந்து சேருவான்.
நானும் அப்படித்தான் எண்ணுகிறேன்!
குழந்தாய்! நான் சொல்வதை நன்றாக உள் வாங்கிக் கொள். எதிரிகளின் தொழுத கையிலும், அழுத கண்ணீரிலும் கொடிய ஆயுதம் இருக்கக் கூடும்.
தொழுகை யுள்ளும் படையொடுங்கும் ஒன்னார் அழுதகண் ணீரும் அனைத்து.
என்று கூறியிருக்கிறார் திருவள்ளுவர் பெருமான்.


தாத்தா! எனக்காக அவ்வளவு தூரம் நீங்கள் பயப்படுகிறீர்கள்? என்னை அவ்வளவு கையாலாகாதவன் என்று எண்ணி விட்டீர்களா?
இல்லை குழந்தாய்! நீ எத்தகைய வீராதி வீரன் என்பது எனக்கு தெரியாதா? கொடிய ஆயுதங்களை ஏந்திய பதினாராயிரம் பகைவர்களின் நடுவில், நான் உன்னை தன்னந்தனியாக நம்பி அனுப்புவேன். ஆனால், கண்ணீர் பெருக்கி உன் மனதை கலங்கச் செய்யக் கூடிய ஒரு பெண்ணின் முன்னால் உன்னை தனியாக அனுப்புவதற்குத்தான் பயப்படுகிறேன்.
குழந்தாய்! ஒன்றை மனதில் வைத்துக் கொள். உன் முப்பாட்டான் பராந்தக சக்கரவர்த்தி ஏழு பெண்களை மணந்து கொண்டார். அவரை போல நீயும் மணந்து கொள். ஆனால், பெரிய பழுவேட்டரையன் மணந்து கொண்ட மாய மோகினியை கண்ணெடுத்தும் பாராதே!


மன்னிக்க வேண்டும் தாத்தா! அந்த மாதிரி குற்றம் ஒன்றும் நான் செய்ய மாட்டேன். சோழ குலத்துக்கும், மலையமான் குலத்துக்கும் களங்கம் உண்டு பண்ண மாட்டேன்.
ம்... சரி புறப்படு!
எது எப்படியானாலும் நான் உடனே திருக்கோவலூருக்குச் சென்று, என்னுடைய பாதுகாப்பு படைகளையெல்லாம் திரட்டிக் கொண்டு வந்து, வெள்ளாற்றங் கரையில் தங்கியிருப்பேன். சம்புவரையர் அரண்மனையில் இருக்கும் போது உனக்கு ஏதேனும் சந்தேகம் தோன்றினால் எனக்கு உடனே சொல்லி அனுப்பு.
கரிகாலர் முகம் பார்க்க வாட்டமாக இல்லை?
இருக்காதா பின்னே. தம்பியை பறி கொடுத்தா முகம் வாட்டமா இல்லாம, எப்படி இருக்கும்?
காரணம் அது மட்டுமில்லை. இது வேறு விஷயம்!


கடம்பூர் வீதி வழியாக கரிகாலரும் மற்றும் நண்பர்களும் வருகிறார்கள். இவர்களுடன் ஒரு குதிரையில் ஆழ்வார்க்கடியானும் வருகிறான். மக்கள் ஆதித்த கரிகாலரை பார்க்கும் ஆவலில் காலையிலிருந்து காத்திருக்கிறார்கள்.
மாவீரர் கரிகாலர் வாழ்க!
மாவீரர் கரிகாலர் வாழ்க!
இளவரசர் ஆதித்த கரிகாலர் வாழ்க!
வீரபாண்டியன் தலை கொண்ட மாவீரர் கரிகாலர் வாழ்க!
கரிகாலர் போன்ற வீரர் நம்ம இளவரசிக்கு கிடைக்க நாம கொடுத்து வைச்சிருக்கனும்.


மாவீரர் ஆதித்த கரிகாலர் வாழ்க!
மாவீரர் ஆதித்த கரிகாலர் வாழ்க!
கரிகாலனும் அவருடன் வந்த நண்பர்களும் கடம்பூர் கோட்டை வாயிலை நெருங்கி விட்டார்கள்.
அவர்களை மாளிகையின் மேல் மாடத்திலிருந்து பெண்கள் மலர் தூவி வரவேற்கிறார்கள்.
தொடரும்...

# அருஞ்சொற்பொருள்

| | | |
|---|---|---|
| சாஸனம் | - | ஒரு நாடு அல்லது அமைப்பின் சட்ட திட்டங்கள் நிருவாக நெறிமுறைகள் போன்றவற்றை விளக்கி பட்டியலிடும் ஆவணம் (Documents) |
| வைபவம் | - | திருவிழா (Festival) |
| ஓதுவார்கள் | - | வழிபாட்டு பாடல்களைப் பாடுபவர்கள் |
| ஒற்றன் | - | உளவு அறிந்து வருபவன் (Spy) |
| இறுமாப்பு | - | அகந்தை, கர்வம் (Pride) |
| உபசாரங்கள் | - | பணிவிடை (Caring) |
| திரவியங்கள் | - | வாசனை பொருள் (Perfumes) |
| அங்கம் | - | உடல் |
| ஆதுரசாலை | - | வைத்தியசாலை |
| இந்திரஜித்தன் | - | அனைத்தையும் சாதிக்கக் கூடியவன் |
| இராஜாதித்தர் | - | பெருமைமிக்க சோழ மன்னர் |
| துஞ்சிய காட்சி | - | உயிர் நீத்த காட்சி |
| உக்கிரம் | - | உச்ச கட்டம் |
| தேசப் பிரஷ்டம் | - | நாட்டைவிட்டு ஒதுக்கி வைப்பது |
| நிருபம் | - | கடிதம் |
| அபாக்கியவதி | - | அருள் கிடைக்காதவள் |
| இலஞ்சின்னம் | - | முத்திரை மோதிரம் (Symbol) |
| ஸ்தூபிகள் | - | தூண்கள் (Pillars) |
| பெரஹெராத் திருவிழா | - | இலங்கையின் ஒரு பாரம்பரியத் திருவிழா (Festival) |
| கஜபாகு | - | இலங்கையை ஆண்ட மன்னன் |

## அருஞ்சொற்பொருள்

| | | |
|---|---|---|
| சேரன் செங்குட்டுவன் | - | தமிழ் நாட்டை ஆண்ட மன்னன் |
| அநிருத்தர் | - | சோழ நாட்டின் முதன்மை மந்திரி |
| உசிதம் | - | பொருத்தமானது |
| வைதுல்ய | - | புத்த சங்கங்களில் ஒரு பிரிவு |
| மகா போதி விஹாரம் | - | புத்த குருக்கள் பாடம் நடத்தும் இடம் |
| புத்த விஹாரம் | - | புத்த பிக்ஷுகள் தங்கும் இடம் |
| கலியுகம் | - | இப்பொழுது நாம் வாழும் நூற்றாண்டுகள் / உலகம் |
| கப்பலோட்டி, மாலுமி, கலபதி | - | இந்த மூன்று சொல்லும் ஒரே செயலை குறிக்கிறது. |
| கப்பல், நாவாய், மரக்கலம் | - | இந்த மூன்று சொல்லும் ஒரே பொருளைக் குறிக்கிறது |
| கோட்டான் | - | ஆந்தை இனத்தை சேர்ந்த ஒரு வகை பறவை |
| காலாந்தகன் | - | சின்ன பழுவேட்டரையரின் பெயர் |
| வலைஞன் | - | வலை போட்டு மீன் பிடிப்பவன் |
| பிக்ஷு | - | புத்த குரு |
| வேலை தீர்த்திடுவோம் | - | கொன்று விடுவோம் |
| ஜலசமாதி | - | தண்ணீரில் உயிர் நீத்தல் |
| பாட்டன் | - | தந்தையுடைய தந்தை |
| பூட்டன் | - | பாட்டனுடைய தந்தை |
| துவந்த யுத்தம் | - | இரண்டு நபர்கள் மட்டும் செய்து கொள்ளும் யுத்தம் |
| பிளறியது | - | அலறியது |
| சேனாதிபதி பூதிவிக்கிரம கேசரி | - | தளபதி |

# அருஞ்சொற்பொருள்

| | | |
|---|---|---|
| நாத்தியா | - | கணவரின் தங்கை |
| உறைவாள் | - | Weapon / கத்தி |
| உறைக்குள் | - | Pouch to keep the weapon |
| மனோரதம் | - | கனவுகள் |
| நாகைப்பட்டினம் | - | தமிழ்நாட்டில் உள்ள கடலோர நகரம் |
| சூடாமணி விஹாரம் | - | புத்த கோயில் |
| மன்மதன் | - | அழகிற்கு பெயர் போனவன் |
| பண்டாரம் | - | ஏழை கலைஞன் |
| நிமித்தம் | - | சகுனம் / அறிகுறி |
| துர்போதனை | - | தவறான ஆலோசனை |
| அபிமானம் | - | அன்பு |
| சிவபதம் | - | ஒருவர் இறந்த பின் சிவனை சென்றடைவதாக அர்த்தம் |
| அரக்கி | - | கருமையானவள் |
| துர்நோக்கம் | - | கெட்ட நோக்கம் |
| லிகிதம் | - | கடிதம் |
| தொழுத கை | - | வணங்கிய கை |
| மண்டலம் | - | சோழ அரசின் மிகப் பெரிய பிராந்தியப் பிரிவு ஆகும். சோழ நாடு அதன் உச்சத்தின்போது, அதன் ஆட்சி பகுதிகளை ஒன்பது மண்டலங்களாக பிரித்திருந்தது. |
| வல்வில் ஓரி | - | கடையேழு வள்ளல்களில் ஒருவன். அவன் கொல்லி மலையை ஆண்ட மன்னன். |